பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 05 சனிக்கிழமை (21.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 360

# எதிர்க்கட்சிகள் விரிக்கும் வலையில்

# சரத் பொன்சேகா சிக்கவேமாட்டார்

## அடித்துச் சொல்கிறது அரச தரப்பு

கொழும்பு, நவம்பர் 21

**இந்த நாட்டுக்கும் அரசுக்கும் எதிராக சர்வதேசமும் எதிர்க்கட்சிகளும் விரிக்கும் சதிவலையில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, ஜனாதிபதி பொதுவேட்பாளராகச் சிக்கவேமாட்டார் என்று அரச தரப்பில் உறுதியாக - அடித்துச் சொல்லப்படுகிறது.**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டளஸ் அழகபெரும இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பழம்பெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியும், ஜே.வி.பியும் தங்கள் கட்சிகளின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்ய முடியாதளவுக்குப் பலவீனமடைந்துள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் - I, விஞ்ஞானம் II பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

### அமெரிக்கத் தூதுவருடன் பொன்சேகா பேச்சு

கொழும்பு, நவ. 21.

படைகளின் பிரதான அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுப் பிற்பகல் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் பற்றிக்கா பட்டீன் அம்மையாரைச் சந்தித்து சரத் பொன்சேகா நடத்திய பேச்சின் போது பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் வெளியாகவில்லை.

அண்மையில் பொன்சேகா அமெரிக்கா சென்றிருந்த வேளை, உள்நாட்டு அமைச்சுக்கு அவர் அழைக்கப்பட்ட போதும், அதைத் தவிர்த்து இலங்கை திரும்பிய சூழ்நிலையில் இந்தப் பேச்சு இடம்பெற்றுள்ளமை, வித்தியாசமாக நோக்கப்படுகிறது. (அ-1)

### தேர்தல் குறித்து திங்களன்று அறிவிப்பாம்

கொழும்பு, நவ. 21

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை நாளை மறுதினம் திங்கட்கிழமை சுபநேரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கவிருக்கிறார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை அமைச்சர் மைத்திரிபாலா சிறிசேனா அறிவித்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மாநாட்டில் பங்குபற்றிய மக்களின் விருப்பப்படியே தேர்தல் நடத்தப்படவிருக்கிறது என்றும் அவர் கூறினார். (அ-1)

## இடம்பெயர்ந்தோர் மறுவாழ்வு குறித்து சூரிச் மாநாட்டில் நேற்று ஆராய்வு

சூரிச், நவ. 21

சுவிற்ஸர்லாந்தின் சூரிச் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில், இடம்பெயர்ந்த மக்களின் மறுவாழ்வு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கூட்டத்தின் ஆரம்ப நாளான வியாழக்கிழமை கூட்டத்தில் பங்குபற்றிய தலைவர்களின் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து ஒவ்வொரு தலைவர்களும் தங்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டனர்.

நேற்று ஆரம்பமான கூட்டத்தில், இடம்பெயர்ந்த மக்களின் மறுவாழ்வுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதலில் ஆராயப்பட்டது.

அத்துடன் சிறுபான்மை மக்களைப் பாதிக்

(20ஆம் பக்கம் பார்க்க)

### இன்று வடக்கே வரும் பஸிலிடமிருந்து முக்கிய அறிவிப்பு

கொழும்பு.நவ.21

வடக்கு மீள்குடியேற்ற மற்றும் அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின் தலைவரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ இன்று வடக்குக்கு விஜயம் செய்கிறார்.

அவர் அங்கு வைத்து முக்கிய அறிவிப்பு ஒன்றை விடுப்பார் என்று மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (அ-1)

## சுய விருப்பின்பேரில் முகாமைவிட்டு வெளியேற வன்னி அகதிகளுக்கு இன்னமும் அனுமதி இல்லை

### ஐ.நா. பிரதிநிதி ஹோம்ஸ் கவலை தெரிவிப்பு



கொழும்பு, நவ. 21

அரசினால் நடத்தப்படும் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பொது மக்கள் அந்த முகாம்களை விட்டு சுய விருப்பின்பேரில் வெளியேறிச் செல்வதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படாத நிலைமைதான் நீடிக்கின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்த முகாம்களையும், பொதுமக்கள் மீள்குடியேறிச் சென்றுள்ள பிரதேசங்களையும் நேரில் பார்வையிட்ட ஐ.நாவின் மனித உரிமைகள் விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் இவ்வாறு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் இணைந்து போட்டியிட எதிர்க்கட்சிகளுக்கு அரசு அழைப்பு!

கொழும்பு, நவ. 21

எதிர்வரும் தேர்தல்களில் அரசுடன் இணைந்து போட்டியிடுவதற்கு அரசு, எதிர்க்கட்சிகள் அனைத்துக்கும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து பன்றிக் காய்ச்சலுக்கான தடுப்பு மருந்து

### தருவிக்க அரசு பகீரத முயற்சி

கொழும்பு, நவ. 21

இலங்கையில் அதிகரித்து வரும் பன்றிக் காய்ச்சலால் அதிக மரணங்கள் ஏற்படுவதை அடுத்து பன்றிக் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி மருந்துகளை உலக சுகாதார நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள அரசு பகீரத முயற்சிகளை எடுத்து வருகின்றது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பெண் தற்கொலைதாரி மூலம் பொன்சேகாவை கொல்லத் திட்டமாம்

கொழும்பு, நவ. 21

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை படுகொலை செய்வதற்குத் தமிழ் அரசியல்வாதி ஒருவர் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிப் பெண் ஒருவரைக் கொழும்புக்கு அழைத்து வந்துள்ளார் என்று 'லங்கா இரட' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான அந்த அரசியல்வாதி, 'வசந்தி'என்ற தற்கொலைப் பெண் குண்டுதாரியை இப்படு

(20ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
>AC/Non AC Rooms (with all Facilities)
> Conference/ Party Hall (75 Persons)
> Special Function Menus (buffet style)
கொசி உணவகம்
Feel like home
இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன்,
Introducing Special North Indian Break fast
06.00am to 10.00am
யாழ் நகரிலும் கொழும்பிலும் சுவையான, தரமான
Indian, Chinese, Jaffna Foods

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ...வடி வேலைவாய்ப்பு

யாழ்.கொழும்பு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் நிறுவனத்துக்கு சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் உடன் தேவை. கடையில் பணியாற்றக் கூடியவர்களும் தேவை. உயர்ந்த சம்பளம் வழங்கப்படும். உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை**

*201"B", டாம் வீதி, கொழும்பு*


## மரண அறிவித்தல்

### வேலன் சிதம்பரப்பிள்ளை



காளி கோவிலடி, தாவடி தெற்கை பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் சிதம்பரப்பிள்ளை 19.11.2009 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - லச்சுமி தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், இரவீந்திரன் (அமரர்), மோகன் (தாவடி), ஞானேந்திரன் (அமரர்), கண்ணன் (அமரர்), ஜெயந்திரன் (பிரான்ஸ்), சுவேந்திரன் (அவுஸ்ரேலியா), மனோன்மணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தா, நிர்மலா, சமந்தா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுமதி (கனடா), உஷா, உஷாமினி, நிமா, சங்கீதா, சிவானி, மயூ, விசோத், சகி, ரூபன், சசிக்குமார், ரவிக்குமார் ஆகியோரின் அன்புப் பேரனும், கஸ்மினி, அம்மு, நவீனா ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*ஆறுகால்மடம்.* (91254)

தகவல்: மகன் (மோகன்)
மனைவி, பேரப்பிள்ளைகள்.

## மேல்வாய் பிளந்து கிடக்கும் மதகு மூடியால் சிரமம்

வண்ணை.நவ.21

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் போதனா வைத்தியசாலை வைரவர் ஆலய வளாக மருங்கிலும் இருக்கும் சிறிய மதகு ஒன்றின் மூடியில் ஏற்பட்டுள்ள பழுதால் அதன் மேல்வாய் பிளந்து காணப்படுகிறது.

இந்த மதகு ஊடாக வைரவர் ஆலயம் மற்றும் ஆஸ்பத்திரி சிற்றுண்டிச் சாலையின் கழிவு நீர் வீதியின் தெற்குப் புறத்தில் அமைந்துள்ள பெரிய வடிகாலுக்கு இட்டுச் செல்வதற்காக இந்த சிறிய வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

சிலமாதங்களுக்கு முன்னர் அதில் ஏற்பட்ட பழுதை தற்காலிகமாக சிறிய அளவில் செப்பனிடப்பட்டது. மீண்டும் பழுதடைந்து வாய் பிளந்து காணப்படும் மதகின் வாயினூடாக உந்துருளிகள் மற்றும் இயந்திர முச்சக்கர, இருசக்கர ஊர்திகளின் சில்லுகள் அகப்பட்டால் ஆபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது.

(ஒ-160)


**படிவம்**

மக்கள் சபை செயலாளர் பதவிகளுக்கு பட்டதாரிகள் விண்ணப்பிப்பதற்கான படிவம் விற்பனைக்கு உண்டு.

முடிவுத் திகதி: 18.12.2009

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### சுப்பர் இராசரத்தினம் (இரத்தினம்)

இளவாலையை பிறப்பிடமாகவும் பெரியாவிடை, கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும், தற்பொழுது உசனை, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் இராசரத்தினம் நேற்று (20.11.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பர்-இலட்சுமியின் அருமை மகனும், ருக்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் இராசம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.11.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசனை,*
*இளவாலை.* (சி/562643)

தகவல்:
மனைவி.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி ஜெயராஜசிங்கம்



இல.06, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ஜெயராஜசிங்கம் 15.11.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி மற்றும் நேசம்மா (கனடா) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இனியப்பு - செல்லம்மா ஆகியோரின் மருமகனும் தேவகியின் (ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை) அன்புக் கணவரும், ரேணுகா (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவி, மோட்டார் போக்குவரத்து திணைக்களம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), கோபிகிருஷ்ணா (இத்தாலி), ஸ்ரீவரதராஜன், கிருஷ்ணவதனி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் , தனபாலசிங்கம் (சுதுமலை), பரராஜசிங்கம் (அமெரிக்கா), இந்திரகுமாரி (கனடா), ஜெயகுமாரி (டென்மார்க்), திசைவீரசிங்கம் (ஜேர்மனி), குமாரகுலசிங்கம் (இத்தாலி), பூபாலசிங்கம் (இத்தாலி), கமலகுமாரி (கொலன்ட்), தர்மகுலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜஇராயேஸ்வரி, மகேஸ்வரி, கிருஷ்ணதாசன், நிர்மலராஜன், அருள்விழி, நந்தினி, சுமதி, ஸ்ரீதரன், நேருஜா, சேதுப்பிள்ளை, ருக்குமணி, சோதி, குபேந்திரன் (மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனரும், கந்தையா, அமிர்தலிங்கம், மனோகரன், இந்திராணி (மட்டக்களப்பு) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.6, கன்னாதிட்டி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
**T.P.: 021 321 8936** (91257)

தகவல்:
குடும்பத்தினர்.


# B.F.C. SERVICES

**லண்டன் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்புடன் கூடிய உயர் கல்வி**

**கல்லூரிகளுக்கான அனுமதிகள் மற்றும் விசாவுக்கான ஏற்பாடுகளும் ஆலோசனைகளும்**

- குறைந்தளவு தகைமை G.C.E. (O/L).
- ILTES அவசியமில்லை.
- அனைத்து கற்கை நெறிகளுக்கும் பெப்ரவரி 2010 க்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- அனுமதிகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளலாம்.

(சி/562639)

தொடர்புகளுக்கு:
இல.233, நாவலர் வீதி,
(பிறவுண் வீதி,
நாவலர் சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.
021 222 7097, 021 222 6113
(அருள்குளோபல் எக்ஸ்பிரஸ் அருகில்)

கொழும்பில் தொடர்புகளுக்கு:
0755518040
(செவ்வாய்க்கிழமையின் பின்பு தொடர்பு கொள்ளவும்)







## இடம்பெயர்ந்தோருக்கான செப்ரெம்பர் நிவாரணம்

குடாநாட்டில் 11.08.2006 இற்கு முன்னர் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு செப்ரெம்பர் மாதத்துக்கான நிவாரணம் வழங்கப்படுவதாக யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

களஞ்சியங்களில் இருந்து பொருள்களை எடுத்து விநியோகத்தை ஆரம்பிக்குமாறு ப.நோ.கூ. சங்கங்களை அரச அதிபர் கேட்டுள்ளார்.

ஒக்ரோபர் மாதத்திற்குரிய நிவாரணத்தை அடுத்த வாரம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ட)


**ராஜ் திருமண சேவை**

இந்து கௌரவ குடும்பம், 34 வயது, விசாக நட்சத்திரம், செவ்வாய்குற்றமுள்ள, எக்கவுண்டன் மணமகனுக்கு பொருத்தமான படித்த மணமகள் தேவை. (சி/562641)

158/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0774745647, 0213735980

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் 50 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. 3 கிலோவிற்குமேல் நிறையுடைய புறொயிலர் உண்டு. அத்தோடு கல்பேட், ஊர்ச்சேவல் விற்பனை செய்யப்படுகின்றன.

தாசன் பாம்,
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (சி/562642)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பழியைத் துடைக்க பகீரதப் பிரயத்தனம்; கலைஞரின் முயற்சி பலிக்க வாய்ப்பில்லை

ஈழத் தமிழர் விவகாரத்தில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் 'அங்கிடுதத்தி'த் தனத்தால் அவருக்குத் தீராப்பழி ஏற்பட்டுவிட்டது. 'உலகத் தமிழினத்தின் தலைவர்' என்று தன்னைத் தமிழினம் மதிக்கும் என்றுதான் இதுகாறும் கருதி வந்தார் கலைஞர் கருணாநிதி. ஆனால் ஈழத் தமிழர்கள் வரலாற்றில் பேரவலத்தை - மிக மோசமான போரியல் அழிவுகளை - சந்தித்துக் கொண்டிருந்தபோது, தன்னுடையதும் தனது குடும்பத்தினதும் சுயநல அரசியலுக்காகத் தமிழர்களை நட்டாற்றில் விட்டு, பெரும் பழியைச் சுமந்து கொண்ட அவரை 'தமிழினத்தின் தலைவிதி' என்று நொந்து சபிக்கும் நிலையிலேயே உலகத் தமிழர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டில் அரசியல் அணிகள் தொடர்பான கணக்கு - வழக்குகள், கூட்டல் - கழித்தல்கள், இன்றைய நிலையில் கலைஞர் கருணாநிதியின் காட்டில் நல்ல மழை என்ற நிலைமையை ஏற்படுத்தினாலும் -

ஈழத் தமிழர்களை அந்தரிக்க விட்டு - அதற்காகத் தமது அரசியலில் 'அந்தர் பல்டி' அடித்த கலைஞரை உலகத் தமிழினம் எந்தக் கட்டத்திலும் மன்னிக்காது என்பது அவருக்கு நன்கு தெரியும்; புரியும்.

எப்படியும் தமது இறுதிக் காலத்துக்கு முன்னர் அந்தப் பழியைத் துடைத்து அழித்துவிடலாம் என்ற நப்பாசையில் அவ்வப்போது சில ஆரவாரங்களைப் பண்ணுவது இவரது அரசியல் தகிடுதத்தமாக இருந்து வருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, சர்வதேச செந்தமிழ் மாநாடு என்றெல்லாம் 'கப்ஸா'பண்ணிப் பார்த்தார். ஈழத் தமிழர் விடயத்தில் தம்மீது விழுந்துள்ள பழியைத் துடைப்பதற்கு அவர் நடத்தும் கபட நாடகமே இந்த மாநாடு என்பது பகிரங்கமாக விமர்சிக்கப்பட்டமையை அடுத்து சற்று அடங்கிப்போனார்.

இப்போது 'நம் மௌன வலி யாருக்குத் தெரியப் போகின்றது?' - என்ற தலைப்பில் ஈழத் தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடித்து - ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்ட பேரவலத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவரையும் குற்றம் சுமத்தி - அவர் வெளியிட்ட அறிக்கையும் இதேமாதிரியில் விவகாரத்தைத் திசை திருப்பும் எத்தனமின்றி வேறில்லை.

இலங்கையில் தமிழர்கள் கொத்துக் கொத்தாகச் செத்து மடிந்து கொண்டிருந்தபோது- கொன்றொழிக்கப் பட்டுக் கொண்டிருந்தபோது - அத்தகைய கொழும்பு அரசின் அத்துமீறிய போக்கை ஆதரித்து, அங்கீகரித்து, அதற்கு உதவி, ஒத்தாசை வழங்கி, உறுதுணையாகச் செயற்பட்டது இந்திய மத்திய அரசு - புதுடில்லி நிர்வாகம்.

இலங்கை விவகாரத்தில், அப்படி இந்திய மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளே தனது மாநில அரசின் முடிவும் கூட என்றும் பகிரங்கமாக அறிவித்ததன் மூலம், இலங்கையின் தமிழின அழிப்புக்குத் துணைபோன, இந்திய மத்திய அரசுக்கு முழு அளவில் முண்டு கொடுத்து, அந்த மத்திய அரசின் பழி பாவத்தில் தன்னையும், தனது இயக்கத்தையும், கட்சிக்காரர்களையும் பங்குதாரர் ஆக்கிக் கொண்டார் கலைஞர்.

இப்போது அதிலிருந்து வெளியே வர - பழியைத் துடைக்க - பகீரதப் பிரயத்தனம் பண்ணுகின்றார். ஆனால் அவை எல்லாம் எடுபடாமல், அவரின் கோமாளித்தனங்களாக அர்த்தம் பண்ணப்படுகின்றமைதான் அவருக்கு இன்று நேர்ந்துள்ள அவலமாகும்.

இலங்கைத் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் கொன்றொழிக்கப்பட்ட போது, அதற்குத் துணைபோன புதுடில்லி ஆட்சிப் பீடத்துக்கு முண்டு கொடுத்து, தனது அரசியல் பிழைப்பை லாபகரமாக நடத்திய கலைஞர், அச்சமயம் மறுபக்கத்தில், மனித சங்கிலிப் போராட்டம், தமிழக எம்.பிக்கள் கூண்டோடு இராஜிநாமா என்ற கபட நாடகம், மூன்று மணி நேரம் நடத்திய சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்ட நடிப்பு, இலங்கையில் யுத்த நிறுத்தம் வந்துவிட்டது என்ற பித்தலாட்ட அறிவிப்பு, பல கட்சிப் பிரதிநிதிகளையும் புதுடில்லிக்குக் கூட்டிச் சென்று இந்திய மத்திய அரசை மிரட்டுவது என்ற கோணங்கித்தனம் என அவ்வப்போது அடித்த அரசியல் 'பல்டி'கள் - அல்லது 'ஸ்டண்ட்'கள் - பலப்பல.

அவை எவையுமே அப்போதும் சரி, பின்னரும் சரி எடுபடவேயில்லை என்பதுதான் யதார்த்தம்.

இப்படித் தீராப்பழி தம்மீதும், தமது குடும்பம் மீதும் விழுந்திருப்பதால், அதையெண்ணி இப்போதாவது நொந்து அழுவதற்கான மனச்சாட்சியை அவருக்கு இறைவன் கொடுத்திருக்கின்றான் போலும். அதனால்தான், தமது பிந்திய இந்த அறிக்கைக்குள் வேறு ஏதோ உளறிக்கொட்டியிருந்தாலும் கூட, அதன் தலைப்பை 'நம் மௌன வலி யாருக்குத் தெரியப் போகின்றது?' என்று வரைந்திருக்கின்றார் அவர்.

வன்னியிலே தமிழினம் கதறக் கதறக் கொன்றொழித்து அழிக்கப்பட்டபோது, அதன் கதறலை செவிமடுக்கத் தவறி - அதன் அவலத்தை உணரத் தவறி - சுயலாப அரசியல் நடத்திய இத்தகைய தலைவர்களுக்கு உண்மையில் மனச்சாட்சி இருந்து, அதில் ஏற்படக்கூடிய மௌனவலியை உணரும் பக்குவம் அவர்களின் பிரக்ஞைக்கு உண்டா என்பது சந்தேகமே. அப்படி அவர்களுக்கு மௌன வலி நேர்ந்தாலும் அதைத் தமிழினம் உணர்ந்து, புரிந்து கொள்வதற்கு அதில் எதுவும் இல்லை என்பதுதான் உண்மை.

# சமாதானத்தை வலியுறுத்தி பிரபல மரதன் வீரர் சைமன் மொனறாகலையிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்தார்

## துரையப்பா விளையாட்டரங்கில் அவருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், நவ. 21

வடக்குக்கும் தெற்குக்குமான சமாதானத்தை வலியுறுத்தி இலங்கையின் பிரபல மரதன் ஓட்ட வீரர் வி. எச். ஜி. சைமன் (வயது-46) மொனறாகலையில் இருந்து ஓட்டத்தை ஆரம்பித்து நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.



மொனறாகலை, இகலவாவ என்ற இடத்தில் இருந்து கடந்த 18ஆம் திகதி தமது சமாதான மரதன் ஓட்டத்தை ஆரம்பித்த அவர் 300 கிலோமீற்றர் தூரத்தை கடந்து நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

இவரை வரவேற்கும் நிகழ்வு நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மார்க், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ். ஜே. ரூபசிங்கம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் எம். பிரதீபன், மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வி. ரி. செல்வரட்ணம், சமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எம். பற்றிக் டிறஞ்சன் ஆகியோர் உட்படப் படை அதிகாரிகள், அரச அதிகாரிகள் அவரை வரவேற்றனர்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் 'பாண்ட்' வாத்திய அணி வகுப்புடன் யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு பிரபல மரதன் ஓட்ட வீரர் சைமன் அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அவரை வரவேற்கும் வைபவம் ஒன்று நடைபெற்றது. மரதன் ஓட்ட வீரருக்கு உதவியாக மேலும் 64 பேர் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வந்தனர்.

வரவேற்பு வைபவத்தில் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி, யாழ். மாநகர முதல்வர் ஆகியோர் உரையாற்றினார்கள். யாழ். மாவட்ட அரச அதிபரின் சார்பில் திட்டப் பணிப்பாளர் எம். பிரதீபன், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ. எவ்.ஜே.ரூபசிங்கம் ஆகியோர் மரதன் ஓட்ட வீரருக்கு நினைவுக் கேடயங்களை வழங்கிக் கௌரவித்தனர்.

மரதன் ஓட்ட வீரர் சைமன் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்குக்கும் தெற்குக்குமான சமாதானத்தை வலியுறுத்தியே நான் இந்த ஓட்டத்தில் பங்குகொண்டேன். இதுவரை 50 கிலோமீற்றர் வரை ஓடிய நான் முதற்தடவையாக 300 கிலோ மீற்றரைக் கடந்து ஓடியுள்ளேன்.

இதற்கு அனுமதி வழங்கிய ஜனாதிபதிக்கும், ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சர்கள், படைஅதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

(50-111-224-15)

## இலவசப் பாடநூல்களில் ஒரு தொகுதி இன்று தரைப் பாதையூடாக வந்து சேரும்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான அடுத்த ஆண்டுக்குரிய இலவசப் பாடநூல்களில் ஒரு தொகுதி இன்று சனி க்கிழமை எடுத்துவரப்படவுள்ளது.

மேலதிக மாகாண கல்வி அலுவலக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

இந்தப் பாடநூல்கள் தரைப் பாதையூடாக 14 பாரவூர்திகளில் எடுத்து வரப்படுகின்றன.

பாடநூல்கள் வந்து சேர்ந்ததும் அவற்றை டிசெம்பர் மாதத்தில் மாணவருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(224)

## மின்னலுடனான மழை பெய்யும் வாய்ப்புண்டு

மின்னலுடனான மழை வடமாகாணத்தில் இடை இடையே பெய்யக் கூடிய காலநிலை காணப்படுகிறது என்று காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

கிழக்கு, வடக்கு, வடமத்தி மற்றும் ஊவா மாகாணங்களில் மின்னலுடனான மழை பெய்யும் வாய்ப்பு இருக்கின்றது என்று அவதான நிலையம் அறிவித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு கரையோரப் பகுதிகளில் கடலில் கொந்தளிப்பான நிலைமை காணப்படும் என்றும் -

பிற்பகலில் நாட்டின் பல பகுதிகளிலும் இடிமுழக்கத்துடனான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் கடும் மழை பெய்யக்கூடிய வாய்ப்பும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(50-224)

## கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மும்முரம்

யாழ்ப்பாணம், நவ. 21

கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியின் ஆசிரிய மாணவரொருவர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளானதாகத் தெரிவித்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து மேலும் பரவாமல் தடுக்குமுகமாக சுகாதாரத் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் ஆசிரிய மாணவரொருவருக்கு டெங்கு நோய்த் தாக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் 10 பேருக்கு காய்ச்சல் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதனையடுத்து நோய்த் தாக்கத்துக்குள்ளான ஆசிரிய மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்வியியற்கல்லூரியில் மாணவர்களுக்கு டெங்குநோய் மேலும் பரவாமல் தடுக்கும் வகையில் சுகாதாரத் திணைக்களத்தின் அதிகாரிகள், கோப்பாய் வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த வைத்தியர் கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் அங்கு நேரில் சென்று டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத் தரங்கினையும் சிரமதானப் பணிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் அங்குள்ள ஏனைய மாணவர்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

(50-9)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 06 | 22.11.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | காலை 07.37 வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | பி.ப.04.22 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

## பேராசிரியர் வித்தியானந்தனின் சிலை யாழ்.பல்கலையில் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் உருவச்சிலை திரைநீக்கமும், நினைவுப் பேருரை நிகழ்வும் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெற்றன.

துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் பக்தவத்சலபாரதி உள்ளிட்ட விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து பேராசிரியர் என்.சண்முகலிங்கன் யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் அமைக்கப்பட்டிருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தனின் உருவச்சிலையினைத் திரைநீக்கம் செய்து வைத்ததுடன் மலர்மாலை அணிவித்தும் கௌரவித்தார். தொடர்ந்து விருந்தினர்களின் உரைகளும், மலர் சாத்தி அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றன.

"யாழ்ப்பாணப் பண்பாடு; மறந்தவையும் மறைந்தவையும்" எனும் தலைப்பிலான நினைவுப் பேருரை யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனின் தலைமையுரையினைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நினைவுப் பேருரையினை வழங்கினார்.

புவியியல்துறைப் பேராசிரியர் கா.குகபாலன், முனைவர் பக்தவத்சல பாரதியை கௌரவிக்கம் முகமாக நினைவுச்சின்னம் அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் ஆக்க இலக்கிய நூல்களுக்குப் பிறரால் வழங்கப்பட்ட அணிந்துரைகள் மற்றும் முன்னுரைகளின் தொகுப்பு நூலான 'வித்தியின் இலக்கிய முன்னீடுகள்' எனும் நூல் இந்நிகழ்வின் ஓர் அங்கமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி தி.கமலநாதன், அகவிழி சஞ்சிகையின் ஆசிரியர் தெ.மதுசூதனன் ஆகியோரால் தொகுக்கப்பட்ட நூலே இவ்வாறு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நூலை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைத்தார். புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் பக்தவத்சல பாரதி இந்நூலுக்கான கருத்துரையினை வழங்கினார். புவியியல்துறைப் பேராசிரியர் க.குகபாலன் நன்றியுரையினை வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் யாழ்.பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரி வுரையாளர்கள், கல்விசார், சாராத உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பேராசிரியர் சு.வித்தியானந்தனின் உறவி னர்கள், சமூக ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (1-14-16)

(படங்கள் 19 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடமராட்சி மண்ணில்

## பிராந்திய காரியாலயத்தினை திறந்திருப்பதனை ஒட்டி வடமராட்சி மாணவர்களுக்காக நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி

### போட்டி விதிகளும் பரிசுக் குவியலும்

1. வடமராட்சிப் பிரதேசத்தினைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மட்டுமே இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.
2. விடைத்தாள்களைப் பாடசாலை அதிபர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
3. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம எண்ணிக்கையான சரியான விடைகளை எழுதினால் குலுக்கல் முறை மூலம் பரிசுக்குரிய அதிஸ்டசாலி தெரிவு செய்யப்படுவார்கள்.
4. விடைகளை இந்த விடைத் தாளிலேயே எழுதுதல் வேண்டும். பிரதிகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. பூரணப்படுத்தப்பட்ட கூப்பனுடன் கூடிய விடைத்தாள்களை உதயனின் முகவர் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் அல்லது உதயனின் நெல்லியடிக் கிளையிலுள்ள பெட்டியினுள் போட முடியும்.
6. 20.11.2009 முதல் உதயனில் வெளிவரும் இலச்சினைகளை தொடராக விடைத்தாளுடன் இணைத்து அனுப்பினால் வெல்கின்ற பரிசு மடங்குகளால் அதிகரிக்கப்படும்.

   உதாரணமாக : முதலாம் பரிசுக்குரிய மாணவரொருவர் உதயன் இலச்சினைகளை ஒழுங்கு தவறாமல் ஒட்டி அனுப்பி இருந்தால் முதலாம் பரிசான ரூபா பத்தாயிரம் முப்பதாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும்
7. கூடுதலான எண்ணிக்கையான மாணவர்களைப் பங்குபெறச்செய்யும் முதல் மூன்று பாடசாலைகளுக்கும் சிறப்புப் பரிசாக ரூபா பத்தாயிரம் வீதம் வழங்கப்படும்
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.
9. சாதாரண விண்ணப்பத்திற்கு குறைந்தது 3 இலச்சினைகளாவது உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**1ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)

ரூபா 10,000.00 (சாதாரணமாக அனுப்பினால்)

ரூபா 30,000.00 (அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**2ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)

ரூபா 6,000.00 (சாதாரணமாக அனுப்பினால்)

ரூபா 20,000.00 (அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**3 ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)

ரூபா 2,500.00 (சாதாரணமாக அனுப்பினால்)

ரூபா 10,000.00 (அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**4 ஆம் பரிசு**

ஒரு மாதத்துக்குரிய உதயன் நாளிதழ் பிரதிகளை இலவசமாகப் பெறும் வாய்ப்பு (ஐம்பது பேருக்கு)

வடமராட்சி


## தகவல் தொழில் நுட்ப பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை க.பொ.த. உயர்தரம் (2010) (தரம் 13) வகுப்பு மாணவர்களுக்கான தகவல் தொழில் நுட்பப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது.

யாழ்.விஞ்ஞான மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப் பரீட்சையில் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## தரம் 9 புதிய பாடத்திட்ட செயலமர்வு நாளை

தீவகவலய ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டத்திற்கான வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்விப் பாடச்செயலமர்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

நாளை புவியியல் பாட ஆசிரியர்களும், மறுநாள் வரலாறு, குடியுரிமைக் கல்விப் பாட ஆசிரியர்களும் செயலமர்வுகளில் பங்குபற்ற வேண்டும் என தீவகவலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1-267)

## சோமவார உற்சவம்

யாழ்ப்பாணம், நவ. 21

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் ஒவ்வொரு கார்த்திகைத் திங்களும் பி.ப. 3.30 மணிக்கு கும்பபூசையுடன் உற்சவம் ஆரம்பமாகி, 5 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். - (1)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது மன்றின் பல கோரிக்கைகளுக்கமைவாக சாவகச்சேரி நகர் பொது விளையாட்டு மைதானம் பாவனைக்கு திறக்கப்பட்டமைக்காகவும், சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் மக்கள் பாவனைக்கு திறந்து புனரமைப்புச் செய்தமைக்காகவும், சாவகச்சேரி நகர் பகுதி, A-9 வீதிக்கும் மின் விளக்குகள் மிளிர ஏற்பாடுகள் செய்தமைக்காகவும் மற்றும் மன்றின் வளர்ச்சிக்கு பல உதவிகளை செய்தமைக்காகவும்

கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா (சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்) அவர்களையும் திரு.சூ.அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்) (தென்மராட்சிப் பொறுப்பாளர்) மற்றும் அலுவலர்களையும் மேலும் சேவை வளர எமது சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி/562635) **கைத்தொழில் வணிகர் மன்றம்,** சாவகச்சேரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியர்

**திரு.குலசிங்கம் திலீபன்**

**(Dip. in Teaching (Science) B.A., Dip in Ed.)**

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவி உயர்வுகள் பெற்றுச் சீருஞ் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (91246) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

## STUDY & WORK IN SINGAPORE

**HOTEL MANAGEMENT / ACCOUNTING / ENGLISH**

**BUSINESS ADMINISTRATION**

Commencing on 01/12/2009

Those who have sat for the G.C.E O/L can apply.

Accommodation can be arranged



Contact Tel:- 0755708293 (சி/562517)

## அறை வாடகைக்கு

உணவு வசதிகளுடன் கூடிய அறைகள் ஆண் மாணவர்கள் / அலுவலர்களுக்கு பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0779578244, 0213734306

## சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்

## கேள்வி கோரல்

எம்மிடம் கீழ்வரும் விவரப்படியான வெற்றுப் பொருள்கள் கூறுவிலைகோரி விற்பனை செய்யப்படவுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் கிழமை நாள்களில் தலைமைக் காரியாலயத்திற்கு வருகை தந்து பார்வையிட்டு தங்கள் விண்ணப்பத்தை 27.11.2009 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

| விபரம் | தொகை |
|---|---|
| அரிசிப் பை | 9560 |
| மாவு பை | 6695 |
| சாக்கு | 88 |

(சி/562620)

பொதுமுகாமையாளர். சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், கண்டி வீதி, சாவகச்சேரி.

## தேவை

யாழ்.நகரில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்துக்கு கம்பியூட்டர், ரைப்பிங் வேலை தெரிந்த பெண்பிள்ளைகள் உடனடியாகத் தேவை. சான்றிதழ்களுடன் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

தொடர்புகளிற்கு JOHNS COMMUNICATION, 243,HOSPITAL ROAD, JAFFNA. 021-2223302, 0773671545

## விற்பனைக்கு

12 Sri..தொடர் இலக்கமுடைய லான்சர் கார் (வெள்ளை நிறம்) உடன் விற்பனைக்கு உண்டு.

(91251) தொடர்பு: 0776106643

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழி மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். (சுத்தம் செய்தல் இலவசம்) 1kg -300/= A.S.S பாம், தியேட்டர் வீதி, இணுவில். (சி/562623)

## தேவை

அரைக்கும் ஆலை, மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு, ரயர் வேக்ஸ், ரீ மேக்கர் என்பவற்றில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

பிருந்தா மில்ஸ் 18, நக்கா றோட், யாழ்ப்பாணம். T.P : 0772231096 (91236)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலியில் சென்றல் நேசிங்ஹோமையும், நல்லூர் கோவிலையும், அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடன் (தளபாடங்களுடன்) கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0774665593 (91252)

## கார் விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள MARUTI WAGONR கார் உடன் விற்பனைக்குண்டு.

(சி/562630) தொடர்பு:- 0773565285

## விற்பனைக்கு

நல்லின புறாக்கள், புறாக்கூடுகள், 300 நல்லின தென்னம் பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு S.N.V. ... கண்ட, இல.16, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு சந்திக்கு ...


## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (மணியம் மாஸ்ரர்)



(முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி-சுன்னாகம். விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. ஆசிரியர், Belvoir International School-Colombo)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் 19.11.2009 வியாழக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-மீனாட்சி தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் சிவசோதி தம்பதியினரின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் மணிவண்ணன், ரமணன், ஜனார்த்தனன், மீரா மைத்திரே ஆகியோரின் பாசமிகு தந்தையும் நளினி, மைதிலி, நிரஞ்சனி, மனோகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். அதுபற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி. T.P:0044 208.220 2295 (லண்டன்). (91245) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அமிர்தநாதர் இசபேலம்மா (செல்லம்மா)



சில்லாலை தெற்கைச் சேர்ந்த அமிர்தநாதர் இசபேலம்மா (செல்லம்மா) 18.11.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - ஆனாசி தம்பதியினரின் அன்பு மகளும், தொம்மைப்பிள்ளை அமிர்தநாதரின் (அமுது) அன்பு மனைவியும், ராஜசிங்கம் (ஜேர்மனி), புனிதம்(சுவிஸ்), புஸ்பம்(இந்தியா), பங்கிராஸ் (இந்தியா), யோகராஜா (பிரான்ஸ்), யோகராணி(சுவிஸ்), றூபன்(சுவிஸ்), றஞ்சன் (சுவிஸ்), றஞ்சினி, செல்வராணி (பிரான்ஸ்), ராஜி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம், அந்தோனிமுத்து, யக்கோமுத்து, மார்த்தா, மரியா, சூசைப்பிள்ளை, மரியாம்பிள்ளை, மற்றும் சின்னராசா, சின்னத்துரை, ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.11.2009) சனிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து சில்லாலை புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தொ.அமிர்தநாதர் (கணவர்) பிள்ளைகள், மருமக்கள்.

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. (91250)

### திருமதி ஐயாத்துரை உலகேஸ்வரி (பாப்பா)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை உலகேஸ்வரி 19.11.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - செல்லாச்சி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, உலகேஸ்வரன், பூமாதேவி, பரமேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், பிறேமா, பிறேமகுமாரன், சாந்தகுமாரி, ஜெயக்குமாரி, பவானந்தன்(கனடா), மகேஸ்வரி(கனடா), சுமதி(கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மராசா(நல்லூர் ப.நோ.கூ. சங்கம்), சுகந்தி, வரதராசா (மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ.சங்கம்), குணசேகரம், நிர்மலா(கனடா), பாலசோதி (கனடா), துளசிதாசன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சினோஜா, ஹம்சிகா, வாஹினி, சிந்துஜா, செந்தூரன், தர்சன், யர்சிகா, அபிராமி, தினுசன், காலஞ்சென்ற சஜிந்தன் மற்றும் கபிலன், விதுரன், விதுசன், அபிநயா, சாயிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (23.11.2009) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (91256) தகவல்: குடும்பத்தினர். தொ.பே.இல.0213212617

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



தேசிய சேமிப்பு வங்கியின் நெல்லியடிக்கிளை நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர் சுனில் பெரேரா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வங்கியின் மேலதிக பொது முகாமையாளர் தென்னக்க பண்டார, பிரதிப்பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) திருமதி குஸ்மா அமரதுங்க ஆகியோர் மலர்மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) திருமதி குஸ்மா அமரதுங்க மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும்,

பிரதம விருந்தினரான தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர் சுனில் பெரேரா உரை நிகழ்த்துவதையும், வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பிரதம விருந்தினர் பணத்தைப் பெற்றுக் கொள்வதையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள் : சுந்தா)

## வலி. தென்மேற்குப் பகுதியை இரண்டு பிரிவுகளாக்கி நகரசபை, பிரதேசசபை எனத் தரமுயர்த்தத் தீர்மானம்

வலி.மேற்கு, நவ. 21

வலி. தென்மேற்குப் பிரதேசசபையை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து நகரசபையாகவும், பிரதேசசபையாகவும் தரமுயர்த்துவதற்கு கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நான்கு உபபிரிவுகளை உள்ளடக்கி இயங்கி வந்த பிரதேசசபையில் பதின்நான்கு கிராமசேவகர் பிரிவுகளையும், இருபத்தியிரண்டு வட்டாரங்களையும் உள்ளடக்கிய மானிப்பாய் கிராமத்தையும் மானிப்பாய் பட்டினத்தையும் இணைத்து மானிப்பாய் நகரசபையாகவும், பதின்நான்கு கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட இருபத்து மூன்று வட்டாரங்களையும் உள்ளடக்கிய பண்டத்தரிப்புப் பட்டினமும், பண்டத்தரிப்பு கிராமமும் இணைந்து பண்டத்தரிப்புப் பிரதேசசபையாகவும் தரமுயர்த்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக பொதுமக்களின் அபிப்பிராயங்களை அறியும் வகையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் கடந்த 16ஆம் திகதி அரச அதிபர் தலைமை யில் வலி. தென்மேற்கு பிரதேசசபைக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம. வசந்தகுமார், ஈ. பி. டி. பியின் பிரதேச அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், வலி. தென்மேற்கு பிரதேசசபைச் செயலர் திருமதி பு.சிவலிங்கம், மானிப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டினேஸ் ஜெயக்குமார் மற்றும் நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன் இந்தத்திட்டத்தை வரவேற்பதாக ஏகமனதாக தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.

இதற்காக ஒரு அறிக்கையைத் தயாரித்து உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்து தரமுயர்த்துவதற்கான நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொள்வதாக அரசஅதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

(50-10-112)

## சத்தியசாயி பாபாவின் பிறந்தநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 21

ஸ்ரீ சத்தியசாயி பகவானின் 84 ஆவது பிறந்ததின நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொக்குவில் ஸ்ரேஷன் வீதியில் அமைந்துள்ள சத்திய சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

காலை நிகழ்வுகளாக ஓங்காரம், சுப்ரபாதம், பிரசாந்தி கொடியேற்றம், பஜனை, மங்கள ஆராத்தி என்பனவும் மாலை நிகழ்வில் பெற்றோரைக் கௌரவித்தல், பாலவிகாஸ் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அதனைத் தொடர்ந்து பரிசில் வழங்கலும் இடம் பெறும்.

(50-201)

## "இந்து சாதனம்" வெளிவந்தது

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையின் வெளியீடான "இந்துசாதனம்" கார்த்திகை மாதத்திற்கான இதழ் இந்துசமய பாரம்பரியங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இந்துசமய சஞ்சிகையான "இந்து சாதனம்" வல்வெட்டித்துறை சிவன்கோயில், சமயம் ஒரு வாழ்வியல், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வோம், அம்பாள் அழைத்த அந்தணர் திலகம் என்பன உட்பட, பலவகைப் படைப்புக்களையும் தாங்கி பின்பக்கத்தில் சைவ பரிபாலனசபையின் தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் என்னும் தொடர் கட்டுரை களுடன் வெளிவந்துள்ளது. (அ-10)

## யாழ். இளம் பெண்களுக்கு தொழில்துறை பயிற்சி வழங்க இந்திய நிறுவனம் ஆர்வம்

இந்தியாவில் சிறுகைத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ரான்ஸ்ரியா எப்.என்.எப். சேவை அமைப்பு (TANSTIA -FNF SERVICE CENTRE) வடபகுதி இளம் பெண்களுக்கு சிறுகைத் தொழில்களில் பயிற்சிகளை அளித்து உதவுவதற்கு ஆர்வம் கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் யாழ். மாநகர முதல்வரை சந்தித்து இளம் பெண்களுக்கான கைத்தொழில் துறையில் பயிற்சிகளை அளிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

இது தொடர்பாக அந்நிறுவனம் சென்னையிலுள்ள இலங்கை பிரதி தூதரகம் ஊடாக யாழ். மேயருடன் தொடர்பு கொண்டுள்ளது. (111)

## ஆங்கில வகுப்பு

வடமராட்சி, நவ.21

கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் (வை.எம்.சீ. ஏ) யாழ். குடாநாட்டில் நான்கு இடங்களில் ஆங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கென நடத்தப்பட்டு வரும் இந்த ஆங்கில வகுப்பு நவாலி, உடுவில், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

ஐ.சி.ரி.ஏ. இன் அனுசரணையுடன் இடம் பெற்று வரும் ஆங்கில வகுப்பு கணனிமூலம் போதிக்கப்பட்டு வருகிறது.

## வன்னி யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் மரணச் சான்றிதழை பெறுவதற்கு மரண விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

### யாழ். மாவட்ட உதவிப் பதிவாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

யுத்தத்தின் போது வன்னியில் இறந்தவர்களின் இறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள மரண விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

யாழ். மாவட்ட உதவிப் பதிவாளர் ப.பிரபாகர் இந்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் இறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ். செயலகத்திற்கு வருகைதருகின்றனர்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் மரணச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் மரண விசாரணை அறிக்கையின் மரண அறிக்கையினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இதேவேளை, வன்னியில் யுத்தத்தில் சிக்கி இறந்தவர்கள் தொடர்பான வைத்தியசாலை வைத்தியரின் அறிக்கை அல்லது வேறு ஆவணங்கள் ஏதுமிருப்பின் அவற்றுடன் ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் தமது முறைப்பாடு ஒன்றைச் செய்து வவுனியா மாவட்ட நீதிபதியினால் வழங்கப்படுகின்ற மரணச் சான்றிதழைப்பெற்றுக் கொண்டால் மட்டுமே இறப்பு பதிவு மேற்கொள்ளப்படும் - என்றார். (50-9)

## ஜி. சீ. ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான கருத்தரங்கு

வடமராட்சி, நவ. 21

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இவ்வாண்டு ஜி. சீ. ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை கருத்தரங்கினை நடத்தவுள்ளது.

வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் முதல் நாளான இன்று சனிக்கிழமை தமிழ்மொழி, வரலாறு, சமயம் ஆகிய பாடங்களுக்கானதும் இரண்டாம் நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் இடம்பெறும்.

இக்கருத்தரங்குகளில் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (50-236)

## விளம்பரப் பதாகைகளை அகற்ற நடவடிக்கை

ஆனைக்கோட்டை,நவ.21

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனுமதி பெறாது அமைக்கப்பட்ட விளம்பரப் பதாகைகளை அகற்றுவதற்குத் தாம் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும், புதிய விளம்பரப் பதாகைகளை அமைப்பதாயின் தமது பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு முன் அனுமதி பெற்று அமைக்கப்பட வேண்டும் என்று மேற்படி பிரதேச சபையின் செயலர் திருமதி பு.சிவலிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

## முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட 376 மாணவர் ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்கு தென்மராட்சியில் தோற்ற விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ.21

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட 376 மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பாடசாலைகள் ஊடாக விண்ணப்பித்துள்ளனர்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் 300 மாணவர்களும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 76 மாணவர்களும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார்.

(1-207)




## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நடைபெறும் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.21

பெண்களுக்கெதிரான வன்முறை எதிர்ப்பு வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான பேச்சு, கவிதை, ஓவியம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவத்தையும், போட்டி நிபந்தனைகளையும் நல்லூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம் எனப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார்.

(50-204)

## உதவிக் கல்விப்பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள உதவிக் கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

யாழ். கல்வி வலய மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, ஆசிரியர் சேவை வகுப்பு 2-I ஐச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்தும் மேற்குறித்த ஆசிரிய வகுப்புடன் கூடிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை ஆசிரிய நிர்வாகக் கிளையில் பெற்று எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் யாழ். வலயக் கல்வி பணிமனையில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(50-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

மிக நல்ல நிலையில் உள்ள 3 சிறி XXXX மெறிஸ் மைனர் 1000 கார் மற்றும் காஸ்குக்கர், சிலின் டர், மிக்சி, நீள்சாப்பனை உள்ள வாங்குகள், நுளம்பு வலைகள் விற்பனைக்குண்டு. 115/1, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (91236)

**காணி விற்பனை**

நாவலர் வீதியில் றெயில்வே வீதிக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: 0779749343 (சி/562617)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில இலக்கணம் ஆங்கில மூலம் By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302), K.K.S வீதி, யாழ்ப் பாணம். Tel: No.077 6751649 (9124357)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச் சேவல்கள், முட்டை என்பன மிகவும் மலிவான விலையில் எந்த நேரமும் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் மீண்டும் 20/=இனால் விலை குறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: மல்ரி பாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி. தொ.பே.: 0217912783 (91241)


# உலகின் பலம் வாய்ந்த இயக்கத்தை வெற்றிகொள்ள இராணுவத்தினரால் மட்டும் ஒரு போதும் முடியாது!

## ஊடகத்துறை அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

''உலகில் மிகவும் சக்திபடைத்த இயக்கத்தை வெற்றி கொள்ள இராணுவத்தினரால் மட்டும் முடியாது. அதற்குச் சிறந்த அரசியல் தலைமைத்துவமே தேவை'' அந்தத்தேவையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

-இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கூறினார்.

அரச தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் காலை நடை பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி பதவி ஏற்றது முதல் இதுவரையிலான இந்தக் குறுகிய காலகட்டத்தில் பாரிய அளவிலான ஒரு சேவையை நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் ஆற்றியுள்ளார்.

சர்வதேச அழுத்தங்கள் ஏற்பட்ட போதிலும் அவற்றுக்கு அஞ்சாமல் ஒரு தேசியத் தலைவராகச் சுயாதீனத்துடன் செயல் பட்டு உலகில் மிகவும் சக்தி படைத்த புலிகள் இயக்கத்தின் செயற்பாட்டுக்கு முடிவு கட்டினார்.

இவ்வாறான ஒரு இயக்கத்தை வெற்றிக்கொள்வதற்கு இராணுவத்தினால் மட்டும் முடியாது. அதற்குச் சிறந்த அரசியல் தலைமைத்துவமும் தேவைப்படுகின்றது. அதற்கு ஒரு சிறந்த உதாரணமாக வடமாராட்சி சம்பவத்தைக் கூறலாம்.

அந்தக் காலகட்டத்தில் மறைந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன ஜனாதிபதியாகவும் லலித் அத்துலத் முதலி பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தனர். இராணுவம் வடமாராச்சியில் கடும் மோதலில் ஈடுபட்டு வெற்றியை அண்மித்துக்கொண்டிருந்த வேளையில் சர்வதேச அழுத்தங்களுக்கு ஏற்ப அரசு படையினரை வாபஸ் பெற்றது.

இந்தப் போராட்டத்தின் போதும் இவ்வாறான அழுத்தங்கள் இல்லாமல் இல்லை. அவை அனைத்தையும் பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் முடிவுகளை எடுத்து போராட்டத்தை வெற்றி கொண்டு நாட்டுக்குச் சுதந்திரத்தை ஜனாதிபதி பெற்றுத் தந்தார்.

அவருடைய நான்கு வருட பதவிக் காலத்தில் நாட்டில் பல துறைகளிலும் பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளார். சமாதானத்தை நிலைநாட்டியுள்ளார் - என்றார்.

(சி)





183

**உன்னத சேவைக்காக இணைந்துள்ள குழுவினர்**

சாவகச்சேரி மக்களே,
இன்று முதல் உங்கள் சகல வங்கி அலுவல்களையும் கவனிக்கவிருக்கும்
இந்த வெற்றி அணிக்கு நல்வரவு கூறுங்கள்.

இன்று திறந்துவைக்கப்படும் எமது 183ஆவது வாடிக்கையாளர் நிலையம் யாழ்குடாநாட்டின் 7வது வாடிக்கையாளர் நிலையமாகும். HNB சாவகச்சேரி வாடிக்கையாளர் நிலையத்தின் அச்சாணியாக விளங்கும் இத் தொழில் நிபுணர்கள் உங்களுக்கு அதிசிறந்த வங்கிச் சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவார்கள்.

HNB சாவகச்சேரி
இல.184, கண்டி வீதி, சாவகச்சேரி.
எமது வங்கிச் சேவைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
021-3205757 அல்லது 021-3205758

HNB
உங்கள் முன்னேற்றத்தில் பங்காளி

SAATCHI & SAATCHI


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறைமை உருவாக்கப்படுவது அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 21

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறைமை உருவாக்கப்பட வேண்டும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தான் எழுதிய 'எதிர்காலத்தின் சவால்' என்ற நூலை கொழும்பிலுள்ள ஹுனுபிட்டிய கங்காராம விகாரையின் தேரர்களிடம் நேற்று முன்தினம் கையளித்தார். இந்த நூலிலேயே ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

அந்த நூலில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

ஜனாதிபதியானவர், அரசமைப்பைப் பாதுகாக்கும் கடமையைக் கொண்டிருப்பார். அதேநேரம், நாட்டில் தூய அரசியல் திட்டம் முன்வைக்கப்படுவதுடன், தேசிய சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

தேசிய கொள்கை வகுக்கப்படும் இதேவேளை, பொதுத்தேர்தல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமருக்கான தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பன ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நூலில் 25 வருட திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு -

எமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் நாம் எதிர்பார்த்த அளவு அதிகரிக்கவில்லை. உலகம் வேகமாக முன்னேறிவருகின்ற காலகட்டத்தில் இலங்கையில் வாழ்ந்தால் தமது எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வி இளைஞர் - யுவதிகள் மத்தியில் இன்று எழுந்துள்ளது.

இன்று நாம் எந்த வழிமுறையில் போகிறோம் என்று சிந்திக்க வேண்டியுள்ளது. இதன் மூலம் நீண்டகால கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் மூலம் நீண்டகாலத்திட்டம் ஒன்று உள்ளதா என்று ஆராய முடியும். அதனை அடுத்து அரசியல் கட்சிகளுக்கும் பொது மக்களுக்கும் அதனை நடைமுறைப்படுத்த முடியும் என்பதுடன் மாற்று நிகழ்ச்சித்திட்டத்தை முன்வைக்க முடியும் - என்றார்.

இதனை 25 வருடகால நீண்ட காலத் திட்டம் என்ற அடிப்படையின் தர்மமாக தாம் கருதுவதுடன் 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மாற்ற வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (சி)

# வலி. தென்மேற்கு பிரதேசசபையால் கேள்வி கோரல்

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம்,பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்புக் கிராமம் ஆகிக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றிற்கு 2010 ஆம் ஆண்டுக்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன. இவைகளை குத்தகைக்கு எடுத்து நடத்த விரும்புபவர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை அப்பிரதேச உப அலுவலகங்களைத் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம் என மேற்படி பிரதேசசபை அறிவித்துள்ளது.

(201-20)

# மிலிந்த மொரகொடவின் புதிய கட்சி

கொழும்பு,நவ.21

எதிர்வரும் தேர்தல்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கின்றமையை நோக்கமாகக் கொண்டு நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

அவர் இக்கட்சிக்கு ஸ்ரீலங்கா தேசிய காங்கிரஸ் என்று பெயர் சூட்டியுள்ளார். அவருடைய கட்சி ஜனநாயக விழுமியங்களை மதித்து நடக்கும் என்றும் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இக்கட்சியின் உருவாக்கம் குறித்துப் பொதுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளவற்றில் முக்கியமானவை வருமாறு:-

ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர் 2007 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்தனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அர்ப்பணிப்பு டன் செயற்படுகின்றமையை உணர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் இணைந்து கொண்டது. அந்த 17 பேரில் நானும் ஒருவன். இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவே இந்த 30 வருடகால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று நம்பியதால் நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்தேன்.

இப்போது எதிர்வரும் தேர்தல்களில் அவரை ஆதரிக்கின்றமையை நோக்கமாகக் கொண்டு ஸ்ரீலங்கா தேசிய காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்துள்ளேன்-என்றார்.

# தேர்தலில் யார் வேட்பாளராக குதித்தாலும் அரசு அஞ்சாது

## ஊடக அமைச்சர் யாப்பா கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

எந்தவொரு தேர்தலைக் கண்டும் அரசு பயப்படவில்லை - என்று அமைச்சரவை பேச்சாளரும், ஊடக அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

எவர் வேட்பாளராக களம் இறங்கினாலும் அவர்களை கண்டு தாங்கள் அச்சமடையப் போவதில்லை எனவும் அவர் தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதிகள் பலரை உருவாக்கிய, அரசமைப்பை மாற்றிய, நாட்டுக்கு சுதந்திரத்தை வாங்கிக்கொடுத்த ஐக்கிய தேசியக் கட்சி இன்று எவ்விதமான நோக்கமும் இன்றி செயற்படுகிறது எனவும் அவர் இதன் போது குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான ஐக்கிய தேசியக் கட்சி, தமது வேட்பாளரைக் கேட்டால் தேர்தல் தினத்தை அறிவிக்குமாறு கோருகிறது எனவும் அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடக அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா குறிப்பிட்டார். (சி)

# 1000 ரூபா தாள் வெளியீட்டுக்கு எதிராக தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு

கொழும்பு, நவ. 21

அண்மையில் வெளியிடப்பட்ட 1000 ரூபா நாணயத்தாள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர, தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

30 வருட யுத்த நிறைவை நினைவு கூறும் வகையில் ஆயிரம் ரூபா நாணயத்தாள் ஒன்றை இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியீடு செய்திருந்தது.

இந்த நாணயத்தாளில் ஜனாதிபதி யின் உருவப்படம் அச்சிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் தறுவாயில் இவ்வாறான உருவப் படத்துடன் கூடிய நாணயத்தாள் வெளியீடு தேர்தல் சட்டங்களுக்குப் புறம்பானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயிர் வாழும் நாட்டுத் தலைவர் ஒருவரது உருவப்படம் இதற்கு முன்னர் இலங்கையில் நாணயத் தாள்களில் பயன்படுத்தப்படவில்லை எனவும், இது ஓர் ஜனநாயக விரோதச் செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

# வடக்கு, கிழக்குக்கு ஜப்பானியர் செல்ல அந்நாட்டு அரசு அனுமதி

கொழும்பு, நவ. 21

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு தமது நாட்டு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு விடுக்கப்பட்டிருந்த தடையை, ஜப்பான் அரசு நீக்கியுள்ளது என கொழும்பில் உள்ள ஜப்பான் தூதரகத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அனுமதியின்றி செல்வதற்கு தடை என, ஜப்பானிய பிரஜைகளுக்கு ஜப்பான் அரசு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், நாட்டில் தற்போது சுமுக நிலை காணப்படுவதாக அறிவித்து வடக்கு, கிழக்குக்கான பயணக் கட்டுப்பாடுகளை இலங்கை அரசு தளர்த்தியுள்ள நிலையில், தமது நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விதித்திருந்த தடை ஜப்பானாலும் நீக்கப்பட்டுள்ளது. (சி)

# எஸ்.பி. அரசுடன் இணையவுள்ளாரென்ற தகவல் பொய்யானது என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 21

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளார் என வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானதென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை, சில பௌத்த பிக்குமார் அரசுடன் இணைந்து கொள்ளுமாறு தம்மிடம் கோரினர் எனவும், தாம் அந்தக் கோரிக்கைகளை நிராகரித்தனர் எனவும் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசுடன் தொடர்புடைய பலர் தம்முடன் தொலைபேசி மூலம் உரையாட முயற்சி செய்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சுப் பதவிகளைத் துறந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிய தாம் மீண்டும் அந்தக் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதில்லை எனவும், சில ஊடகங்களில் தவறான செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

# துணுக்காய், மடுப் பிரதேச ஊழியர்களை பணிக்கு திரும்புமாறு அறிவுறுத்து

கிளிநொச்சி, துணுக்காய்,மடுப்பிரதேச பாடசாலைகள் மீளஇயங்க ஆரம்பித்துள்ளதால் அங்கு பணியாற்றிய ஆசிரியர்களும், வன்னிப் பகுதியிலுள்ள சில உள்ளூராட்சி மன்றங்கள் இயங்க விருப்பதால் இவற்றில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் அங்கு கடமைக்குச் செல்ல வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்வு இடம் பெற்ற மடுப் பகுதியில் 11 பாடசாலைகளில் ஆயிரத்து 500 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கென 68 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். பூநகரிப் பகுதியில் 9 பாடசாலைகளில் 410 மாணவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களும் கல்விகற்று வருகின்றனர். இப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு இப்பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கும்போது அங்கு செல்லத்தயாராக இருக்க வேண்டும் என வடக்கு மாகாணகல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது அலுவலகத்துக்குள் செல்வதுடன் அங்கேயே இம்மாதச் சம்பளத்தைப் பெறவேண்டும்என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4-235)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விஞ்ஞான மன்றத்தினர் நேற்று முன்தினம் விஞ்ஞான தினமும் 'மத்திய ஆய்வாளன்' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வையும் நடத்திய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் அதிபர் எஸ். ஓங்காரமூர்த்தி விருந்தினர்களை அழைத்து வருவதை முதலாவது படத்திலும், 'மத்திய ஆய்வாளர்' சஞ்சிகையை கல்லூரி அதிபர் எஸ்.ஓங்காரமூர்த்தி வெளியிட்டு வைக்க சம்பத் வங்கி யாழ். கிளை முகாமையாளர் சி.சங்கர் பெற்றுக் கொள்வதனை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட ஐ.நா.அபிவிருத்தித் [illegible] அபிவிருத்தி பொறுப்பதிகாரி கே.வி.நிஷாந்தன் உரைநிகழ்த்துவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்து[illegible]ளையும் [illegible].

(படங்கள் அனு, சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - மட்டக்களப்பு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

* **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துச்சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. ''கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை'' இங்கு கேளிர் என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
1) கேட்பவர். 2) உறவினர். 3) பகைவர். 4) நல்லவர்.

02. ''திருவோலக்க மண்டபத்தில் கீர்த்தி மிக்க இசைவல்லுநர்கள் இருந்தனர்.'' கீர்த்தி என்பதன் எதிர்பொருட்சொல்,
1) அபகீர்த்தி. 2) வல்லமை. 3) புகழ். 4) சக்தி.

03. ''சக்கரவர்த்தியின் ஆசை விரைவில் நிறைவேற வேண்டும்.'' ஆசை என்பதன் எதிர்ப்பொருட்சொல்,
1) நசை. 2) பேராசை. 3) விருப்பம். 4) நிராசை.

04. ''அகந்தை கொண்ட சந்நியாசி வெட்கம் அடைந்தார்.'' அகந்தை என்பதன் எதிர்க் கருத்துச்சொல்,
1) பணிவு. 2) முனிவு. 3) கனிவு. 4) செருக்கு.

05. சுனாமி (Tsunami) என்பதற்குரிய தமிழ்ச்சொல்,
1) கடல்கோள். 2) பேரலை. 3) பூகம்பம். 4) துறைமுகம்.

06. கண்திறந்தது என்ற மரபுத்தொடரின் கருத்து
1) நித்திரை விட்டெழல். 2) மேற்பார்வையிடல்.
3) கூர்ந்து நோக்குதல். 4) அறிவுண்டாதல்.

07. வீண்பாடுபடுதல் என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்,
1) சுற்றி வளைத்தல். 2) ஈயோட்டுதல்.
3) பசையடித்தல். 4) விழலுக்கிறைத்தல்.

08. ''கரும்பு தின்னக் கைக்கூலியா'' என்ற பொருள் தரும் பழமொழி,
1) தடி கொண்டடித்தா சுவர்க்கத்திற்கு விரட்ட வேண்டும்.
2) கிட்டாதாயின் வெட்டென மற.
3) ஊர் கூடிச் செக்குத் தள்ளவேண்டுமா?
4) கண் கெட்டபிறகு சூரிய வணக்கமா?

09. போலியாக அனுதாபம் காட்டல் என்ற கருத்துத் தரும் பழமொழி,
1) நீலிக்குக் கண்ணீர் நெற்றியிலே.
2) வேலிக்கு ஓணான் சாட்சி சொல்கிறது.
3) ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறது.
4) பாம்பின் கால் பாம்பறியும்.

10. ஒட்டியுலர்ந்து என்னும் இணைமொழியின் பொருள் தரும் வேறோர் இணைமொழி,
1) உருண்டு திரண்டு. 2) வாட்டசாட்டம்.
3) கலந்து பகிர்ந்து. 4) எலும்புந் தோலும்.

* **பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லை தெரிவுசெய்க.**

11. கடல்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் ............................. வழங்கியது.
1) காப்பீடு. 2) மானியம். 3) சன்மானம். 4) இழப்பீடு.

12. பொது நன்மைக்காக உழைப்பவர் ............................. இருத்தலாகாது. என்பதற்குப் பொருத்தமான விடை.
1) நடுநிலையாளராக. 2) பக்கச்சார்பாக.
3) நீதியானவராக. 4) பாரபட்சமற்றவராக.

13. ''சப்பாத்து'' என்பது ............................. மொழிச்சொல்.
1) ஒல்லாந்து. 2) பாளி. 3) ஆங்கிலம். 4) உருது.

14. ''அப்புக்காத்து'' என்பதற்குப் பதிலாக இன்று வழங்கும் சொல்,
1) நீதியார். 2) சட்டத்தரணி. 3) முதலியார். 4) நீதிபதி.

15. Keyboard என்பதற்குரிய தமிழ்ச்சொல்,
1) சாவிப்பலகை. 2) திறப்புப்பலகை.
3) விசைப்பலகை. 4) கணினிப்பலகை.

16. தென்னைகளின் கூட்டம் தோப்பு என்பது போல முத்துக்களின் கூட்டம்,
1) குவியல். 2) கும்பம். 3) பொதி. 4) குவை.

17. விமானத்துக்கு வலவன் போல தேருக்கு.
1) ஓட்டி. 2) பாகன். 3) நடத்துனன். 4) மீகாமன்.

18. தவளை கத்துவது போல ஆந்தை,
1) முக்கும். 2) அலறும். 3) இரையும். 4) முரலும்.

19. ''முல்லைக்காரன்'' என்பது,
1) வடக்குக் கிளைமொழி. 2) தெற்குக் கிளைமொழி.
3) மலையகக் கிளைமொழி. 4) கிழக்குக் கிளைமொழி.

20. பின்வருவனவற்றுள் பெயராக மட்டும் பயன்படுத்தக்கூடிய சொல்,
1) சேடி. 2) செல். 3) பிடி. 4) ஓடு

21. பின்வருவனவற்றுள் செயற்படுபொருள் குன்றிய வினை.
1) எழுது. 2) சிரி. 3) பாடு. 4) உண.

22. உண்ணாக்கு என்பதைப் பிரித்தெழுதும் முறை,
1) உண் + நாக்கு. 2) உண் + ஆக்கு. 3) உன் + ஆக்கு. 4) உள் + நாக்கு.

23. தண்மை + தலை என்பதைப் புணர்த்தி எழுதினால் வருவது,
1) தண்டலை. 2) தண்தலை. 3) தண்மையலை. 4) தண்றலை.

24. வலி, வழி, வளி என்பவற்றின் கருத்தை ஒழுங்கு வரிசையில் காட்டுவது,
1) துன்பம், காற்று, பாதை. 2) பாதை, துன்பம், காற்று.
3) காற்று, துன்பம், பாதை. 4) துன்பம், பாதை, காற்று.

25. அம்மா தொட்டிலை ஆட்டினாள் என்பதில் இடம்பெற்றது,
1) தன்வினை. 2) பிறவினை. 3) எச்சவினை. 4) கூட்டுவினை.

26. தங்கத்தால் செய்த காப்பு என்பதில் மூன்றாம் வேற்றுமை உருபு உணர்த்தும் பொருள்,
1) மூலப்பொருள். 2) காரணப்பொருள்.
3) கலப்புறு பொருள். 4) கர்த்தாப் பொருள்.

27. துக்க சாகரத்தில் நாடு மூழ்கியது என்பதில் இடம்பெற்ற அணி,
1) உவமை அணி. 2) உருவக அணி.
3) தற்குறிப்பேற்ற அணி. 4) உயர்வுநவிற்சி அணி.

28. காராட்டை வெள்ளாடு என்பது,
1) மரூஉ. 2) இடக்கரடக்கல். 3) குழூஉக்குறி. 4) மங்கலம்.

29. கூட்டுப் பெயராக்கத்தில் இரண்டு சொற்களை இணைப்பதற்குப் பயன்படும் பகுபத உறுப்பு,
1) பகுதி. 2) சந்தி. 3) விகுதி. 4) சாரியை.

30. ஒன்றரை என்பது,
1) வினைத் தொகை. 2) வேற்றுமைத் தொகை.
3) உம்மைத் தொகை. 4) பண்புத்தொகை.

31. சரியாக நிறுத்தற்குறி இடப்பட்ட தொடர் எது?
1) ஆகவே, உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல், என்ற ''வள்ளுவர் வாய் மொழியை'' நாம் மறத்தலாகாது என்றார் விரிவுரையாளர்.
2) ''ஆகவே'' உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற வள்ளுவர் வாய் மொழியை'' நாம் மறத்தலாகாது என்றார் விரிவுரையாளர்.
3) ''ஆகவே, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற வள்ளுவர் வாய் மொழியை நாம் மறத்தலாகாது'' என்றார் விரிவுரையாளர்.
4) ''ஆகவே, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற வள்ளுவர் வாய் மொழியை நாம் மறுத்தலாகாது'' என்றார் விரிவுரையாளர்.

32. மக்கத்துச் சால்வையில் இடம்பெற்ற,
1) ஒவ்வொரு சிறுகதையும் தனித்துவமானது.
2) ஒவ்வொரு சிறுகதைகளும் தனித்துவமானது.
3) ஒவ்வொரு சிறுகதையும் தனித்துவமானவை.
4) ஒவ்வொரு சிறுகதைகளும் தனித்துவமானவை.

33. மாணவர்களுக்கு தேடலும், பணிவுமே,
1) வெற்றியைத் தரும். 2) வெற்றியைத் தருவன.
3) வெற்றிகளைத் தரும். 4) வெற்றிகளைத் தருவன.

34. சந்திரன் பூமியைச் சுற்றிவர,
1) பூமி சுழன்று கொண்டு ஆண்டுக்கொரு முறை சூரியனைச் சுற்றி வருகிறது.
2) பூமி சுழன்று கொண்டு ஆண்டுக்கொரு முறை சூரியனில் சுற்றி வருகிறது.
3) பூமி சுழன்று கொண்டு ஆண்டுக்கொரு முறை சூரியனைச் சுற்றி வந்தது.
4) பூமி சுழன்று கொண்டு ஆண்டுக்கொரு முறை சூரியனைச் சுற்றி வரும்.

35. இலக்கண வழுவற்ற வாக்கியம்,
1) பரீட்சையில் சித்திபெற்ற ஒவ்வொரு மாணவர்களும் பாராட்டப்பட்டனர்.
2) பரீட்சையில் சித்திபெற்ற ஒவ்வொரு மாணவனும் பாராட்டப்பட்டனர்.
3) பரீட்சையில் சித்திபெற்ற ஒவ்வொரு மாணவரும் பாராட்டப்பட்டார்.
4) பரீட்சையில் சித்திபெற்ற ஒவ்வொரு மாணவனும் பாராட்டப்பட்டனர்.

* **பின்வரும் செய்யுளை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

கோவிலில் மணிகளார்ப்பக் குயிலினம் வரவு கூறச்
சேவல்கள் சிறகுதட்டிச் செகத்தினை விழிக்கச் செய்யப்
பாவிய ருள்ளம் போலும் கங்குலும் பதுக்கங் கொள்ளத்
தேவர்க்குந் தேவனாவான் பகலவன் தேரில் வந்தான்.

36. இக்கவிதையில் கவிஞர் வர்ணிக்கும் காட்சி யாது?
1) சூரியோதயக் காட்சி. 2) சந்திரோதயக் காட்சி.
3) சூரியஸ்தமனக் காட்சி. 4) மாலைக்காட்சி.

37. செகத்தினை விழிக்கச் செய்தது யாதெனக் கவிஞர் கூறுகின்றார்?
1) பகலவன். 2) கோவில் மணி. 3) குயிலினம். 4) சேவல்கள்.

38. ''பாவியருள்ளம்'' எப்படிப்பட்டது எனக் கூறப்படுகிறது?
1) கொடுமையானது. 2) இருண்டது.
3) பொய்யானது. 4) மயக்கமானது.

39. ''கங்குல்'' என்பதன் பொருள்,
1) இருள். 2) பாவியர். 3) இரவு. 4) கள்வர்.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.
அ - முயற்சியில் இரண்டு வகையுண்டு. ஒன்று அறிவு முயற்சி; மற்றொன்று உடல் முயற்சியாகும்.
ஆ - பொதுவாக அறிவு முயற்சியைக் ''கலை'' என்றும், உடல் முயற்சியைத் ''தொழில்'' என்றும் குறிப்பிடுவர்.
இ - வாழ்க்கைக்கு முயற்சி கட்டாயமாகும்.
ஈ - ஆகவே, வாழ்க்கை வளம் நிறைந்ததாக அமைய வேண்டுமெனின் தொழிலும் கலையும் அவசியமாகும்.
உ - உடனலத்தைப் பேணுவதற்குத் தொழில் இன்றியமையாதது. எனின், உள்ளத்தின் செழுமையைப் பேணுவதற்குக் கலை இன்றியமையாதது.
1) அ, ஆ, உ, இ, ஈ 2) ஆ, உ, ஈ, அ, இ
3) ஈ, இ, அ, உ, ஆ 4) இ, அ, ஆ, உ, ஈ

ஆசிரியர் : திரு.M.இராசரத்தினம் (முன்னாள் அதிபர்),
மட்டக்களப்பு இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு.
தொலைபேசி இலக்கம்: 065-2225062


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



வல்வை றோ.க.த.க. பாடசாலையில் ஆசிரியர் தினம் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிபரும், ஆசிரியர்களும் ஆசிரியர் கீதம் இசைப்பதையும், வல்வை ஒன்றியத் தலைவர் மு.தங்கவேல் வாழ்த்துரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (50-224)





சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மரம் நடுகைத் திட்டம் அண்மையில் கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் லயன் இ.சிவஞானம் மரக்கன்றினை நடுவதையும் அருகில் அதிபர் ப.செல்லத்துரை நிற்பதையும் காணலாம். (50-207)



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் அண்மையில் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோட்டக்கல்வி அதிகாரி கு.சிவானந்தம் அவரது பாரியார் மற்றும் பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (50)



கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்திற்கு கணனித் தொகுதி ஒன்றை யாழ்.வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ கமல்ராஜ் குருக்கள் அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்தக் கணனியை பாடசாலை மாணவன் ஒருவர் இயக்குவதனையும் [illegible] த.மோகன்ராஜ், குருக்கள் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (50)



உலக முதியோர், சிறுவர் தின விழா அண்மையில் மக்கள் வங்கியின் பிரதான வீதிக்கிளை, சிற்றி மிஷன் திருச்சபை ஆகியவற்றில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதான வீதிக்கிளை பிரதி முகாமையாளர் த.சிவகுமார் முதியவர் ஒருவருக்குப் பரிசு வழங்குவதனையும், மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளை முகாமையாளர் வ.ச.முதலி சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச்சபை லண்டன்-புங்குடுதீவு அன்னை சி.பார்வதி அமைப்பகம் ஆகியன வழங்கிய நிதிமூலம் வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து மீள்குடியேறி புங்குடுதீவுப் பாடசாலைகளில் இணைந்துள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

வட இலங்கை சர்வோதயத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி அபிவிருத்திச் சபையின் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் மாணவன் ஒருவனுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குவதைக் காணலாம்.





புங்குடுதீவு ஸ்ரீகணேசா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வாணிவிழா - பரிசளிப்பு விழாவின்போது கலைநிகழ்வுகளில் மாணவிகளின் நடன நிகழ்வை காணலாம்.



கொக்குவில் இந்துக்கல்லூரியின் விஞ்ஞானதின விழாவும் ''சாரதி'' இதழ் வெளியீடும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் [illegible] விளக்கேற்றுவதையும் அருகில் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், 'சாரதி' இதழாசிரியர் செல்வன் [illegible], பொறுப்பாசிரியர் ந.கந்தவனச் செல்வன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லா மொழிகளிலும் இணைய முகவரி

இணையத் தள முகவரிகளை இன்றளவிலும் ஆங்கிலத்தில் தான் அமைத்து வருகின்றோம். இதனை மற்ற மொழிகளிலும் அமைத்து இயக்கும் காலம்வெகுவிரைவில் வர இருக்கிறது.இன்று நாம் பயன்படுத்தும் 'இன்ரர் நெற்' உண்மையிலேயே உலக மக்கள் அனைவரினதும் சொத்து. யாரும் 'இன்ரர் நெற்றை' அணுகலாம். தகவல்களைத் தேடலாம். அவர்கள் மொழியில் தளங்களை அமைக்கலாம். சில நாடுகள் ' இன்ரர் நெற்' இணைப்பினை மனிதனின் அடிப்படை உரிமையாகவும் தேவையாகவும் பிரகடனப்படுத்தி உள்ளன. அப்படியானால் ஏன் இன்னும் இணையத்தள முகவரிகளை ஆங்கிலத்தில் மட்டுமே அமைத்து வருகிறோம்? அனைத்துலக மொழிகளிலும் ஏன் அமைக்கக் கூடாது? இன்ரர்நெற்றை உலகளாவிய அளவில் 160 கோடி பேர் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களில் பாதிப்பேருக்கு ஆங்கிலம் அந்நிய மொழியாகும். எனவே தான் காலத்தின் கட்டாயத்தில் இணைய முகவரிகளை ஆங்கிலம் அல்லாத மொழிகளிலும் அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இன்ரர் நெற்றின் 40 ஆண்டுகால வரலாற்றில் இது ஒரு பெரும் திருப்பு முனையாகும். தொழில் நுட்ப வசதிக்காகத்தான் நாம் ஆங்கில எழுத்துக்களில்இணையத்தள முகவரிகளை உருவாக்கி வருகிறோம்.

அடிப்படையில் 'இன்ரர்நெற்' முகவரிகள் எண்களில்தான் உள்ளன. நாம் அதனை மனதில் கொண்டு பயன்படுத்த முடியாது என்பதால்தான் ஆங்கிலச் சொற்களைத் தொடக்க காலம் தொட்டுப் பயன்படுத்தி வருகிறோம். இணையத் தளங்களின் பெயர்கள் எப்படி அமைய வேண்டும் என்பதனைInternet Corporation for Assigned Names and Numbers (icann-ஐகான் )என்ற அமைப்புத்தான் வரையறை செய்து வருகிறது. இதுவரை ஆங்கிலத்தில் தான் வெப்சைட் முகவரிகள் இருக்க வேண்டும் எனக்கூறி வந்த இந்த அமைப்பு, அண்மையில் தென்கொரியா, சீயோல் நகரில் நடந்த கூட்டத்தில் மற்ற மொழிகளிலும் முகவரிகள் இருக்கலாம் என்ற அறிவிப்பினை வெளியிட்டது. இந்த மாற்றத்தை வரவேற்ற பலர் இன்ரர்நெற் செயல்பாட்டில் இது மாபெரும் தொழில் நுட்பமாற்றத்தைக் கொண்டு வரும் என்று கருத்து தெரிவித்துள்ளனர். ஆங்கிலம் அல்லாத மற்ற மொழிகளில் முகவரிகள் அமைக்கப் பட்டால், இன்ரர்நெற் இன்னும் பல கோடி மக்களைச் சென்றடையும். எந்த மொழியில் அமைக்கப்பட்டாலும் ,இன்ரர்நெற் முகவரியின் இறுதிச் சொல் com,gov,co.uk,cn போன்ற ஒன்றில்தான் முடிவடைய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இன்ரர்நெற் முதன் முதலில் அமெரிக்க நாட்டில் தான் செயல்படுத்தப்பட்டது.அங்கு ஆங்கில மொழிச் சொற்களில் தான் முகவரிகளை அமைத்தனர். அதுவே உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்ரர்நெற் பயன்பாடு வேகமாகப் பரவி வரும் இந்நாளில், அதுவே பொருளாதார மேம்பாட்டின் ஓர் அங்கமாக இயங்கும் இக்காலத்தில் பிறமொழிகளையும் இன்ரர்நெற்றில் ஏற்றுக் கொள்வது அவசியம் என்று இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பிற மொழிகளில் முகவரிகள் அமைத்திட 'ஐகான்' அமைப்பு விண்ணப்பங்களைப் பெறஇருக்கிறது. அனேகமாக முதலில் சீன, அரேபிய மொழிகளுக்குத்தான் இந்த அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனா மற்றும் தாய்லாந்து நாடுகளில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு ஓரளவில் இயங்கி வருகிறது.இந்த அனைத்து மொழி மாற்றம், இன்டர்நெற் பயன்பாட்டிலும், உலகப் பொருளாதார வளர்ச்சியிலும் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணும் என்பதே பலரது எதிர்பார்ப்பாகும்.




தொகுப்பு: ஒவ்வயன்

# ஒரு புதிய கலாச...




ஞாயிற்றுக் கிழமை ஆதலால் 'கசூரினா' கடற்கரையில் சனக்கூட்டத்திற்குப் பஞ்சமில்லை. குறிப்பாக இளைஞர்கள் அங்கு பரவி நின்றவாறு கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர்.

முற்பகல் 10 மணிக்கு மினிபஸ் ஒன்றில் வந்து இளைஞர் குழுவொன்று இறங்கியது.

அதில் இருந்து நான்கு கேஸ் சாராயத்தையும் இறக்கினார்கள். கடற்கரையில் குளித்துவிட்டு அடுத்தகட்ட நகர்வுக்காக சாராயப்போத்தல்களை கையில் எடுத்தவாறு அந்த இடத்தில் ஒரு வட்டமாக குழுமியிருந்தார்கள்.

இந்தக்குழுவில் வந்த அனைத்து இளைஞர்களும் ஏ.எல் படிக்கக்கூடிய வயதினையுடையவர் போலக்காணப்பட்டனர்.

ஆனால் அந்த இளைஞர் குழுவினரை ஒருவர் தலைமை தாங்கி வழிப்படுத்திக் கொண்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது.

அவரை அந்த இளைஞர்கள் ''சேர் சேர்'' என்று அழைப்பது எங்கள் காதில் விழுந்தது.

ஆச்சரியமாய் இருந்தது. அத்துடன் அருவருப்பாயும் இருந்தது. என்ன வாத்தியாரோ படிக்கிற பொடியளோட சேர்ந்து இஞ்சை தண்ணியடிக்கிறார் என்று சினந்து கொள்ளக்கூடியதாயிருந்தது.


அந்தக் குழுவினரைப் பற்றி விசாரிக்க மனம் ஆதங்கம் கொண்டது.

அது யாரென்று தானே நீங்களும் அறிய ஆசைப்படுகிறீர்கள்? யாழ்ப்பாணத்தில் புறநகர்ப்பகுதியில் உள்ள ''ரியூசன்'' ஒன்றின் இயக்குநர் அத்துடன் அவர் ஒரு ஆசிரியர். தனது கல்வி நிறுவனத்தில் தன்னிடம் கற்கும் மாணவர்களுடன் சாராயப் போத்தல்களையும் கொண்டுவந்து ''ஜாலியாய்'' மாணவர்களுடன் சரி சமமாய் இருந்து தண்ணியடிக்கிறார்?

பார்த்தீர்களா? வாசித்தீர்களா? விடயத்தை... யாழ். மாவட்டத்தில் உள்ள மாணவச் செல்வங்கள் புரிகின்ற சாதனைக்குத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு நிறைவான பங்கு உண்டு என்று சொன்னால் அது யாரும் மறுக்க முடியாத யதார்த்தம்.

அந்தளவிற்கு மாணவ சமுதாயம் பாடசாலைகளை விட தனியார் கல்வி நிறுவனங்களையே நம்பியுள்ளார்கள்.

இந்நிலையில் தனியார் கல்வி நிறுவனங்கள் பல புதிது புதிதாய் முளைத்து போட்டா போட்டியுடன் இயங்கி வருகின்றன.




எதிரான கல்வி நிறுவ...

இலட்சக்கணக்கான பணங்கள...
கல்வி நிறுவனங்களை அமைத்து...
எதிர்கால முதல்களாக விளங்குக்...

தனியார் கல்வி நிறு...
சொல்லவரவில்லை ஒரு சில த...

இதனால் கட்டமைப்பு, ஒழுக்க...
நிறுவனங்களுக்கும் ஃவப்பெயர்...
விஷம்' என்பது போல. எ...
வேண்டும்.மாணவ சமுதாயமும்...

# புவியும் மனிதனும்

நாம் வாழும் பூமி நீர்,வளி, நிலம் ஆகிய மூன்றாலும் இணைந்து உருவானது இத்தகு தன்மை வாய்ந்த புவி, பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவானதாக நம்பப்படுகின்றது. புவியில் வேறெந்த கோள்களுக்கும் இல்லாத பல தனித்த சிறப்பியல்புகள் உள்ளன. நமது புவி உயிரினங்கள் வாழக்கூடிய சூழலைக் கொண்டுள்ளது. அத்தோடு பலவித' தாவரங்களின் நிலவுகைக்கும் நிலைக்களமாக அமைந்துள்ளது. சிறப்பான வளிமண்டல போர்வையை கொண்டுள்ளது. உவப்பான நீர் வளத்தை சுரந்துகொண்டிருக்கின்றது. பலவித கனியங்களின் களஞ்சியமாக உள்ளது. இன்னும் பல புதுமைகளையும் சிறப்பியல்புகளையும் நமது புவி கொண்டுள்ளது. புவி உருவாகி பல்லாயிரக்கணக்கான வருடங்களின் பின்பே புவியில் உயிரினங்கள் தோன்றியதாக நம்பப்படுகின்றது. அதிலும் மனிதன் படிப்படியாக கூர்ப்படைந்து நீண்டகால இடைவெளியின் பின்பே உருவானான். புவியின் தோற்றத்துடன் மனிதன் தோன்றிய காலத்தினை ஒப்பிடின் மிகவும் சிறியதொரு காலப்பகுதியே ஆகும்.

அவ்வாறான வரலாற்றுக்காலம் கொண்ட மனிதன் புவியில் எத்தனை மாறுதல்களை ஏற்படுத்தி விட்டான்; எத்தனை காரியங்களை மேற்கொண்டு விட்டான்; மனிதனின் தேவைகளின் விரிவும், கண்டுபிடிப்புகளும் நாகரிக விருத்தியும் அவனை புவியின் வளங்களை வரையறையின்றி நுகரச் செய்தன. இவ்வாறான செயற்பாட்டினால் ஏற்பட்ட விளைவுகளில் பல பாரதூரமான அம்சங்கள் உள்ளன. புவியின் வளங்களைச் சூறையாடியும் பல்வேறு உயிரினங்களை அழித்தும் நிலத்தோற்றங்களை மாற்றியமைத்தும் தாவரப் போர்வையினை அழித்தும் பலவித அநியாயங்களை புவிக்கு மனிதன் செய்துள்ளான். தனது அன்னைக்குத்தானே ஊறுவிளைவித்து அழிவினை வகுக்கின்றான். இச்சந்தர்ப்பத்தில் சியாற்றல் அவர்களின் கூற்றுக்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. மனிதன் புவிக்கு செய்யும் தீமைகள் தன் இறைவனுக்குச் செய்யும் துரோகங்களாகும் என்னும் சாரப்பட கூறினார். அந்தப் பழங்குடித் தலைவனுக்கு ''காட்டுமிராண்டி'' என்று வெள்ளையர்களால் அழைக்கப் பட்டவனுக்கு இருந்த சூழல் மீதான பாசம் அப்பொழுது வாழ்ந்த ''நாகரிகமான'' வெள்ளையர்களுக்கு இருக்கவில்லை.

''அவர்களது பசி இந்த நிலம் அனைத்தையும் விழுங்கிவிட்டு வெறும் பாலைவனத்தை மட்டும் விட்டுச் செல்லப்போகின்றது'' என சியாற்றல் அவர்கள் கூறியது முற்றும் உண்மையே. அது சகல மனிதர்களுக்கும் பொருத்தமான கூற்றேயாகும்.

மனிதன் தோன்றி நெடுங்காலமாக வளர்ச்சி பெற்று 18 ஆம் நூற்றாண்டளவில் பெரும் புரட்சிகளை நிகழ்த்தினான். அவையாவன, அரிய கண்டுபிடிப்புகளும், புதிய கண்டுபிடிப்புகளும், கைத்தொழில் புரட்சி ஏற்படுத்தியமை, விஞ்ஞான விருத்தி, அறிவியல் வளர்ச்சி என்பனவாகும். இவற்றின் விளைவாக 18ஆம் நூற்றாண்டோடு புவி வளங்களின் நுகர்வும், புவி மாசடைதலும், அழிவுகளும் துரிதப்படுத்தபட்டன. இதனால் மனிதனின் எதிர்கால நிலவுகை கேள்விக்குறியாகி வருகின்றது. மனிதன் தன் சந்ததியை பற்றி எண்ணவில்லை. தன்னைப் பற்றி மாத்திரமே எண்ணிக் கொள்கின்றான். மனிதனின் புரட்சிகளும்,புதுமைகளும் அவனது அழிவுக்கு அத்திபாரம் போட்டுக்கொண்டிருக்கின்றன. தீயைக்கண்டு பிடித்து காட்டை முதன்முதலில் எரித்துக் கொண்ட மனிதன், போகப்போக பலவிதமான அழிவுகளையும் புவியன்னைக்கு செய்து வந்தான். நாமெல்லாம் கடுகதியில் அடித்துப் பிடித்து ஆரவாரம் செய்து புவித்தாயை அழித்து விட்டு பிற்பாடு என்ன செய்யப்போகின்றோம். நிகழ்கால சந்ததி பெறும் தேவைகளும்,சொகுசுகளும் எதிர்கால சந்ததிக்கு கிடைக்க வேண்டாமா? நமது பிள்ளைகள் புவியில் என்ன செய்யப்போகிறார்கள். அவர்களும் அழிக்க கொஞ்சமாவது நாம் விட்டுச் செல்ல வேண்டாமா? பாலைவனங்களையும், வெறும் வெளிகளையும், வெற்றுக்கூடுகளையும் தானா விட்டுச் செல்லப் போகின்றோம். நமக்குக் கிடைக்கும் வசதிகளில் கால்பங்கையாவது எதிர்காலத்திற்கு வழங்க வேண்டாமா? நாம் நமது தலையில் நாமே மண்ணைப் போட்டுக் கொள்கின்றோம். புவி தோன்றி பல்லாயிரம் மில்லியன் வருடங்கள் இருந்த சமநிலைத்தன்மையும், வளமும் சில நூறு வருடங்களில் எம்மால் காவு கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் விளைவுகள் எண்ணற்றவை.

நம் தாய்க்கு நாமே பல நோய்களை ஏற்படுத்தி வருகின்றோம். புவித்தாய்க்கு செய்த துரோகங்கள் எத்தனை பல பயங்கரமான விளைவுகள். வளி மாசடைகின்றது, நீர் மாசடைகின்றது, நிலம் மாசடைகின்றது, காபனீரொக்சைட் அதிகரிக்கின்றது, ஓசோன் படை துளைக்கபடுகின்றது, வரட்சி பெருகுகின்றது, பாலைவனமாதல் பெருகுகின்றது,கோளவெப்பமயமாதல், தாவர அழிவு,உயிரின அழிவுகள், சூழல் தொகுதிகளின் அழிவு, தொற்று நோய்கள் எனப் பலதரப்பட்ட நோய்கள் நம் புவித்தாய்க்கு ஏற்படுகின்றன. ஆதிகாலம் முதல் புவியிடம் தன் தேவைகளைப் பெற்று விட்டு மனிதன் புவிக்கே துரோகமிழைத்து வருகின்றான். கண்டுபிடிப்புகளும் விஞ்ஞானமும் எவ்வளவு தூரம் அவனை காப்பாற்றும். நிச்சயம் ஒருநாள் அழிவு நிகழத்தான் போகின்றது. புவியின் நோய்களைத் தீர்க்க சில மனிதர்கள் சிந்திக்கின்றார்கள். கொள்கை அளவில் தீர்வுகளைக் கூறுகின்றார்கள். என்றாலும் செயற்படுத்துவது மிக அரிதே. போட்டி, மனிதனை சூழலை நேசிக்க இடம் தரவில்லை. போட்டி போட்டு முன்னேற்றமடையும் மனிதனுக்கும் முன்னேற துடிக்கும் மனிதனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாசாரம் ?



போட்டி நிறைந்த இக்காலகட்டத்தில் தமது கல்வி நிறுவனங்களை மாணவர் வசப்படுத்துவதற்கு குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவர்களோடு நிர்வாகிகள் தோளுக்கு மேல் கைபோட்டு சுற்றுலா என்றெல்லாம் அழைத்துச் சென்று தவறான பாதைக்கு அவர்களை திசை திருப்புகிறார்கள். அத்துடன் அதே மாணவர்களைக் கொண்டு தமக்கு

...ான கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் மீது வன்முறையைத் தூண்டி அடியாள்களாக கூட பயன்படுத்துகிறார்கள்.

...ங்கான பணங்களைச் செலவழித்து பெரும் முதலீடுகளையிட்டு தனியார் ...ங்களை அமைத்துள்ளவர்கள் தமது சுயலாபத்திற்காக எமது சமூகத்தின் ...களாக விளங்குகின்ற நிகழ்கால மாணவர்களைத் தவறான பாதைக்குத் திசைதிருப்புவதை நாம் அனுமதிக்கக்கூடாது.

...ியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் இவ்வாறானது என்று இங்கு ...ல்லை ஒரு சில தனியார் கல்வி நிறுவனங்கள் இத்தகைய கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுகின்றன.

...மைப்பு, ஒழுக்கம், என்ற தனித்துவத்தோடு இயங்கும் தனியார் கல்வி ...ம் அவப்பெயர் ஏற்படுகிறது. ஏனெனில் 'ஒரு குடம் பாலுக்கு ஒருதுளி ...ன்பது போல. எனவே இது விடயத்தில் பெற்றோரும் விழிப்பாக இருக்க ...வ சமுதாயமும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். திருந்துவார்களா அவர்கள்? உணர்வார்களா இவர்கள்.

---

சூழலையும் புவியையும் நேசிப்பது என்பது தடைக்கற்களே. அவனது முன்னேற்றத்திற்குத் தடை போடுவனவே ஆகும். ''வினை விதைத்தவன் வினையறுப்பான்'' மனிதன் புவித்தாய்க்கு தான் செய்த வினைகள் எல்லாம் இப்பொழுது படிப்படியாக அனுபவித்து வருகின்றான். புவித்தாய் தன் பிள்ளைகளையிட்டு எண்ணிக் கவலையடைகின்றாள். தன் மீது நடந்த மனிதன் தனக்கு விளைவிக்கும் கொடுமைகளை அவளால் தாங்க முடியவில்லை. அதனால்தான் வரட்சி, வெள்ளப் பெருக்கு, சூறாவளி, எரிமலை, புவிநடுக்கம் என எதிர்விளைவுகளை உண்டாக்குகிறாள். இவையாவும் மனிதர்களுக்கு அழிவை தருகின்றன. இன்று உலகை ஆட்டிப்படைக்கும் வெப்பமயமாதல் பிரச்சினை யாதெனில் மனிதன் காடுகளை அழித்ததாலும் காபன் வெளியேற்றத்தினாலும் புவியின் சராசரி வெப்பநிலை அதிகரித்து வரலே ஆகும். வெப்பமயமாதலால் பல துர்விளைவுகள் ஏற்படுகின்றன. இன்று முனைவுப் பகுதியினதும், மலைப் பிரதேசங்களதும் பனிக்கட்டிகள் விரைவாக உருகிவருகின்றன. கடல்நீர் மட்டம் உயர்ந்து வருகின்றது. தாவரங்கள் வளரமுடியாமை, விளைச்சல்கள் பாதிப்பு, நோய்கள் ஏற்படல்,உயிரினங்கள் பாதிப்பு என பலதரப்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றன.

இவற்றுக்கெல்லாம் மனிதனின் தூரநோக்கற்ற செயல்களே காரணம் என்பது உண்மை. நமது புவியை நாமே பாதுகாக்க வேண்டும். இன்னும் எண்ணற்ற காலம் புவித்தாய் வாழவேண்டாமா? நமக்கு உணவு, நீர் உள்ளிட்ட தேவைகள் பலவற்றை நிறைவேற்ற உதவியது



நமது புவியே. எனவே நாம் புவியை பாதுகாப்பதில் அக்கறைகொள்ள வேண்டும். இன்று பல நாடுகள் புவியைப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்ந்துள்ளன. வெள்ளையர்கள் தமது தவறுகளை அறிந்து கொண்டுள்ளார்கள். தமது செயற்பாடுகளை மாற்ற முயல்கின்றனர். புவித்தாயை பாதுகாக்க முனைகின்றனர் அதன் பயனே ஒப்பந்தங்களும், சட்டதிட்டங்களும்,முயற்சிகளும் ஆகும். எனவே இனியாவது நாம் நமது தவறுகளை திருத்திக்கொள்ள முன்வரவேண்டும். இதனால் நமது தாய் நம் துரோகங்களை மன்னிப்பாள்.

க. மயூரன்,2009
கலைப்பிரிவு,
யா/மாதகல்
சென்.யோசப் ம.வி

---

# உயிர் பிழைத்த காடுகள்

பல்கிப் பெருகிக்கொண்டே செல்கின்ற மனிதத் தேவைகளால் இயற்கை வளங்கள் கணந்தோறும் குறைந்துகொண்டே வருகின்றன. மனித செயற்பாடுகளால் மிக அதிகளவில் சுரண்டப்படும் இயற்கை வளமாக மரங்களே காணப்படுகின்றன. ஒரு காலத்தில் பூமிப்பந்தின் மேற்புறத்தில் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த பல வனப்பகுதிகள் இன்று முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு அவை இருந்த சுவடே தெரியாமல் போய்விட்டது. தளபாடம், வீடு, புதிய கட்டடங்கள், எரிபொருள் போன்ற தேவைகளுக்காக நாளாந்தம் பெருந்தொகையான மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக புவிச்சமநிலையில் தளம்பல் ஏற்பட்டு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் காலநிலை மாற்றங்கள் உருவாகுகின்றன. காலப்போக்கில் ஒட்டுமொத்த உலகத்தையே உருக்குலைத்துவிடும் நிலையினை காடழிக்கும் செயற்பாடு உண்டாக்கிவிடுமென அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் 'பெனான்' இன மக்கள் துணிச்சலான நடவடிக்கையொன்றை மேற்கொண்டு தாம் வாழும் காட்டுப் பகுதியினைப் பாதுகாக்கத் தொடங்கியுள்ளனர். 'சராவா' என்ற மழைக் காடுகளில் வசிக்கும் பழங்குடியினர்தான் பெனான் இனமக்கள். சராவாக் காட்டுப்பகுதியில் சில காலத்திற்கு முன்னர் சட்டவிரோத காடழிப்பு நடைபெற்று வந்தது. இந்தக் காடழிப்பு நடவடிக்கையை மேற்கொள்பவர்களுக்கு சராவாக் காட்டுக்கு இலகுவாகச் சென்றடைய வழிசமைக்கும் பிரதான வீதியே உதவியாக இருந்தது. இனிமேலும் இவர்களின் நடவடிக்கை தொடர்ந்தால் தமக்கு வாழ்வுதரும் காடு முற்றுமுழுதாக அழிந்துவிடும் என்பதை உணர்ந்த பெனான் மக்கள் தீர்க்கமான யோசனையின் பின்னர் குறித்த பிரதான



வீதியை அடைத்து விடுவது என்று முடிவுசெய்தனர். அதன்பின்னர் பாரிய பள்ளங்களை குறித்த வீதிக்கு நடுவே வெட்டி அதனூடான போக்குவரத்தைத் தடை செய்தனர். இதன் பயனாக அன்றிலிருந்து இன்றுவரை சராவாக் காடுகள் அழிவிலிருந்து தப்பித்து உயிர்வாழ்ந்து வருகின்றன.

---

# இரட்டைப் பிள்ளைகள் பற்றி.....!

கருக்கட்டிய முட்டை கருப்பையில் விருத்தியடையும் காலத்தில் தாயிலிருந்து போஷணையை சூல்வித்தகம் வாயிலாக பெற்றுக்கொள்ளும். இக்காலத்தில் குழந்தையை ஓர் ஒட்டுண்ணியாகத்தான் கொள்ளவேண்டும். குழந்தை சூல் வித்தகத்துடன் தொப்புள்கொடி வாயிலாக இணைக்கப்பட்டிருக்கும். பூரண விருத்தியடைந்த பின் குழந்தை பிறக்கும்.

சில சமயங்களில் 2 குழந்தைகள் பிறப்பதுண்டல்லவா? இரட்டையர்களில் 2 வகை உண்டு. ஒன்று சகோதரர்களுக்குரிய இரட்டையர்கள். மற்றையது ஒத்த இரட்டையர்கள். சகோதரர்களுக்குரிய இரட்டையர்கள் தோன்றும்போது, ஒரே சமயத்தில் 2 முட்டைகள் கருக்கட்டப்படும். இவை இரண்டும் விருத்தி பெற்று இரட்டையர்கள் தோன்றுவார்கள். சகோதரருக்குரிய இரட்டையர்கள் ஒரே மாதிரி இருக்கலாம்; வேறுபட்டும் இருக்கலாம். ஒரு பாலுள்ளவர்களாவும் இருக்கலாம். (இரண்டு ஆண்/ பெண்) ஒன்று ஆண் மற்றையது பெண்ணாகவும் இருக்கலாம். ஒவ்வொரு சிசுவுக்கும் தனியே சூல் வித்தகமும், தொப்புள் கொடியும் இருக்கும்.



ஒத்த இரட்டையர்கள் ஒரே முட்டையிலிருந்து தோன்றியவர்கள் கருக்கட்டிய முட்டை சில காரணங்களினால் இரண்டாக பிளவுபட்டு, பின் ஒவ்வொரு பாதியும் ஒரு குழந்தையாக விருத்தி பெறும். அதனால் ஒத்த இரட்டையர்கள் ஒரே மதிரி இருப்பார்கள்; ஒரே பாலைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பார்கள். ஒரே ஒரு சூல்வித்தகம் மாத்திரம் இருக்கும். ஆனால் தொப்புள் கொடி தனித்தனியே 2 இருக்கும். அல்லது அபூர்வமாக 'ஙு' அமைப்பில் காணப்படும். அதாவது, ஒரு கொடி இரண்டாகப் பிரிந்து, 2 குழந்தைகளையும் இணைக்கும். முட்டை இரண்டாகப் பிரிந்தபோது, பூரணமாகப் பிரியா... ஒரு சிறு தொகுப்பு மூலம் இணைக்கப்பட்டிருந்தால், அதன் காரணமா... ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ள 'சயாமீஸ்' இரட்டையர்கள் பிறப்பார்கள். (முதன் முதலில் சயாம் நாட்டில் அவதானிக்கப்பட்டு விவரிக்கப்பட்டபடியால் இப்பெயர் வழங்கப்பட்டது) முட்டையின் பிளவு நிலைக்கேற்ப 2 தலை ஓர் உடல், 2 கைகள், 2 கால்கள், 2தலை,2நெஞ்சுப்பகுதி, 4 கைகள்,ஓர் இடுப்புப்பகுதி, ஓர் உடலும் 4 கால்களும் உள்ள குழந்தை போன்ற அதிசயப்பிறவிகள் தோன்றும்.

இதே அடிப்படையில் தான் இரண்டிற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் ஒரே பிரசவத்தில் குழந்தைகள் பிறப்பதும், ஒரே பிரசவத்தில் 3 என்றும், 4 என்றும், 5 என்றும், 8 வரைக்கும் பிறந்திருக்கின்றது அல்லவா? இரண்டிலிருந்து 8 வரை எண்ணிக்கை கூட, அருமையும் கூடிக்கொண்டே போகும்.


பா.ஷாலினி,சுன்னாகம்.

---

# தண்ணீர் வீடுகள்

கணநேரத்தில் அழிந்துவிடும் வாக்குறுதிகளை 'நீர்மேல் எழுதிய எழுத்து' என்று சொல்வதுண்டு. ஏனெனில் நீர்மேல் எழுதிய எழுத்து அது எழுதப்பட்ட கணமே அழிந்துவிடக்கூடியது. ஆனால் நீர்மேல் வீடுகள் அமைத்து வாழ்பவர்களும் இந்த உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதிநவீன தொழில்நுட்ப வசதிகளை உள்வாங்கிக்கொண்டு துரிதமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடாக மலேசியா விளங்குகிறது. அபிவிருத்தியின் வேகத்திற்கேற்ப மலேசியாவின் சனத்தொகையும் எகிறத் தொடங்கியுள்ளது. மிகக் குறுகிய பரப்பளவைக் கொண்ட மலேசியாவில் இத்தகைய திடீரெனப் பெருகிய சனத்தொகையால் பெரும் நிலப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால் தொடர்மாடிக் கட்டடங்கள் மூலம் இதுவரையும் மலேசிய மக்களின் தங்குமிடப் பிரச்சினை ஓரளவுக்குத் தீர்த்துவைக்கப்பட்டது. ஆயினும் மக்களின் இடப்பிரச்சினையைத் தீர்ப்பதில் பெரிதும் கைகொடுப்பவை தண்ணீர் வீடுகள்தான். ஆழம் குறைந்த நீர்ப்பரப்புகளின்மேல் உயரமான வகையில் இத்தகைய வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகிறார்கள் மலேசிய மக்கள். இவ்வாறு தண்ணீர்மேல் வீடமைத்து வாழ்பவர்கள் எல்லோருமே ஏழைகள்தான். ஏழைக்கு எப்போதுமே தண்ணீர்தான் சொந்தமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை பரிசளிப்பு விழா

ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்குப் பாடசாலை அதிபர் திருமதி என்.சந்திரகுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கணனி அலகு புதிதாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வி.கணேசராசாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.வி.கணேசலிங்கம், பிரபல சட்டத்தரணியும் நொத்தாரிசுமான எம்.தியாகராசா, வலிகாமம் கல்வி வலய கணிதம், தகவல் தொழில்நுட்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுகுமாரன் ஆகியோர் கலந்துகொள்வர். (201-20)

# மத்தியஸ்தர் சபையில் வழக்குகள் எத்தனை என்பது முக்கியமல்ல அவற்றைத் தீர்த்து வைக்கும் திருப்திதான் முக்கியமானது

## சாவகச்சேரி மாவட்ட நீதிவான் உரை

யாழ்ப்பாணம், நவ.21

மத்தியஸ்தர் சபையில் பிணக்குகள் எத்தனை என்பது முக்கியமல்ல. அவற்றைத் தீர்த்து வைக்கும் திருப்திதான் முக்கியமானது.

இந்தச் சபை சட்டத்திற்கு அமைவாகச் செயற்படுகின்றபோது நீதிமன்றத்தின் ஒத்துழைப்பு எப்போதும் வழங்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர்.

மத்தியஸ்தர் சபையின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

பிணக்குகளை இரு தரப்பினரின் சம்மதத்துடன் பாதிப்புக்களை விளைவிக்காத வண்ணம் செய்வதே இந்தச் சபையின் பணியாக விளங்குகின்றது.



நீதிமன்றத்துக்குரிய அதிகாரங்கள் இச்சபைக்கு வழங்கப்படாததால், கிராம அலுவலர்களின் பங்களிப்பும், பொறுப்பும் இச்சபைக்கு முக்கியமானது.

இச்சபை சிறந்த வழிகாட்டலின் மூலம் இயங்கவேண்டும். இவ்வாறு செயற்படுகின்ற போதுதான் முரணற்ற தீர்வை வழங்க முடியும்.

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகளை நாவற்குழி தொடக்கம் எழுதுமட்டுவாள் வரையும், கிளாலி தொடக்கம் மாசேரி வரையும் நடைமுறைப் படுத்தலாம்.

ஆனால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தின் செயற்பாடுகள் தற்பொழுது சாவகச்சேரி தொடக்கம் மாங்குளம் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

குற்றவியல் வழக்குகள் எழுதுமட்டுவாழ் வரையும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த மத்தியஸ்தர்சபை சிறந்த சபையாகத் தெரிவு செய்யப்பட்டு, நீதி என்ற அடிப்படையில் பதக்கங்கள், கேடயங்கள் என்பன பெறவேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் மத்தியஸ்தர்சபை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ப.சனாதனன் உரையாற்றுகையில்:

எமது பிரதேசத்தில் சிறுசிறு பிணக்குகளினால் அல்லற்படுகின்ற மக்களின் பிரச்சினைகளை அறிந்து இலகுவில் தீர்ப்பதே இந்தச் சபையின் நோக்கமாகும்.

தங்களுக்குள் வரும் பிரச்சினைகளுக்கு மத்தியஸ்தர் சபையின் தீர்வு வழங்கப்பட்டபின் அவர்கள் சந்தோஷமாகச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டு வரை யாழ்.மாவட்டத்தில் 2,167 வழக்குகள் மத்தியஸ்தர் சபையின் தீர்வினைப் பெறவந்துள்ளன. அவற்றுள் 1,117 வழக்குகள் சமரசம் செய்யப்பட்டுள்ளன.

இதனால் நீதிமன்றம், பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு மக்கள் சென்று முறைப்பாடுகள் வழங்குவதும் குறைந்து விட்டன- என்றார்.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உரையாற்றுகையில்:

பொதுமக்கள் சிறிய பிரச்சினைகளைக் கூடத் தீர்க்க முடியாது இருந்தபோது இச்சபை உருவாகியமை அவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

கல்வியறிவு குறைந்து மக்கள் பிரச்சினைகளை அணுக முடியாதவர்களாக இருந்த போது இந்தச் சபை ஆரம்பிக்கப் பட்டதையடுத்து பிணக்குகளை இலகுவாகத் தீர்க்க முடியும் -என்றார்.

இந்த நிகழ்வில் மத்தியஸ்தர் சபையின் தலைவராக பழனி நடராசா தனது பதவிக்கான சான்றிதழை நீதிவான் அ.பிறேம் சங்கரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (50-204-131)


கணபதி துணை

# உபநயன சுபமுகூர்த்த அழைப்பு





அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீநிகழும் மங்களகரமான விரோதி வருஷம் கார்த்திகை மாதம் 06ஆம் நாள் (22.11.2009) ஞாயிற்றுக்கிழமை உத்தராட நட்சத்திரமும் ஷட்டித்திதியும் அமிர்தயோகமும் அமைவுறும் காலை 9.44 மணி முதல் 11.40 மணி வரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்த வேளையில்

அராலி மத்தி சிவஸ்ரீ ச.முத்துக்குமாரசாமிக்குருக்கள் சோமாவதி அம்மா தம்பதிகளின் பௌத்திரர்களும்

சுழிபுரம் சிவஸ்ரீ ந.பத்மநாபசர்மா விமலாதேவி தம்பதிகளின் தௌஹித்திரர்களும்

எமது புத்திரர்களுமாகிய

சிரஞ்சீவி பிரவீன சர்மாவுக்கும் சிரஞ்சீவி யதுநந்தன சர்மாவுக்கும்

திருவருளும் குருவருளும் ஒன்றுசேரப் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தான திருச்சந்நிதியில் யஞ்ஞோபவீததாரண பிரம்ம உபதேசம் நிகழ்த்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் இஷ்டமித்திர குடும்ப சகிதமாக வருகைதந்து யஞ்ஞோபவீதர்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யஞ்ஞோபவீதர்களுக்கு உபநயனம், பிரம்ம உபதேசம் செய்து நல்லாசிகள் வழங்கும் சிவாச்சாரியார்கள்:

"சிவாகம கிரியா வித்தகர்" "வைத்தியகலாநிதி" சித்தாந்த நல்லறிஞர்" சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக்குருக்கள்

"முத்தமிழ் குருமணி சகலாகம சங்கிருகர்" "சத மகோற்சவ கிரியா வித்தகர்" சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள். (கதிரமலை தேவஸ்தானம், சுன்னாகம்).

பண்ணாகம், சுழிபுரம்.

T.P: 0776577446. (91224)

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

சிவஸ்ரீ மு.பாஸ்கரக்குருக்கள் (ரவிக்குருக்கள்) பத்மஜா தம்பதிகள்.



# இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்

## வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2010

## REGISTRATION OF SUPPLIERS-2010

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கொங்கிறீற் உற்பத்திப் பகுதிக்கும் யாழ்.அலுவலகத்திற்கும் 2010ஆம் ஆண்டு காலப்பகுதிக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவையினையும் வழங்கக் கூடிய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருள்கள்**

01. உடைந்த சல்லிக்கல் (Crushed Metal) ½", 3/4"
02. மணல்
03. மணல்காடு மணல்
04. முறுக்குக் கம்பிகள் (Tore Steel)
05. மென் உருக்குக் கம்பிகள் (M.S.Bars)
06. கட்டுக் கம்பிகள் (Binding Wire)
07. கட்டட வேலைக்கான உபகரணங்கள்
08. மின்சாரப் பொருள்களும் மின்சார உபகரணங்களும்
09. வாகன உதிரிப்பாகங்கள் (Mitsubishi Double Cab வாகனத்திற்குரியவை)
10. ரயர்களும் ரியூப்களும் (Tyre & Tubes)
11. துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
12. காகிதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருள்களும் (Stationery and Office Requisites)
13. அலுவலகத் தளபாடங்கள்
14. கணனிப் பொருள்களும் உதிரிப்பாகங்களும் (Computer Spares)

**சேவை**

01. வாகனம் பழுது பார்த்தல்
02. கணனி பழுது பார்த்தல்

மேற்கூறப்பட்ட பொருள்களையும் சேவையினையும் வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தில் பதிவுசெய்துகொள்ள விரும்புபவர்கள் 07.12.2009 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம் வழங்கப்படக்கூடிய பொருள், சேவை விவரம் கொண்ட விண்ணப்பத்தினைப் பின்வரும் விலாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**விநியோக உத்தியோகத்தர்,**
**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,**
**பலாலி வீதி,**
**உரும்பிராய்.**

தொலைபேசி இல. 0212227890 . (சி) 562475


## தையல் கண்காட்சியும் விற்பனை நிகழ்வும்

யாழ்ப்பாணம்,நவ.21

முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் தையல் கண்காட்சியும், விற்பனை நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலைக் கேட்போர் கூடத்தில் அதிபர் செல்வி ந.பிரதாதலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி சிவசக்தி சதாசிவம், ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் செ.சிவநடராசா ஆகியோர் கலந்து கொள்வர். (50-204)

## நடமாடும் சேவை

கோப்பாய்,நவ.21

கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் பிறப்புப் பத்திரம் பெறுதல், காலங் கடந்த பதிவுகள் மேற்கொள்ளல் தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (204- 725)


முதலாவது பிறந்தநாள் 21.11.2009

# வாழ்த்து



சங்கானையைச் சேர்ந்த
சிவஸ்ரீ.கை.கிருஷ்ணகுமாரக் குருக்கள்-
ஸ்ரீமதி துஷ்யந்தினி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
செல்வன் கி.தரணிதரசர்மா
தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (21.11.2009) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மம்மா, தாத்தா, மாமன்மார், சித்தி ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

இ.தேவபாலசர்மா.
துர்க்கை அம்மன் கோயிலடி, கல்வயல், சாவகச்சேரி.

(91170)

கி.தரணிதரசர்மா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் II - நேற்றைய தொடர்ச்சி.....

04. 2) b. இரைச்சியானது இரைப்பை, சிறுகுடல் ஆகியவற்றில் அடையும் மாற்றங்களைத் தருக.
இரைப்பை ..........................................
சிறுகுடல் ..........................................

3) சமிபாடடைந்த பாண் மூலக்கூறொன்று Aஇல் இருந்து இதயம் வரையாக பயணிக்கும் பாதையைத் தருக.
..........................................

4) இரைப்பையின் தொழிற்பாட்டுக்கு தேவையான குருதியை வழங்கும் நாடி எது?
..........................................

5) C இன் உட்பரப்பில் விசேட வகையான மேலணி இழையம் காணப்படுகிறது. அதனைப் பெயரிடுக.
..........................................

6) a. இறைச்சி சமிபாடடைவதன் மூலம் உருவாக்கப்பட்ட மேலதிக அமினோ அமிலம் யூரியாவாக மாற்றப்படுகிறது. இதை மேற்கொள்ளும் பகுதி/ உறுப்பு எது? ..........................................

b. மேலதிக அமினோ அமிலங்கள் யூரியாவாக மாற்றப்பட்டமைக்கான காரணங்கள் 2 தருக. ..........................................

c. எமது உடலில் இருந்து யூரியாவை அகற்றுவதற்கு பொறுப்பான அங்கம் எது? ..........................................


d. நீர் வினா C இல் குறிப்பிட்ட அங்கம் மேற்கொள்ளும் யூரியாவை அகற்றுதல் தவிர்ந்த வேறு செயற்பாட்டைத் தருக.
..........................................

## பகுதி B, கட்டுரை வினாக்கள்

* உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு வினாவைத் தெரிவுசெய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.

## உயிரியல்

01. அ. மைய நரம்புத் தொகுதியின் அமைப்பு அருகே காட்டப்பட்டுள்ளது.





1) பாகங்கள் A, B, C, D ஐப் பெயரிடுக.
2) இதயம், சிறுநீரகம் போன்றவை எதனால் ஆளுகை செய்யப்படுகின்றன.
3) ஒருவர் நிலை தடுமாறி விழும்போது எப் பகுதி விரைவாகத் தொழிற்பட ஆரம்பிக்கும்?
4) A, B ஆகியவற்றின் தொழில்களைத் தருக.

ஆ. தெறிவினைச் செயற்பாடு மனித உடலின் பாதுகாப்பிற்கு இன்றியமையாதது.
1) தெறிவினை என்றால் என்ன?
2) தெறிவில் ஒன்றினை வரைந்து பெயரிடுக.
3) தெறிவினைச் செயற்பாடு மனித வாழ்விற்கு உதவும் இரு சந்தர்ப்பங்கள் தருக.

இ. மனித அகஞ் சுரக்கும் சுரப்பிகள் சில இழையங்களையும் அநேக சுரப்பிகளையும் கொண்டவை. இவற்றால் சுரக்கப்படும் சுரப்புகள் ஓமோன்கள் எனப்படும்.
1) ஓமோன்கள் ஏனைய சுரப்புகளில் இருந்து எவ்வியல்புகளில் வேறுபடும்?
2) பின்வரும் ஓமோன்களின் செயற்பாடுகளை விளக்குக.
a. அதிரினாலின் b. இன்சுலின்


ஈ. 1) அகச்சூழல் என்றால் என்ன?
2) அகச்சூழலில் குளுக்கோஸ் மட்டம் மாறாது பேணப்படும் செயற்பாட்டை விளக்குக.
3) இன்சுலீனானது வாய் மூலம் உட்கொள்ளப்படுவதில்லை. மாறாக புகுத்தி மூலமே செலுத்தப்படும் காரணம் யாது?

02. அ. எல்லா அங்கிகளும் இறக்கின்றன. அவற்றின் சந்ததி நிலைத்திருப்பதற்கு இனப்பெருக்கம் அவசியமாகின்றது.




1) தாவரங்களில் காணப்படும் இரண்டு பிரதான இனப்பெருக்க முறைகளும் எவை?
2) மேற்கூறப்பட்ட முறைகள் ஒவ்வொன்றினதும் ஒவ்வொரு அனுகூலத்தையும் குறிப்பிடுக.
3) உருவில் A, B, C, D, E, F ஐ ஒழுங்காக பெயரிடுக.
4) B, D பகுதிகளினால் செய்யப்படும் ஒவ்வொரு தொழில்களைக் குறிப்பிடுக.
5) இதில் எப்பகுதி பழமாக மாறுகின்றது?
6) பின்வரும் தாவரங்கள் தன்மகரந்த சேர்க்கையை தடுப்பதற்கு எவ்வகை இசைவாக்கத்தைக் கொண்டுள்ளன?
அ. மூக்குத்திப்பூண்டு.
ஆ. சோளம்.


ஆ. பூவின் பிரதான சில பகுதிகளை படம் A, B காட்டுகின்றன.




1) A, B ஆகியவற்றைப் பெயரிடுக.
2) P, Q, R, S, T ஆகியவற்றைப் பெயரிடுக.
3) Q, R, S ஆகிய பகுதிகளின் தொழில்களைத் தருக.
4) மகரந்தச் சேர்க்கையைத் தொடர்ந்து Aஇல் நடைபெறும் மாற்றங்களைச் சுருக்கமாகத் தருக.
5) வித்து முளைத்தலின்போது நடைபெறும் செயற்பாடுகளை (வித்தினுள்) சுருக்கமாகத் தருக.

## பௌதிகவியல்


03. அ. மாணவன் ஒருவன் மேற்கொண்ட பரிசோதனையின் படிமுறைகள் தரப்பட்டுள்ளது.




(நீரின் அடர்த்தி $1000kg/m^3$, புவியீர்ப்பு 10N/kg)
1) ஆக்கிமிடிசின் விதியைத் தருக.
2) a. பொருளின் உண்மை நிறை யாது?
b. Bஇல் பொருளின் தோற்ற நிறை யாது?
c. Cஇல் விற்றராசு வாசிப்பு யாது?
d. அடர்த்தி தெரியாத திரவத்தின் அடர்த்தியைக் காண்க.

ஆ. 5000kg நிறையுடைய சிறிய படகொன்று $1000kg/m^3$ அடர்த்தியுள்ள நன்னீர் நிலை ஒன்றில் பயணம் செய்கிறது. (g = 10N/ kg)
1) படகில் தொழிற்படும் மேலுதைப்பு யாது?
2) படகினால் இடம்பெயர்க்கப்பட்ட நன்னீரின் திணிவு யாது?
3) தற்போது படகு $1200kg/m^3$ அடர்த்தியுள்ள உப்புநீரைக் கொண்ட கடலில் தனது பயணத்தைத் தொடருமெனில் படகின் மீது தொழிற்படும் மேலுதைப்பு யாது?
4) படகினால் இடம்பெயர்க்கப்பட்ட கடல்நீரின் நிறை யாது?
5) நன்னீரில், கடல்நீரில் படகு பயணிக்கும்போது படகில் மிதத்தல் சார்பாக காணப்படும் வேறுபாடு யாது?
6) படகு மிதத்தலுக்குத் தேவையான 2 நிபந்தனைகளும் எவை?

04. கடத்தியொன்றினூடாகச் செல்லும் மின்னோட்டத்திற்கும் அழுத்த வேறுபாட்டிற்கும் இடையிலான தொடர்பை அறிய விரும்பிய மாணவன் ஒருவனால் அமைக்கப்பட்ட மின்சுற்றைக் கீழேயுள்ள படம் காட்டுகின்றது.




1) அ. உபகரணங்கள் X, y ஆகியவற்றை இனம் கண்டு எழுதுக.
ஆ. மேற்படி உபகரணங்களை இனம் காண உதவிய அம்சத்தினைக் குறிப்பிடுக.
2) தரப்பட்டுள்ள மின்சுற்றுப் படத்தைக் குறியீடுகளைப் பயன்படுத்தி வரைக.
3) மேற்படி மின்சுற்றைப் பயன்படுத்தி X இலும், y இலும் பல்வாசிப்புக்கள் பெறுவதற்கு உம்மால் பயன்படுத்தக்கூடிய வழிமுறையொன்று தருக.
4) அவ்வாறு மாணவனால் பெறப்பட்ட சில வாசிப்புக்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அட்டவணையிலுள்ள இடைவெளிகள் P,Qஇல் வரவேண்டிய எண் பெறுமானங்களைத் தருக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உபகரணம் X இன் வாசிப்பு | 3.0 | 4.5 | 6.0 | 7.5 | Q |
| உபகரணம் Yஇன் வாசிப்பு | 0.5 | 0.75 | 1.0 | p | 1.5 |

5) இவ்வாசிப்பில் பெறப்பட்ட பெறுமானங்களைப் பயன்படுத்தி வரைபானது அமைக்கப்படும்போது பெறப்படும் வரைபின் பருமட்டான படம் வரைக.
6) இப்பரிசோதனையிலிருந்து பெறப்படும் உண்மையானது விதியாக வழங்கப்படுகின்றது. அவ்விதியை முழுமையாகத் தருக.
7) இப்பரிசோதனையின்போது முன்வைக்கப்படும் எடுகோள் ஒன்று தருக.

## இரசாயனவியல்

05.

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | |
| 2 | A | | | | | | B | |
| 3 | E | | | | F | | | D |
| 4 | C | | | | | | | |

மெண்டலீவில் அமைக்கப்பட்ட ஆவர்த்தன அட்டவணையின் மாதிரி ஒன்றை படம் காட்டுகிறது. ஆங்கில எழுத்துக்கள் சில மூலகங்களைக் குறிக்கும் (உண்மை குறியீடல்ல)
1) ஆவர்த்தன விதியைத் தருக.
2) அட்டவணையில் கூட்டங்களையும் ஆவர்த்தனங்களையும் எவ்வாறு இனங் காண்பீர்?
3) மூலகம் ஒன்றின் இறுதி ஒட்டு இலத்திரன் எண்ணிக்கை, ஒடுகளின் எண்ணிக்கை என்பன முறையே கூட்டம், ஆவர்த்தனம் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ள முறையை விளக்குக.
4) மேற்படி அட்டவணையைப் பயன்படுத்தி விடையளிக்கவும்.
a. ஒரே கூட்டத்தைச் சேர்ந்த மூலகங்கள் 3 தருக.
b. 4 ஆவர்த்தனத்தைச் சேர்ந்த மூலகம் எது?
c. வலுவளவு 3 ஐ காட்டக்கூடிய மூலகம் எது?
d. எந்த மூலகத்துடனும் தாக்கத்திலீடுபடாத மூலகம் எது?
e. அறை வெப்பநிலையில் வாயுவாக இருக்கக்கூடியது எது?
5) பெரும்பாலான மூலகங்கள் ஆவர்த்தனத்தில் வளியேயும் கூட்டத்தின் வளியேயும் சீரான இயல்பு மாற்றத்தை காட்டுகின்றன.
a. கூட்டத்தின் வளியே பின்வரும் இயல்புகள் மாற்றமடையும் முறையை விளக்குக.
1) உருகுநிலை - கூட்டம் I
2) தன்வெப்பக் கொள்ளளவு - கூட்டம் I
b. ஆவர்த்தனத்தின் வளியே பின்வரும் இயல்புகள் மாற்றமடையும் விதத்தை விளக்குக.
1) உருகுநிலை - 02 ஆம் ஆவர்த்தனம் (இடமிருந்து வலம்)
2) அணு ஆரை 02 ஆம் ஆவர்த்தனம் (இடமிருந்து வலம்)
6) 1) C, B சேர்ந்து உருவாகும் சேர்வையின் சூத்திரம் யாது?
2) பிணைப்பு வகையைத் தருக.
3) மேற்படி சேர்வையின் இயல்புகள் 2 தருக.

06. A. 1) ஆய்வுகூடத்தில் 500ml, 1mol/ $dm^3$ $C_6H_{12}O_6$ கரைசல் தயாரிக்கவேண்டி உள்ளது. (C - 12, O - 16, H - 1) மேற்படி செயற்பாட்டுக்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தருக.
2) 360g $C_6H_{12}O_6$ ஆனது 500ml நீரில் கரைந்திருப்பின் கரைசலின் செறிவு யாது?
B. 1) இரும்பினது நீருடன் தாக்கமடைய தேவையான நிபந்தனைகள் எவை?
2) மேற்படி தாக்கத்துக்கான சமன்செய்த இரசாயன சமன்பாட்டைத் தருக.
C. 1) Mgஐ நீராவியில் வெப்பமேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டால் நீர் ஆய்வு சாலையில் ஏற்படுத்தும் அமைப்பை வரைந்து காட்டுக.
2) மேற்படி சந்தர்ப்பத்தில் நடைபெறும் இரசாயனத் தாக்கத்துக்கான சமன்பாட்டைத் தருக.
D. 1) சீமெந்து உற்பத்திக்கான பிரதான மூலப்பொருட்கள் எவை?
2) சுழலும் உருளையில் நடைபெறும் செயற்பாடுகள் 3 தருக.
3) கிளிங்கரின் பௌதீக இயல்புகள் 2 தருக.
4) சுழலும் உருளையில் உயர் வெப்பநிலையில் தாக்கமடைந்து தோன்றும் சீமெந்தின் முக்கிய கூறுகள் இரண்டினது இரசாயனப் பெயர்களைத் தருக.
5) சீமெந்து இறுகுதல் என்றால் என்ன?
6) சீமெந்து தயாரிப்பில் ஜீப்சத்தின் பயன் யாது?

-நிறைவுற்றது-

ஆசிரியர்: P.ரகுமார், (0776059650)
யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு 9 பேர் பதவி உயர்வு பெற்றனர்



மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா



மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம்



ஓய்வுபெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம்



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்



வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா

வடக்கு மாகாணத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு ஒன்றிற்கு 9 பேர் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இதில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஓய்வுபெற்ற அதிபர் எம்.பரஞ்சோதி, வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர்.ஒஸ்வோல்ட், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், ஓய்வுபெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.குருகுலராஜா, யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராசேந்திரன், ஓய்வுபெற்ற வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் ஆகியோரே இவ்வாறு பதவி உயர்வு பெற்றுள்ளனர். (50-9)

# புத்தக சாலை



### 'மத்திய ஆய்வாளன்'

யாழ்.மத்திய கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தின் ''மத்திய ஆய்வாளன்'' இதழ் 07 வெளிவந்துள்ளது.

மாணவர்களின் அறிவுத்தேடலுக்கும், நவீன மாற்றங்களின் அறிதலுக்கும் களம் அமைத்துக்கொடுக்கும் முகமாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

முற்றிலும் விஞ்ஞானம் சார்ந்த தகவல்களை தன்னகத்தே சுமந்து ''மத்திய ஆய்வாளன்'' வெளிவந்துள்ளமை மாணவச் சமூகத்திற்குப் புதிய தகவல்களைத் தேடவைக்கும் ஒருஊக்கியாக ''மத்திய ஆய்வாளன்''. விளங்கும் என்பது சந்தேகமில்லை.

# மக்கள் முகம் மக்கள் முகம்



மல்லாகத்தைச் சொந்த இடமாகக் கொண்ட திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக மாவட்ட நீதிபதி யோ. பிரபாகரன் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் வலி.வடக்குப் பிரதேசசபை முன்னாள் தலைவராகவும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் த்லைவராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பெண்கள் தொண்டர் சபைத் தலைவராகவும் சேவை புரிந்து வருகிறார். (50-9)

# கிறிஸ்மஸ் தீவில் உள்ள தடுப்பு முகாமை மூடக் கோருகின்றது மன்னிப்புச் சபை

## ஆஸியின் கடும்போக்குக்கும் கண்டனம்

கொழும்பு, நவ. 21

இந்தோனேஷியாவின் கிறிஸ்மஸ் தீவிலுள்ள சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கான தடுப்பு முகாமை உடனடியாக மூட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று ஆஸி. அரசைக் கோரியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் இதெனி கான் இவ்வேண்டுகோளை அவசரமாக விடுத்துள்ளார். அரசியல் தஞ்சம் கோருவோர் விடயத்தில் ஆஸ்திரேலியா கடைப்பிடிக்கும் கடும் போக்குக் கொள்கையையும் வன்மையாகக் கண்டித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவிலுள்ள சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கான தடுப்பு முகாமை மூடுவதுடன் அரசியல் தஞ்சம் கோருவோருக்கு ஆஸியில் புகலிடம் வழங்க வேண்டுமென்று அவர் வலியுறுத்திக் கூறினார். அரசியல் தஞ்சம் கோருவோர் விடயத்தில் ஆஸி.அரசு நீதியாக நடக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (சி)

# கட்டாக்காலிக் கால்நடைகளால் துன்னாலையில் பயிர்கள் நாசம்

வடமராட்சி, நவ.21

துன்னாலை கிழக்குப் பகுதியில் கட்டாக் காலிக் கால்நடைகளின் தொல்லையால் தினமும் பயிர்வகைகள் நாசமடைநது வருகின்றன.

இப்பகுதிக்குக் கூட்டம் கூட்டமாக வரும் கட்டாக்கலி மாடுகள் இரவு வேளைகளில் ஆங்காங்கே தோட்டங்களுக்குள் படுப்பதும், அங்குள்ள பயிர்களைத் தின்று நாசப்படுத்துவதுமாக இருந்து வருகின்றது.

இதனால் இப்பகுதியில் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெருஞ்சிரமங்களை மாத்திரமன்றிப் பலத்த நஷ்டங்களை அன்றாடம் நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்துத் தீவிர கவனம் எடுத்து கட்டாக் காலி மாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (50-236)

## வடமராட்சியில் புகையிலை நாற்றுக்களை கொள்வனவு செய்யும் தீவக விவசாயிகள்

வடமராட்சி, நவ.21

தீவுப்பகுதி விவசாயிகள் புகையிலைச் செய்கையை மேற்கொள்வதற்காக வடமராட்சிப் பகுதியில் புகையிலை நாற்றுக் களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் பொலிகண்டி, திக்கம், புலோலி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் விவசாயிகளால் போடப்பட்ட புகையிலை நாற்று மேடைகளிலிருந்து ஆயிரக்கணக்கில் புகையிலை நாற்றுக்களைத் தீவக விவசாயிகள் கொள்வனவு செய்து தீவுப் பகுதிக்கு எடுத்துச் செல்கின்றனர்.

இதன் காரணமாக வடமராட்சிப் பகுதியில் புகையிலை நாற்றுக்கள் 3 ரூபா தொடக்கம் 5 ரூபா வரையில் விலை போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50-236)

# வலி. வடக்கு முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ.21

வலி. வடக்கு கிராமிய வலுப்படுத்தலுக்கான இணையத்தினதும் (கோர்) கல்வித் திணைக்களத்தினதும் அனுசரணையில் நடத்தப்படுகின்ற வலி. வடக்கு முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் அளவெட்டி அருணோதயாக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி. வடக்கு முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. தே. லில்லிராணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் மு. நடராசா பிரதம விருந்தினராகவும், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். குகனேசன், கௌரவ விருந்தினராகவும் 'கோர்' நிறுவனத் தலைவர் சி.முருகையா, 'கோர்' நிறுவனத் திட்ட உதவியாளர் கு.கிரிசன், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன், ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லையா மற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி எஸ்.யோகேஸ்வரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (50-9)


### தேவை- உடன் விண்ணப்பிக்கவும்

கொம்பியூட்டர் ரைப் செற்றிங் தெரிந்தவர்கள் சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். யாழ். நகரை அண்டிய பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு: எஸ்.எஸ்.ஆர் பிறிண்டேர்ஸ்
72, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி. (91235)

### மணமகள் தேவை

M.Sc. முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian P.R. உள்ள சைவசமயம் 29 வயது, ஏழுச் செவ்வாய், பூச நட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு, வைத்தியத் துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக் கொண்ட மணமகள் தேவை.

(90672) தொடர்பு : 0713163508


# தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கணனிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், நவ.21

தொழில் நுணுக்கம் கொண்ட கணனிப் பயிற்சி தெரிவு செய்யப்பட்ட அரச அலுலர்களுக்கும் விதாதாவள சங்க உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவுள்ளது என வலி.தென்மேற்கு பிரதேச செயலக விதாதா வள நிலைய விஞ்ஞான தொழில்நுட்ப அதிகாரி எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

அரசாங்க அலுவலர்கள் கணனியினை எவ்வாறு வினைத்திறனுடன் பயன்படுத்தலாம் என்பதனை அடிப்படையாகக் கொண்டே இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சி தொடர் பான மேலதிக விவரங்களை வலி.செ தன்மேற்குப் பிரதேச செயலக விஞ் ஞான தொழில்நுட்ப விதாதா வள நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (50-204-302)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

### சித்தாரா பொன்னாங்காணி தைலம்

Manufactured By:
Sithara Products
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567


# ஏழாம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 02 |  | 09 |
| 04 | | 12 |
| 1936 | | 2002 |

## அமரர் மாணிக்கர் சின்னத்துரை

(ஓய்வுபெற்ற உப அதிபர்)

திதி: 21.11.2009

குடும்ப குல விளக்காய் எமக்கு ஒளிதந்து
பண்பிலே தெய்வமாய் பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்த-அப்பா!
அழியாத உங்கள் நினைவுகள் நெஞ்சில்
அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவகிரி,
கேணியடி, குப்பிளான், ஏழாலை. (91220)

## இலவசப் பயிற்சி நெறிகள்


யாழ்ப்பாணம், நவ.21

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இலவச ஆங்கிலம், கணனி, தையல் ஆகிய பயிற்சி நெறிகளை எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக் கிழமை ஆரம்பிக்கவுள்ளனர்.

ஆங்கிலப் பயிற்சி நெறிக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடி யும்.

பிரதி சனி,ஞாயிறு தினங்களில் நடத்தப்படும் இப் பயிற்சி நெறிகளில்பங்குபற்ற விரும்பும் இளைஞர், யுவதிகள் சாவகச்சேரி 'விமலாஸ்' வர்த்தக நிலையத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-204-207)

# இரண்டாம் வருட நினைவில்



அமரர்
வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்)

மலர்வு: 02.01.1957
உதிர்வு: 21.11.2007

ஈராண்டுகள் ஆனதப்பா எமைவிட்டு நீர் பிரிந்து
கன்றுகளோடு பசுக்களுமாய் கலங்கி நிற்கின்றோம்
என்று நீங்கள் வருவீர் எம் சிறப்புக்கான
ஒன்றுமே அறியாமல் உம் நினைவால் வாடுகின்றோம்.

இயற்றாலை,
வரணி.

குடும்பத்தினர்.


(90962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டியில்

# யாழ்.பல்கலைக்கழக ஆண்கள் அணி முதலிடம் பெற்றுச் சாதனை

## பெண்கள் அணி 41 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்தைச் சுவீகரித்தது



விளையாட்டு நிகழ்வின் போது.....



முதலிடத்தைச் சுவீகரித்த வீரர்கள்....



யாழ்.பல்கலைக்கழக ஆண், பெண் அணியினர்....

யாழ்ப்பாணம், நவ.21

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 2009ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டியானது நவம்பர் 14ஆம், 15ஆம் திகதிகளில் சுகததாச சர்வதேச விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது. இதில் 13 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன. இப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக ஆண்கள் அணி 76 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைச் சுவீகரித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. அதே வேளை, யாழ்.பல்கலைக்கழகப் பெண்கள் அணி 41 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் பேராதனைப் பல்கலைக்கழகம் 125 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினையும், யாழ்.பல்கலைக்கழகம் 117 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தினையும், கொழும்புப் பல்கலைக்கழகம் 3ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

மேலும், 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்.பல்கலைக்கழக அணி இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இத் தடகளப் போட்டியில் பங்குபற்றியமையும், வீர, வீராங்கனைகள் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டமையும் அனைவரினதும் பாராட்டுக்குரியதாக அமைந்தது.

இப்போட்டிகளில் 16 வீரர்களும், 12 வீராங்கனைகளும் பங்குபற்றியிருந்தனர். யாழ்.பல்கலைக்கழக ஆண், பெண் அணிகளின் பயிற்றுவிப்பாளராக செல்வி. இராதை அருளம்பலமும், முகாமையாளர்களாக ஆண்கள் அணிக்கு ஜி.டி.மதியழகனும், பெண்கள் அணிக்கு கே.கணேசநாதனும் பங்குபற்றியிருந்தனர்.

இதில் 4 நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தினையும், 8 நிகழ்ச்சிகளில் 2ஆம் இடத்தினையும், 2 நிகழ்ச்சிகளில் 3ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதிலே யாழ்.பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகின்ற விருதுகளுக்குரிய (Colours Awards) பெறுபேற்று மட்டத்தினை 13 வீரர்கள் அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் முதலாம் இடத்திலிருந்து 3 ஆம் இடங்களைப் பெற்றுத்தந்த வீரர்கள், வீராங்கனைகளது விவரம் வருமாறு:

* பா.நேசரூபன்-அணித்தலைவர்- 1500 மீற்றர் (1ஆம் இடம்), 800 மீற்றர் (2 ஆம் இடம்), 4X400m அஞ்சலோட்டம் (1 ஆம் இடம்),4X100m அஞ்சலோட்டம் (2ஆம் இடம்).

சி.கோபிநாத் 400m தடைதாண்டல் (1ஆம் இடம்), 4X400m அஞ்சலோட்டம் (1ஆம் இடம்),4X100m அஞ்சலோட்டம் (2ஆம் இடம்).

க.ஐங்கரன்-110m தடைதாண்டல் (2 ஆம் இடம்), 400m தடை தாண்டல் (2ஆம் இடம்), 4X400m அஞ்சலோட்டம் (1ஆம் இடம்), 4X100m அஞ்சலோட்டம் (2ஆம் இடம்).

த.திரோன்- 4X400m அஞ்சலோட்டம் (1ஆம் இடம்), 4X100m அஞ்சலோட்டம் (2ஆம் இடம்).

ஜே.நிரோசன்- கோல் ஊன்றிப் பாய்தல் (1ஆம் இடம்).

ஏ.ஜெயரூபன்- உயரம் பாய்தல் (2ஆம் இடம்).

ஸ்ரீ.ஸ்ரீசுபாகரன்-,கோல் ஊன்றிப் பாய்தல் (2ஆம் இடம்).

ச.சுவந்தினி (அணித்தலைவி)- ஈட்டி எறிதல் (2ஆம் இடம்).

ப.மயூரி- 400m தடை தாண்டல் (2ஆம் இடம்).

மா.மொஷாந்தி- 200m (3ஆம் இடம்).

அ.காயத்திரி- 400m தடை தாண்டல் (3ஆம் இடம்). (50)

# 'கொக்கோ கோலா' அணி வெற்றி

யாழ்ப்பாணம், நவ.21

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகம் உள்ளூர் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் 'கொக்கோ கோலா' அணி வெற்றி பெற்றது.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் '7அப்' கோலா அணியை எதிர்த்து 'கொக்கோ கோலா' அணி மோதியது. இதில் கொக்கோ கோலா அணி தன்னை எதிர்த்து விளையாடிய '7அப்' கோலா அணியை3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (50-23)

## முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.21

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற சிறார்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் கலந்துகொள்வார். (204-207)

## 'யுப்பிற்றஸ்' அணியை வென்றது கப்பினஸ்

யாழ்ப்பாணம், நவ.21

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகம், உள்ளூர் அணிகளுக்கு இடையே நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும், லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கப்பினஸ் அணி வெற்றிபெற்றது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யுப்பிற்றஸ் அணியை எதிர்த்து கப்பினஸ் அணி மோதியது.

இதில் கப்பினஸ் அணி தன்னை எதிர்த்து விளையாடிய யுப்பிற்றஸ் அணியை 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (50-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.21

இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும், லீக்குகளுக்கு இடையேயான விலகல் முறையிலான கனிஷ்ட பிரிவினருக்கான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பி.ப.3.45 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ். உதைப்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (50-23)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட வீராங்கனைகள் பாடசாலை அதிபர், விளையாட்டுப் பயிற்றுநர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:தமிழினியன்)

# தொடர்ச்சியான பயிற்சியும், விளையாட்டுத் திறமையும் மைலோ கிண்ணத்தைச் சுவீகரிக்க வழிகோலியது

## மானிப்பாய் இந்து அணித் தலைவர் செவ்வி

வலி.வடக்கு, நவ.21

நாம் பெற்ற தொடர் பயிற்சியும், எமது அணி வீரர்களிடையே காணப்பட்ட விளையாட்டுத் திறமையும் எம்மை 'மைலோ' வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்க வைத்தது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணியின் அணித்தலைவர் கந்தசாமி நிசாந்தன் இவ்வாறு குறிப்பிட்டார்.

'மைலோ' கிண்ணத்திற்காகக் கொழும்பில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 'சி' பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி தேசிய மட்டச் சம்பியனாகியது.

இது குறித்து அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியின் விவரம் வருமாறு:

இறுதிப்போட்டி நடைபெற்ற மைதானம் மிகவும் மோசமானதாகக் காணப்பட்டது. அது சேறும் சகதியுமாக விளையாட முடியாத நிலையில் இருந்தது.

எமது வீரர்கள் எப்படியும் வெற்றிபெற வேண்டும், சம்பியன் கிண்ணத்தை யாழ்ப்பாணம் [illegible] மனநிலையுடன் விளையாடினார்கள்.

எமது அதிபர் மற்றும் உதயன் ஆசிரியர், கிருஸ்ணராசா ஆசிரியர் மைதானத்தில் எம்மை ஊக்குவித்தார்கள். இத்துடன் பயிற்றுவிப்பாளர்களான சிவச்செல்வம் வசந்தன், உதயன் ஆகியோருடன் ஆசிரியர்களும் பயிற்சிக் காலத்தில் உற்சாகத்துடன் விளையாட வேண்டும் எனக் கூறிப் பயிற்சி அளிப்பார்கள். அதுவும் எமது வெற்றிக்குப் பெரும் துணையாக அமைந்தது.



அனைத்து வீரர்களும் தமது பொறுப்பை உணர்ந்து மைதானத்தில் விளையாடினார்கள். எமது கூட்டு முயற்சியே குறிப்பாக வீரர்களுடன் ஆசிரியர்களும் இணைந்து செயற்பட்டதன் விளைவே எமது வெற்றியாகும்-என்றார். (50-86)

# கே.சி.சி.சியை வென்றது ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே இடம்பெற்று வரும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணிமோதியது.

இதில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கே.சி.சி.சி. அணியை 77:41 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (50-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டிக்கொடுத்த விபீஷணன் என்று கருணாநிதியை வரலாறு தூற்றும்!

**இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டதை நினைத்து தாம் மௌனமாக அழுகிறார் என்ற சாரப்பட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார் தமிழக முதல்வர் கருணாநிதி. அவரது அறிக்கையையும் அதற்கு நக்கீரன் என்பவர் எழுதிய பதிலையும் தமிழக நாளிதழ் ஒன்று வெளியிட்டிருக்கிறது. அது இங்கு பிரசுரமாகின்றது.**



இலங்கையில் விடுதலைப் புலிகள் எடுத்த அரசியல் முடிவின் விளைவுகள் எப்படி ஆயின என்பதை எண்ணிப் பார்த்து நாம் மௌனமாக அழுவது யார் காதில் விழப் போகிறது? என்று முதல்வர் கருணாநிதி வேதனை தெரிவித்துள்ளார். மேலும், அந்த மௌனத்தின் வலிதான் யாருக்குத் தெரியப் போகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து, முதல்வர் கருணாநிதி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

''விடுதலைப் புலிகளின் படையில் நின்ற ஒரு சில தளகர்த்தர்களுக்கு, தளபதிகளுக்கு, தலைவர்களுக்கு தமிழகத்தின் சார்பில் நாமே வலுவில் சென்று ஆதரவு வழங்கினோம். அது மிக லேசாகவே தெரிந்தது.

நாம் எடுத்து வைத்த கருத்துகள் அலட்சியப்படுத்தக் கூடியவைகளாக ஆகி விட்டன. வீரத்தைப் பயன்படுத்திய அளவுக்கு, இதுபோன்ற போர் முனைகளில் விவேகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தினோம். அதை நாம் தொடர்ந்து வலியுறுத்திய காரணத்தாலோ என்னவோ அலட்சியப்படுத்தி விட்டார்கள்.

''எல்லாம் முடிந்து மேலும் முடிவுறுமோ?' என்ற துயர நேரத்திலே ஜனநாயக ரீதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு வாய்ப்பு வாசற்படி வரையிலே வந்த போதுகூட, அதை எட்டி உதைத்து விட்ட தவறான காரியம் நடைபெற்றது.

''இந்தப் போரின் விளைவுகளுக்கு ஒரு வகையில் பிரபாகரனும் காரணம். அமைதி முயற்சி நடந்த போதெல்லாம் அதனை தவிர்த்தார் அவர். தமிழர்களின் கோரிக்கைகள் என்னவென்பதை தெரிவிக்காமலே இழுத்தடித்தார். மேலும், 2005இல் நடந்த அதிபர் தேர்தலில் தமிழர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. தமிழ் மக்களை தேர்தலைப் புறக்கணிக்கச் செய்தார். அவர்கள் தேர்தலில் தங்கள் பங்களிப்பை செய்திருந்தால், தமிழர்களின் மனநிலை என்னவென்பதை அறிந்து கொள்ள முடிந்திருக்கும். அந்த ஜனநாயக வாய்ப்பை தமிழ் மக்களுக்குத் தர பிரபாகரன் தவறி விட்டார்' என்று இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கே தெரிவித்துள்ளார்.

அவர் கூறியிருப்பதை கூர்ந்து கவனித்தால் விடுதலைப் புலிகள் போர்த் தந்திரத்தை எதிர்காலக் கணிப்போடு கடைப்பிடிக்காததுதான் காரணம் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இலங்கை அதிபர் தேர்தலில் 1.47 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ரணில் விக்ரமசிங்கே தோல்வி அடைந்தார். ஏறத்தாழ ஏழு லட்சம் தமிழ் வாக்காளர்கள் தேர்தலைப் புறக்கணித்த காரணத்தால், அவர்கள் வாக்களிக்கவே இல்லை.

இதை எண்ணிப் பார்க்கும் போது, விடுதலைப் புலிகள் சார்பாக அவசரப்பட்டு அன்று எடுக்கப் பட்ட அரசியல் முடிவின் விளைவுகள் எப்படி ஆயின, எங்கே போய் முடிந்தன என்பதை நினைத்துப் பார்த்து நாம் மௌனமாக அழுவது யார் காதில் விழப் போகிறது? நம்முடைய மௌனவலி யாருக்குத் தெரியப் போகிறது?'' என்று முதல்வர் கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். கருணாநிதியின் மேற்படி அறிக்கை தொடர்பாக ''நக்கீரன்'' வெளியிட்டுள்ள விளக்கம் கருணாநிதிக்கு அறளை பிறந்துவிட்டது என்பதற்கு அவரது இந்த அறிக்கை நல்ல சான்று. இல்லை பாசாங்கு செய்கிறார்.

விடுதலைப்புலிகளுக்கும் எங்களுக்கும் உள்ள உறவை எப்போதோ விலக்கிக் கொண்டுவிட்டோம். விடுதலைப்புலிகளுடனான அணுகுமுறையில் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் அணுகுமுறைதான் எங்களது அணுகுமுறை என்று நாக்கூசாமல் - வெட்கமோ துக்கமோ சிறிதளவுமின்றி - தமிழக சட்டசபையில் பேசிய கருணாநிதி இப்போது ''விடுதலைப் புலிகளின் படையில் நின்ற ஒருசில தளகர்த்தர்களுக்கு, தளபதிகளுக்கு, தலைவர்களுக்கு தமிழகத்தின் சார்பில் நாமே வலுவில் சென்று ஆதரவு வழங்கினோம். அது மிக லேசாகவே தெரிந்தது'' எனப் புதுக்கதை பேசுகிறார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறைக்கு கட்டளை போட்டு காவல்துறை கைது செய்த நூற்றுக் கணக்கான விடுதலைப் புலிகள் என சந்தேகப் பட்ட வர்களை இன்றும் சிறப்பு முகாம்களில் அடைத்து வைத்து அழகு பார்க்கும் கருணாநிதி ''ஆதரவு வழங்கினோம்'' என அப்பட்டமான பொய் சொல்கிறார்.

இப்போது கருணாநிதிக்கு ரணில் விக்கிரமசிங்க மீது அளவுகடந்த பாசம் பொத்துக் கொண்டு வந்திருக்கிறது. அவரைப் புலிகள் தோற்கடித்து விட்டார்கள் என்று கருணாநிதி ஒப்பாரி வைக்கிறார்.

இந்த ரணில் விக்கிரமசிங்கதான் . தீர்வு எதனையும் முன்வைக்காமல் பேச்சுவார்த்தையை இழுத்தடித்தவர். 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் 05 ஆம் நாள் ஒஸ்லோவில் நடந்த மாநாட்டில் விடுதலைப்புலிகள் உள்ளக தன்னாட்சி யோசனையை முன்வைத்தார்கள். அதனை அவரது பதவி காலத்தில் நடைமுறைப்படுத்த ஒரு சின்ன அசைவைக்கூடச் செய்யாதவர்.

விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல்களை இந்தியாவின் துணையோடு மூழ்கடித்தவர். அந்தச் சாதனையை நாடாளுமன்றத்தில் பெருமையாகப் பேசியவர்.

மேற்குநாடுகளின் செல்லப்பிள்ளையாக விளங்கிய ரணில் விக்கிரமசிங்க மேற்குநாடுகளின் துணையோடு விடுதலைப்புலிகளை வீழ்த்த சதிசெய்தார். விடுதலைப் புலிகளை சிக்க வைக்க வலை பின்னினார்.

இதுபோன்ற காரணங்களின் அடிப்படையில் தான் தேர்தலை விடுதலைப்புலிகள் புறக்கணித்தார்கள். இரண்டு பிசாசுகளில் எந்தப் பிசாசும் வேண்டாம் என்பதே அவர்களது கணிப்பாக இருந்தது. ஏனென்றால் ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷவும் அடிப்படையில் சிங்கள - பௌத்த இனவாதிகள்.

விடுதலைப்புலிகளின் தோல்விக்கு இந்திய அரசு செய்த சதிதான் காரணம். அதில் பங்காளியாக இருந்த தி.மு.க.கட்சியும் காங்கிரஸ் கட்சியும் தான் காரணம். இந்தியா மட்டும் ஒதுங்கி இருந்திருந்தால் விடுதலைப்புலிகளை போர்க்களத்தில் வீழ்த்தியிருக்க முடியாது.

இதனை நேற்றுக் கூட இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். இலங்கையை காப்பாற்றியது இந்தியாதான் என மீண்டும் சத்தியம் செய்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான கீடைசிக்கட்ட போரின்போது இந்தியா அளித்த ஆதரவு காரணமாகவே இலங்கை மீதான உலக நாடுகளின் நிர்ப்பந்தம் குறைந்தது என அந்நாட்டின் பாதுகாப்புத்துறைச் செயலரும், அதிபர் ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். கொழும் பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் இதனை தெரிவித்த அவர், இந்தியா அளித்த ஆதரவினால் தான் போரை நிறுத்தக்- கோரும் உலக நாடுகளின் நிர்ப்பந்தம் குறைந்து, தொடர்ந்து தாக்குதலை நடத்த முடிந்ததாகவும் கூறினார்.

இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு இந்தியா என்று கூறிய கோத்தபாய, கடந்த நான்காண்டுகளில் இந்த நட்பு மேலும் நெருக்கமானதாகவும், புலிக ளுக்கு எதிரான போரில் இந்தியா பல வகைகளில் உதவிபுரிந்ததாகவும் தெரிவித்தார்.

எனவேதான் கருணாநிதியின் கைகளில் தமிழீழ மக்களது குருதி தோய்ந்திருக்கிறது என்று குற்றம் சாட்டுகிறோம். வரலாறு தலைவர் பிரபாகரனை தமிழன் மானம் காத்த சுத்த வீரன் என்று போற்றும். கருணாநிதியை தமிழர்களை எதிரிக்குக் காட்டிக்கொடுத்த விபீஷணன் என்று தூற்றும்.

---

# நெஞ்சை விட்டகலா ஓராண்டு நீங்காத நினைவில்.....



மண்ணில் 17.02.1948
விண்ணில் 09.12.2008

அமரர் கந்தையா இராசதுரை
(திருநெல்வேலி வர்த்தகர்)

அப்பா! அப்பா! என்றழைக்க.......
அன்புடனே எம்மை அரவணைத்திர் அன்பு மொழி பேசி
ஆதரவாய் எமக்கிருந்தீர்........
இன்று நாம் உங்களைப் பார்க்க முடியாமல் உங்களுடன் பேசமுடியாமல்
உங்களைப் பற்றிய பழைய நினைவுகளினை நெஞ்சிலே சுமந்து
தினம் தினம் வேதனையால் துடிதுடிக்க
அப்பா நீங்கள் எங்கே சென்று மறைந்தீர்கள்?

ஓடிப்போனதப்பா ஓராண்டு கண்மூடித் திறப்பதற்குள்
ஆடிப்போனோமப்பா உங்கள் திடீர் பிரிவால்
எங்களை வாட்டிவதைக்கின்றது உங்கள் பிரிவு
யாரும் அருகில் இல்லாமல்
ஓர் இராத்திரியில் யாவரும் எதிர்பாராத வகையில்
தன்னந்தனி உலகினை தேடி..... எல்லோரினையும் தவிக்கவிட்டு
எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்றுவிட்டீர்களே அப்பா....!
எங்கு சென்றீர்கள் எம் அப்பாவே... தேடுகிறது உங்களை - எம் கண்கள்
நீங்கள் வாழ்ந்த இடமெல்லாம் இன்று சிதறுகிறது கண்ணீர்த் துளிகள்
உங்களைப் பற்றிய நினைவுகளால் தினம் தினம் நிம்மதியின்றித் தவிக்கின்றோம்...
வேதனையால் தினம் தினம் கண்ணீர் சொரிகிறோம்.

ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
பலகோடி இன்பங்கள் இருந்தென்ன
உங்கள் உறவுக்கு நிகர் எமக்கு இப்பாரினில் யார்தான்???

கண்ணில் எப்போதும் ஒரு சோகம்
மனதில் எப்போதும் ஒரு ஏக்கம்
தண்ணீர் இல்லையெனில் உண்டாகும் தாகம்
போகவே போகவில்லை உங்களை இழந்த சோகம்...

நிழல் தந்த நீங்கள் இன்று நிழல் படமானாலும்
எம்மைவிட்டு நீங்கள் பிரிந்தாலும்
எம் உள்ளங்களில் நிறைந்து இருக்கின்றீர்கள்...
கடைசிக் காலத்தில் உங்களை எம்கைகளில் தாங்கமுடியவில்லையே
கடைசிக் காலம்வரை ஓய்வின்றி குடும்பத்திற்காக உழைத்து
இன்று எம்மை நிலைகுலைய வைத்துவிட்டு சென்றுவிட்டீர்களே அப்பா......

எங்களைத் தனிமையில் விட்டதன் தாக்கம்
தினம் தினம் நாம் படும் வேதனைகள் ......
தினம் தினம் நாம் சொரியும் கண்ணீர்த் துளிகள்....

உங்களுக்குத் தெரிகிறதா அப்பா???
மீண்டும் இப்புவுலகில் பிறப்பீர்களா எம் அப்பாவாய்!
மீளாத்துயிலில் நீங்களும் .......
மீளாத்துயரில் நாமும்.......

முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,திருநெல்வேலி.

நெஞ்சு கனத்த
நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

(இ/562618)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை – இந்திய டெஸ்ட்; சமநிலையில் முடிந்தது

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் அகமதாபாத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்த 426 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பாக ராகுல் டிராவிட் 177 ஓட்டங்களையும், அணித்தலைவர் 110 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக வெலகெதர 4 விக்கெட்டுக்களையும், முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும், தம்மிக்க பிரசாத் 2 விக்கெட்டுக்களையும், ஹேரத் 1 விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மஹேல ஜெயவர்த்தன (275), பிரசன்ன ஜெயவர்த்தன (154), டில்ஷான் (112) ஆகியோரின் அபார ஆட்டத்தினால் ஓட்டங்களை குவித்தது. 7 விக்கெட் இழப்புக்கு 760 ஓட்டங்களை குவித்திருந்தபோது இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸை நிறுத்தி இந்தியாவை மீண்டும் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தது.

இந்திய அணி சார்பில் சஹிர்கான், இஷாந் சர்மா, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி மிகவும் நிதானமாக, தோல்வியை தவிர்க்கும் நோக்குடன் மெதுவாக ஆடியது.

முதலாவது இன்னிங்ஸில் இலங்கை அணியைவிட 334 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த இந்திய அணி மெது மெதுவாக அந்த இலக்கை நோக்கி நகர்ந்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களில் ஒருவரான கம்பீர் (114), சச்சின் டெண்டுல்கார் (100), ஷேவாக் (51), லக்ஷ்மன் (51) ஆகியோரின் பொறுமையான ஆட்டம் இந்திய அணியை தோல்வியிலிருந்து மீட்டது.

நேற்று ஐந்தாம் நாள் ஆட்டம் முடிவடையும்போது இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து [illegible]2 ஓட்டங்களை எடுத்திருந்தது. போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாக 275 ஓட்டங்களைக் குவித்த இலங்கை வீரர் மஹேல ஜெயவர்த்தன தெரிவானார்.

# ஆப்கானில் குண்டுத் தாக்குதல்: 13 பேர் பலி; 36 பேர் படுகாயம்!

காபூல், நவ. 21

தென்-மேற்கு ஆப்கானிஸ்தானிலுள்ள பாரா மாகாணத்தின் தலைநகரான பாரா நகரில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். 36 பேர் காயமடைந்தனர். பல கட்டடங்கள் சேதமடைந்தன என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

மோட்டார் சைக்கிளொன்றில் வந்த குண்டுதாரியொருவர் மக்கள் நடமாட்டமிகுந்த சந்தைப் பகுதியில் இக்குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார். ஒரு பொலிஸ்காரர் உட்பட சந்தைக்கு வந்தவர்களே இதற்குப் பலியாகியுள்ளார்கள் என்றும் இவ்வட்டாரம் குறிப்பிட்டது.

பாரா நகரிலுள்ள அடாஹேராட் பகுதியில் இப்பயங்கர குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இப்பகுதியிலிருந்தே ட்ரக்குகள் பொருள்களை ஏற்றிக்கொண்டு ஹெராட் மாகாணத்துக்குச் செல்கின்றன. நகரில் இது ஒரு கேந்திர இடமாகும் என பாரா பிரதம பொலிஸ் அதிகாரி பாக்கீர் அஹ்மத் அஸ்கார், ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இக்குண்டுத் தாக்குதலில் டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் பெருவாரியானோர் சிவிலியன்களாவர். பலத்த காயங்களுக்குள்ளான அநேகர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர். உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என மாகாண ஆளுநர் ரொகுல் அமின் இச்செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இக்குண்டுவெடிப்பால் அக்கம்பக்கக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. தலிபான்கள் தற்போது தென், கிழக்குப் பகுதிகளிலிருந்து வெளியேறி, வட-மேற்குப் பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறார்கள். பாரா மாகாணத்தில் சமீப காலங்களில் தீவிரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாரா மாகாணம் ஈரானின் எல்லையோடு ஒட்டியுள்ளது. இதன் பெரும் பகுதி பாலைவனமாகவே காட்சியளிக்கிறது. ஆப்கானிஸ்தானில் கர்ஸாய் இரண்டாம் முறையாகவும், ஜனாதிபதியாகப் பதவியேற்ற இரண்டாவது நாளில் ஆப்கானிஸ்தானில் இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என உள்ளூர் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

# பிரிக்கப்பட்ட இரட்டையரின் உடல்நிலையில் முன்னேற்றம்

மெல்போர்ன், நவ. 21

ஆஸ்திரேலிய வைத்தியசாலையில் அறுவை சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட பங்களாதேஷ் பெண் இரட்டையர்களான திரிஷ்ணா, கிருஷ்ணா ஆகியோரின் உடல்நிலை முன்னேறியுள்ளது என வியாழக்கிழமை டாக்டர்கள் தெரிவித்தனர்.

தலை ஒட்டிப்பிறந்த இருவரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் ஆஸ்திரேலியாவிலுள்ள ரோயல் குழந்தைகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அங்கு 52 மணி நேர அறுவை சிகிச்சை மூலமாக ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் பிரிக்கப்பட்டார்கள்.

இந்நிலையில், கோமாவிலிருந்த திரிஷ்ணா உடல்நிலை வியாழக்கிழமை காலை முன்னேற்றம் அடைந்தது. அவர் தனது உறவினர் மொய்ராவுடன் பேசினார். கிருஷ்ணாவின் உடல்நிலை ஏற்கனவே முன்னேற்றம் அடைந்து விட்டது. இதுபற்றி டாக்டர்கள் கூறும்போது, குழந்தைகளின் மூளையில் பாதிப்பு ஏற்படாதவகையில் மிகவும் கவனமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றனர்.

# சீன விஜய அனுபவங்களை பராக் ஒபாமா இந்தியப் பிரதமருடன் பகிர்ந்து கொள்வார்

## அமெ. வெளியுறவுத்துறை அதிகாரி கெல்லி

அமெரிக்க விஜயத்தை மேற்கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ஜனாதிபதி ஒபாமா தமது சமீபத்தைய சீனப் பயணம் குறித்த அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதில் ஆர்வமாகவுள்ளார் என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் கெல்லி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஒபாமா, மன்மோகன்சிங்கை எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசுவார். இந்தச் சந்திப்பின்போது இரு தலைவர்களும் பொதுவான விடயங்கள் குறித்துப் பகிர்ந்துகொள்ள வுள்ளனர். குறிப்பாக ஒபாமா தமது சீன விஜயத்தின் போது தம்மைக் கவர்ந்த விடயங்கள், பயண அனுபவங்கள் ஆகியவை தொடர்பாக மன்மோகன் சிங்கிடம் பகிர்ந்துகொள்வார்.

சீனா உட்பட உலக நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ள ஒபாமா மிகவும் புத்துணர்வுடன் காணப்படுகிறார். இதனால்தான் அவர் தமது பயண அனுபவங்களை மன்மோகன் சிங்குடன் பகிர்ந்துகொள்ளவுள்ளார் என்றும் கெல்லி கூறியுள்ளார். வாஷிங்ரனில் புதன்கிழமை செய்தியாளர் மாநாடொன்றில் கெல்லி, மன்மோகன் சிங் வருகை குறித்துப் பேசுகையில் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமரின் விஜயத்தை அமெரிக்கா முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகக் கருதுகிறது. இந்தியாவுடன் இராஜதந்திர உறவை மேலும் வலுப்படுத்தவே அமெரிக்கா விரும்புகிறது என்றும் கெல்லி கூறியுள்ளார்.

# பங்களாதேஷின் பிரதமருக்கு இந்திரா காந்தி அமைதி விருது

டில்லி, நவ. 21

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு 2009 ஆம் ஆண்டுக்கான இந்திராகாந்தி அமைதி விருது வழங்கப்படவுள்ளது. இந்திராகாந்தி நினைவு அறக்கட்டளை வழங்கும் இந்த விருதுக்கு பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான சர்வதேச தேர்வுக் குழு, ஹசீனாவைத் தெரிவுசெய்துள்ளது.

பங்களாதேஷ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு,' அவர்களின் வாழ்வு வளம்பெற ஏழ்மையை ஒழித்து, ஜனநாயகம் தழைத்தோங்கும் விதத்தில் பாடுபட்டமைக்காக ஷேக் ஹசீனாவுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருது இலங்கை நாணயப்படி ரூபா 75 இலட்சம் ரொக்கப் பரிசும், சான்றிதழும் கொண்டது. 1996 - 2001 வரை பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, கடந்த ஆண்டு டிசெம்பரில் இரண்டாவது முறையாகவும் பிரதமரானார்.

பங்களாதேஷில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், ஏழைகளுக்கான வீடமைப்பு, சுகாதார சேவை, உணவுப் பாதுகாப்புத் திட்டம் ஆகியவை உட்பட பல திட்டங்களை ஷேக் ஹசீனா அமுலாக்கிவருகிறார்.

பங்களாதேஷிலிருந்து இந்தியாவுக்குள் மேற்கொள்ளப்பட்டுவந்த ஊடுருவல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், இரு நாடுகளுக்கிடையே அமைதியை நிலைநாட்டவும் இவர் பல முயற்சிகளை எடுத்துள்ளார் என இந்திரா காந்தி அறக்கட்டளை குறிப்பிட்டுள்ளது.

# இரவலாகப் பெற்ற இரண்டு நூல்கள் 50 ஆண்டுகளுக்குப் பின் கையளிப்பு

வாஷிங்டன், நவ. 21

அமெரிக்க நூலகமொன்றிலிருந்து 50 வருடங்களுக்கு முன்னர் இரவலாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகங்கள் தற்போது அபராதத்துடன் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உரிய தினத்தில் புத்தகங்களை ஒப்படைக்காத காரணத்திற்காக குறித்த இரண்டு நூல்களுக்காக ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு புத்தகங்களையும், அபராதப் பணத்தையும் குறித்த நபர் நூலகத்தில் ஒப்படைத்துள்ளார். பீனிக்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் [illegible] 1959 ஆம் ஆண்டு [illegible]ன.


கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் மின்சார, இலத்திரனியல் பொருள்களை இறக்குமதி செய்யும் நிறுவனமொன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு

பணியாளர்கள் தேவை

1. கணக்காளர்
(முன் அனுபவமுள்ள 35-60 வயதுள்ளவர்)
2. விற்பனைப் பிரதிநிதிகள்
(சம்பளம் + கவர்ச்சிகரமான போனஸ்)

மின்சார இலத்திரனியல் பொருள்களில் அனுபவமுள்ள, ஆங்கிலம், சிங்களம் தெரிந்த, 22-35 வயதுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சுயவிவரக்கோவையுடன் 23.11.2009 திங்கள் முற்பகல் 10 மணிமுதல் பி.ப.3 மணிவரை நேரில்வரவும்.

நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில்
Mahesons
No.279, Stanly Road, Jaffna.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகாமை)
T.P: 0777725258
Abbe (PVT) LTD
14(1/1) Daya Road, Colombo - 6.
(இ/562622)



கஜன் வீடியோ சென்ரர்
ஐங்கரன் VCD
கஜன் வீடியோஸ் சென்ரர்
* உன்னைப்போல் ஒருவன்
* வால்மீகி
* மோதிவிளையாடு
* கந்தசாமி
* ஐந்தாம் படை
* அச்சமுண்டு அச்சமுண்டு
* படிக்காதவன்
* திருவண்ணாமலை
* மாசிலாமணி
* குருஎன்ஆளு
* யாவரும்நலம்
* பொக்கிஷம்
* நினைத்தாலே இனிக்கும்
* ஈரம்
* த.நா.07.அல.4777
* இந்திரவிழா
* குளிர் 100 டிகிரி
* மலையன்
* அயன்
* ஏகன்
* தோரணை
* வெண்ணிலா கபடிக்குழு
* தீ
* பாண்டி
* சிவாமனசுல சக்தி
* சத்யம்
* அலிபாபா
* அருந்ததி
* சிரித்தால் ரசிப்பேன்
* நியூட்டனின் 3ஆம் விதி
* மதுரை சம்பவம்
* ராஜாதிராஜா
* பசங்க
* ஜெயம் கொண்டான்
* சர்வம்
* தாம்தூம்
* ஆறுமுகம்
* வெடிகுண்டு முருகேசன்
* அந்தோணியார்
* பந்தயம்
* ராமன் தேடிய சீதை
* எங்கள் ஆசான்
* நான் கடவுள்
* சரோஜா
* குசேலன்
* அபியும் நானும்

Hindi Movies (VCD)
* New York
* Wanted
* Ghajini
* Yuvvraaj
* Luck
* Jaane Tu...
* Love aaj kal
* Kaminey
* 13 B
* Rab ne bana di jo di

* மஹாபாரதம்
* சம்பூர்ண இராமாயணம்
* கர்நாடக சங்கீத DVD, ஓடியோ CD
* A.R.Rahman இசைத் தென்றல் Vol : 1-6
* Harris Jeyaraj - Vol : 1-2

Original பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம்.
கஜன் வீடியோ
பலாலி வீதி, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
T.P : 021 222 6086
(இ/562637)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் நிலையறிய இலங்கைக்கு மத்திய எம்.பிக்கள் குழு செல்ல வேண்டும்

## எதிர்க்கட்சியின் சுஷ்மா சுவராஷ் வலியுறுத்து



புதுடில்லி, நவ. 21

இலங்கையிலுள்ள அப்பாவித் தமிழர்களின்நிலைமை குறித்து நேரில் ஆய்வு செய்வதற்காக மத்திய அரசு சார்பாக எம்.பிக்கள் குழு ஒன்றை அனுப்ப வேண்டும் என நாடாளுமன்றத்தில் வலியுறுத்துவோம்.

- இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவகாரத்துக்கான அலுவலக ஆய்வுக் கூட்டம் டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்தது. அப்போது, நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பாரதீய ஜனதாக் கட்சி சார்பாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சுஷ்மா சுவராஜ் பங்கேற்றார்.

கூட்டத்துக்கு பின்னர் சுஷ்மா கூறுகையில், இலங்கையில் உள்ள தமிழர்களின் நிலைமை குறித்து நேரில் ஆய்வு செய்வதற்காக மத்திய அரசு சார்பாக எம்.பி.க்கள் குழு ஒன்றை அனுப்ப வேண்டும் என நாடாளுமன்றத்தில் வலியுறுத்துவோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு சீனாவின் அத்துமீறல் போன்ற பிரச்சினைகள் குறித்து விவாதம் நடத்துமாறு பா.ஜ.க. சார்பாக பிரச்சினை எழுப்பப்படும் - என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றம் நடைபெறும்போது பிரதமர் வெளிநாடு செல்வதற்கு பா.ஜ.க. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் தொடங்கியது. அடுத்த மாதம் இறுதிவரை இந்தக் கூட்டம் நடைபெறும். இந்த நிலையில், 22 ஆம் திகதி முதல் 10 நாள்களுக்கு அமெரிக்கா, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளில் பிரதமர் மன்மோகன்சிங் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். 26 ஆம் திகதி ஸ்பெயினில் நடை பெறும் காமன் வெல்த் மாநாட்டில் பங்கேற்கிறார்.

இதுகுறித்து சுஷ்மா சுவராஜ் கூறுகையில் -

நாட்டாளுமன்ற கூட்டம் நடைபெறும் நாள்களும், பிரதமரின் வெளிநாட்டு சுற்றுப்பயண நாட்களும் ஒரே சமயத்தில் அமையாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற விதிமுறைகளில் கூறப்பட்டுள்ளது.

மிகவும் தவிர்க்க முடியாத சூழ்நிலையாக இருந்தால் மட்டுமே வெளிநாடு செல்லலாம். தற்போது, குளிர்காலத் கூட்டத்தொடர் நடைபெறும்போது வெளிநாடு செல்வதன் மூலமாக நாடாளுமன்றத்தைப் பிரதமர் அவமதிப்புச் செய்கிறார் - என்றார்.



மழையால் பாதிக்கப் பட்டுள்ள நீலகிரி மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் நிவாரணப் பணிகளுக்காக நடிகைசோனா முதலமைச்சரிடம் ரூபா 5 லட்சத்திற்கான காசோலையை வழங்கிய போது....

# மீனவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து இலங்கைத் தூதரகம் முன் முற்றுகைப் போர்

## மார்க்சிஸ்ட் செயலர் தகவல்

பரமக்குடி, நவ. 21

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நடத்தும் தாக்குதலைக் கண்டித்து இலங்கைத் தூதரகம் முன் முற்றுகைப் போராட்டம் நடத்த உள்ளோம் - என்று மார்க்சிஸ்ட் செயலர் வரதராஜன் கூறினார்.

பரமக்குடியில் நடந்த மீன்பிடித்தொழில் பாதுகாப்பு கலந்தாய்வுக் கூட்டத்தில் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையின் தாக்குதல் தொடர்கிறது. இதற்கு முடிவு காண இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச வேண்டும். மீன்பிடித்தொழிலை ஒன்றுபடுத்துதல் என்ற பெயரில் மத்திய அரசு குளிர்கால கூட்டத்தொடரில் சட்டம்ஒன்றை கொண்டு வரவுள்ளமை கவலை அளிப்பதாக உள்ளது. மீனவர்களுக்கு விரோதமான சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று ஆலோசித்து இருக்கிறோம்.

டிசம்பர் 2 இல், மீனவ மக்கள் வாழும் பகுதிகளில் பிரசாரம் செய்வது மற்றும் இராமேஸ்வரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களை திரட்டி கோரிக்கை மாநாடு நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்கு வழி காணாவிட்டால் ஜனவரியில் இலங்கைத் தூதரகம் முன் முற்றுகைப் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம் - என்றார்.

# இலங்கைப் படையின் அத்துமீறலால் விரக்தியின் விளிம்பில் தமிழக மீனவர்

## மீனவர் பேரவைத் தலைவர் கவலை

நாகப்பட்டினம், நவ. 21

தொடர்ந்து வரும் இலங்கைக் கடற்படையின் அத்துமீறல்களைத் தடுக்க மத்திய அரசு இதுவரை போதுமான நடவடிக்கை ஏதும் எடுக்காதமை தமிழக மீனவர்களிடையே விரக்தியையும் மனச்சோர்வையும் ஏற்படுத்தியுள்ளன. இதைக் கண்டித்து, உலக மீனவர் தினத்தை கறுப்பு தினமாக கடைப்பிடிக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்று தமிழ்நாடு மீனவர் பேரவைத் தலைவர் ரா.அன்பழகனார் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி பிரசாரம் மேற்கொண்டுள்ள அவர், நாகையில் கடந்த புதன்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

தொடர்ந்து வரும் இலங்கைக் கடற்படையின் அத்துமீறல்களைத் தடுக்க மத்திய அரசு இதுவரை போதுமான நடவடிக்கை ஏதும் எடுக்காதமை தமிழக மீனவர்களிடையே மனச்சோர்வை ஏற்படுத்தியுள்ளது. இதைக் கண்டித்து, உலக மீனவர் தினத்தை கறுப்பு தினமாக கடைப்பிடிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

தமிழக மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டியது அவசியம். விசைப் படகுக்கான டீசல் மானியத்தை 2,500 லீற்றராகவும், நாட்டுப் படகு, வல்லம் படகு, கட்டுமரம் ஆகியவற்றுக்கான டீசல் மானியத்தை 400 லீற்றராகவும் உயர்த்த வேண்டும்.

மீன்பிடித் தடைக்கால நிவாரணத்தை ரூ. 2 ஆயிரமாக உயர்த்த வேண்டும்.

கடல் மீனவர், உள்நாட்டு மீனவர் என வகைப் பிரிக்காமல் அனைத்து மீனவர்களுக்கும் அரசின் சலுகைகள் சமமாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 21 ஆம் திகதி (இன்று) தமிழக முதல்வரைச் சந்தித்துக் கோரிக்கை மனு அளிக்கப்படும்.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், சேதுப் பணிகளுக்கு எதிரான முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் - என்றார்.

# இந்தியச் செய்திகள்

# சினிமாவை பிரதான தொழிலாக அங்கீகரிக்கக் கோருகின்றார் கமல்



சென்னை, நவ. 21

சினிமாவை அங்கீகரிக்கப்பட்ட பிரதான தொழிலாக அறிவிக்க வேண்டும் - என்று இந்திய தொழில், வர்த்தகக் கூட்டமைப்பின் தலைவர் கமலஹாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் நடைபெற்று வந்த இந்திய தொழில், வர்த்தக கூட்டமைப்பு மற்றும் ஊடகம், பொழுதுபோக்கு வர்த்தக மாநாட்டின் இரண்டாம் நிகழ்ச்சிகள் கடந்த வியாழக்கிழமை முடிவுற்றன.

இதன் பின்னர் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் நடிகர் கமல்ஹாசன் கூறியவை வருமாறு -

இந்திய தொழில், வர்த்தக கூட்டமைப்பு மற்றும் ஊடகம் கேளிக்கை தொழில் வர்த்தக கூட்டமைப்பு சென்னையிலும் தொடங்கப்பட வேண்டும் என்று போராட்டம் நடத்தியதற்கு இப்போது பலன் கிடைத்து நிறைவேறியுள்ளது. இம்மாநாட்டில் திரைப்படத் துறையின் வளர்ச்சி குறித்து பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்பட்டது. அதன் அடிப் படையில் சில கோரிக்கைகளை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு முன்வைத் துள்ளோம்.

இந்தியாவில் சினிமா என்ற தொழிலை பிரதான தொழிலாக அறிவிக்க வேண்டும். பழைய மற்றும் புதிய திரைப்படங்களை பாதுகாக்க டிஜிட்டல் முறையை பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் கலையை எத்தனை வருடங்கள் கடந்தாலும் பாதுகாக்கலாம். திரைப்படங்கள் அனைத்தும் பதிப்புரிமை செய்யப்பட வேண்டும். அதற்காக ஆணையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன - என்றார்.

# இந்தியக் கடற்பகுதியில் மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 6 பேர் கைது!

இலங்கை மீனவர்கள் 9 பேர் இந்தியக் கடலோரக் காவல் படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியக் கடலோரக் காவல் படையினர் இந்தியக் கடற்பகுதியில் ரோந்து சுற்றி வந்தனர். அப்போது இந்திய கடல் எல்லையில் 2 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 9 பேரை வளைத்துப் பிடித்துக் கொண்டு வந்து காசிமேடு மீன்பிடித் துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

விசாரணையின் போது பிடிபட்ட மீனவர்களின் பெயர்கள் திமிது (வயது -25), விதானசுகேடா ஹான்ரங்க (21), வசந்த (27), பிரியதர்சன (23), நிசாந்த (34), ஜெய லத் (42), கிஷாந்த (35), பியுமால் சத்துரங்க (22), அசேலசஞ்சீவ (23) எனத் தெரியவந்தது.

அவர்களைக் கைதுசெய்து, அவர்களிடம் இருந்து 2 படகுகள், 2 தொன் மீன்களையும் பறிமுதல் செய்தனர். 9 பேரும் எழும்பூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# புழல் சிறைச்சாலையில் இருந்த 15 இலங்கை மீனவர் விடுதலை

இராயபுரம், நவ. 21

இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 15 பேர் விடு தலை செய்யப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி இந்தியக் கடல் பகுதியில் மீன்பிடித்த 15 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர் களின் 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த நிலையில் தமிழக அரசு 15 இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்ய உத் தரவிட்டது. அதன்படி இலங்கை மீனவர்கள் 15 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் 3 படகுகளில் இலங்கைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.


## துயர்பகிர்கின்றோம்



எனக்கு ஆசானாக இருந்து நிர்வாகத் திறனையும், தொழில்சார் திறனையும் அனுபவரீதியாக ஊட்டிய, பெருந்தெருக்கள் திணைக்களம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பொறியியலாளர்

**அமரர் கு.முத்துக்குமாரசூரியர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வற்றாப்பளை அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

வே.சிவபோகன் குடும்பத்தினர்
இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(91249)



## தொலைந்த ஆவணங்கள்

உரும்பிராய் - வடக்கு உரும்பிராயை சேர்ந்த பாலவந்தன் ரேயோன் என்பவரது மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், வங்கிப்புத்தகம் Flash டீரி, அனுமதி அட்டை, அலுவலக ஆவணங்கள் என்பன உள்ளடங்கிய பை யாழ்ப்பாணத்துக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்திலோ அல்லது அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 106, 04ஆம் [illegible] உதவி [illegible] வழங்கப்படும்.

தொடர்புக்கு 0776365802, 0212222416



## 6 மாத கால ஆங்கிலக் கற்கைநெறி



ENGLISH FOR BUSINESS & COMMUNICATION

அனுபவமிக்க ஆசிரியர்களினால்........

- அடிப்படையில் இருந்து கற்றுக் கொள்ள...
- உங்கள் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ள விசேட பயிற்சிகள்......
- வசதியான நேரத்துக்கு வகுப்புகளை அமைத்துக் கொள்ள......
- வகுப்புகளில் வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்( 10-15 மாணவர்கள் )
- முதல் 50 மாணவர்களுக்கு பதிவு கட்டணம் விலக்களிக்கப்படும்....
- 100 மாணவர்கள் மட்டும் முதல் 6 மாத கால கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுவர்..

உங்கள் பதிவுகளை 30.11.2009ற்கு முன்னர் மேற்கொள்ளவும்

ALLIANCE INSTITUTE
NO 25, Somasundaram Avenue, Chundikuli, Jaffna
TEL: 0212228193/0215670350/0773296407


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் உருவச் சிலை திரைநீக்கமும், நினைவுப்பேருரை நிகழ்வும் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெற்றன.

அமரர் வித்தியானந்தனின் உருவச் சிலையை துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் திரைநீக்கம் செய்வதனையும், உருவச் சிலைக்கு அவர் மலர்மாலை அணிவிப்பதனையும், முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

அதனையடுத்து நூலகக் கேட்போர் கூடத்தில் துணைவேந்தர் தலைமையில் நடைபெற்ற நினைவுப் பேருரை நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா 'யாழ்ப்பாணத்தின் பண்பாடு: மறந்தவையும், மறைத்தவையும்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவதனையும் காணலாம்.

கீழ்வரும் படங்களில் யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி முன்னாள் பீடாதிபதி தி.கமலநாதன், அகவிழி சஞ்சிகையின் ஆசிரியர் தெ.மதுசூதனன் ஆகியோர் தொகுத்த 'வித்தியின் இலக்கிய முன்னீடுகள்' எனும் நூலினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைப்பதனையும்-

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த முனைவர் பக்தவத்சல பாரதி இந் நூலுக்கான கருத்துரையினை வழங்குவதனையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம். *(படங்கள்: சுதன், சுகந்தன்)*

## முன்பள்ளி ஆசிரியர் இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம்.நவ.21

வலி.வடக்கு கிராமிய வலுப்படுத்தலுக்கான இணையத்தினதும் கல்வித் திணைக்களத்தினதும் அனுசரணையுடன் வலி. வடக்கு முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வலி.வடக்கு முன்பள்ளி இணைப்பாளர் தே.லில்லிராணி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் மு.நடராசா பிரதமவிருந்தினராகவும், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.குகனேசன் கௌரவ விருந்தினராகவும், 'கோர்' நிறுவனத் தலைவர் சி.முருகையா, 'கோர்' நிறுவனத் திட்ட உதவியாளர் கு.கிரிசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (50-9)

## இடம்பெயர்ந்த மாணவரின் விண்ணப்பத்தின் பிரதியை கையளிக்குமாறு கோரிக்கை

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்கு விண்ணப்பித்த இடம்பெயர்ந்த மாணவர்களின் விண்ணப்ப படிவங்களின் பாடசாலைப் பிரதியை நாளை ஞாயிற்றுக்கிழமை வலயத்தில் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

இதற்காக அன்றையதினம் அலுவலகம் திறந்திருக்கும் என்றும் தவறாது பாடசாலைப்பிரதியை ஒப்படைக்கும் படியும் அவர் கோரியுள்ளார். (1)

## புத்தாக்கங்களை இன்று ஒழுங்கு படுத்துமாறு அறிவுறுத்து

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருக்கும் புத்தாக்கப் போட்டியில் பங்குபற்றுவோர் தமது புத்தாக்கங்களை இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 4.30 மணிவரை யாழ். மத்திய கல்லூரியில் ஒழுங்குபடுத்தி வைக்குமாறு இப்போட்டிக்கான பொறுப்பாளர் கலாநிதி நா.சிவயோகன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-7)

## போட்டியாளர்கள் கௌரவிப்பு

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

'போதையற்ற வாழ்வு'-மாவட்ட, மாகாண ஓவியப்போட்டி மற்றும் 'தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது' எனும் தலைப்பிலான மாகாண மட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள், வடமாகாண தமிழ் இலக்கிய விழாவின் ஊர்வல நிழ்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள், பிரதேச மட்டத்தில், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 10 பேர் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-7)

# வவுனியா முகாமிலிருந்து நேற்று 1,500 பேர் அழைத்துவரப்பட்டனர்

## இராமாவில் முகாமில் தங்கவைப்பு

வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து 480 குடும்பங்களைச் சேர்ந்த 1500 பேர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6 மணியளவில் அழைத்துவரப்பட்ட இவர்கள் கொடிகாமம் இராமாவில் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இவர்கள் வழமையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

வெளிமாவட்டங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரும் பணி கடந்த 7ஆம் திகதி பூர்த்தியாகிவிட்டது என அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்திருந்தார்.

நலன்புரிநிலையங்களில் தனித்தனியே தங்கியிருந்த குடும்பங்களே நேற்று அழைத்துவரப்பட்டுள்ளனர். (1)

## எயிட்ஸ் தின சுவரொட்டிப் போட்டி

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் சுவரொட்டிப் போட்டி இன்று சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். மாணவர்களுக்கான முதல் பிரிவு பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5மணி வரையும், இரண்டாம் பிரிவு திறந்த போட்டிப் பரீட்சையாக காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையும் இடம்பெறும்.

இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்து இதுவரை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் பரீட்சை நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-7)

## மோ.சைக்கிள் இலக்கத்தகடுகள் திணைக்களத்துக்கு வந்துள்ளன

யாழ்ப்பாணம்.நவ.21

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் புதிதாக பதிவு செய்யப்பட்ட NPVB-9187 தொடக்கம் NPVB-9443 வரையான இலக்கங்களுடைய மோட்டார் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து இலக்கத் தகடுகளை திணைக்கள அலுவலக நாள்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

மேலும் செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதி வரை சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்கள் தமக்குரிய சாரதிப் பயிற்சி அட்டைகளை புதன்மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 1.30 மணிக்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-7)

## மின்சாரம் தாக்கி இளைஞன் காயம்

மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். அளவெட்டியைச் சேர்ந்த என். நேசன் (வயது - 17) என்பரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மின் இணைப்புத் தொழிலாளியான இவர் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே மின் தாக்குதலுக்கு ஆளானார்.

## ஓமந்தைச் சோதனை நிலையத்தில் லொறிகளுக்கான கட்டணம் குறைப்பு

யாழ்ப்பாணம்.நவ.21

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருள்கள் ஏற்றிவரும் லொறிகளுக்கு ஓமந்தைச் சோதனை நிலையத்தில் சி.டபிள்யூ.ஈ நிறுவனத்தால் அறவிடப்பட்டு வந்த கட்டணம் 50 வீதத்தால் நேற்றுக் குறைக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து வரும் லொறிகள் ஓமந்தைச் சோதனை நிலையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்படுவதற்கு சி.டபிள்யூ.ஈ நிறுவனத்தால் கட்டணம் அறவிடப்பட்டு வந்தது.

இக்கட்டணத்தை குறைக்குமாறு பலதரப்புக்களில் இருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன.

இதனையடுத்து இந்தக்கட்டணம் 50 சதவீதத்தால் நேற்றுமுதல் குறைக்கப்பட்டுள்ளது. (1)

## உடுவில் பிரதேச செயலகத்தில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பர்ணம்.நவ.21

உடுவில் பிரதேச செயலகத்துக்கு வந்த ஒருவரின் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.

வன்னியில் இருந்து வந்துள்ள ஒருவர் இரவலாக பெற்று வந்த சைக்கிளே திருடிச் செல்லப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலகத்தில் அணமையில் ஊழியர்கள், பொதுமக்களின் பதினைந்துக்கு மேற்பட்ட சைக்கிள்கள் அலுவலக நேரத்தில் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அலுவலகத்தில் பொதுமக்களுக்கான நிவாரணம் வழங்குதல் மற்றும் பயிற்சிகள் நடைபெறும் நாள்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர். (ஒ-50)

## ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 84ஆவது அவதாரதின விழா

யாழ்ப்பாணம்,நவ.21

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 84 ஆவது அவதார தின விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.மத்தி சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை நிகழ்வுகளாக அதிகாலை 4.45 மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம், காலை 7 மணிக்கு அபிஷேகம், விசேடபூசை, 8.30 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றம், முற்பகல்11 மணிக்கு ஆபத்பாந்தவன் நாடகம், 11.30 மணிக்கு வைத்திய கலாநிதி இ.சிவசங்கரின் சிறப்புச்சொற்பொழிவு 11.50 மணிக்கு பாலவிகாஷ் மாணவர்களின் கலைநிகழ்வு ஆகியன நடைபெறவுள்ளன.

மாலை நிகழ்வுகளாக பிற்பகல் 2.45 மணிக்கு பாலவிகாஷ் மாணவர்களின் கலை நிகழ்வுகள் 3.45 மணிக்கு நிலைய பஜனைக் குழுவினரின் இசைநிகழ்வு மாலை 5 மணிக்கு திருவூஞ்சல் என்பனவும் இடம்பெறும். (50-204)

## ஆசிரியருக்கான செயலமர்வு

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 9 இல் தமிழ் (புதிய பாடத்திட்டம்) பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நேற்று பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகியது. இன்றும் செயலமர்வு தொடர்ந்து நடைபெறும்.

இந்தச் செயலமர்வில் வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 9 இல் கல்வி கற்பிக்கும் சம்பந்தப்பட்ட கற்பிக்கும் ஆசிரியர்களை கலந்து கொள்ளும்படி வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

## தும்பளையில் மருத்துவ முகாம்

வடமராட்சி.நவ.21

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை தும்பளை சிவப்பிரசகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த மருத்துவ முகாமில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மருத்தவ சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கண்பரிசோதனை நிபுணர்களால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும். நீரிழிவுப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுவதுடன் அது பற்றிய விழிப்புணர்வுக் கருத்துரைகளும் அங்கு இடம்றெும். (50-201-236)

## முகாமையாளர் கழகத்தின் கருத்தரங்கு

'யாழ். மாவட்டத்தில் கட்டடப் பாவனைக்கான பாகங்களையும், சட்டங்களையும் முன் வடிவமைத்தலுக்கும் உற்பத்திக்குமான அறிமுகம்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் முகாமையாளர்கள் கழகத்தின் ஆதரவில் சொற்பொழிவு நடைபெறவிருக்கின்றது.

நல்லூர் யூரோவில் மண்டபத்தில் நாளை 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு நடைபெற விருக்கும் இந்நிகழ்வில் குறோ பில்டிங் சிஸ்ரம்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் பாலித றணசிங்க கருத்துரை வழங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் இன்று 24 மணி நேர தண்ணீர் வெட்டு

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள் மற்றும் அதையண்டிய பிரதேசங்களில் இன்று சனிக்கிழமையும் நாளையும் 24 மணித்தியாலம் நீர் விநியோகம் தடைப்படுமென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

## பெண் தற்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை நடவடிக்கைக்காக ஏற்பாடு செய்துள்ளார் என்றஅப்பத்திரிகை சுட்டிக்காட்டி உள்ளது.

'வசந்தி' எனப்படும் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிப் பெண், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி நடத்திய காலத்தில் கொழும்புக்கு வந்து கிருலப்பனையில் சித்தார்த்த ஒழுங்கையிலுள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்தார் என்றும் அந்த வீடு கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்குச் சொந்தமானதென்றும் - குறித்த தமிழ் அரசியல்வாதி அந்த தற்கொலைதாரிப் பெண்ணை அந்த வீட்டில் சந்தித்துப் பேசியிருக்கின்றார் என்றும் புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'லங்கா இரட' மேலும் தெரிவித்துள்ளது.

ஆனால், புலனாய்வுப் பிரிவினர் உஷார் அடைந்ததை அடுத்து அந்தப் பெண் தம்புள்ள பிரதேசத்துக்குத் தப்பிச் சென்றிருந்தார் என்றும், ஆனால் முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகாவை படுகொலை செய்வதற்காக மேற்படி தமிழ் அரசியல்வாதி அப்பெண்ணை கொழும்புக்கு திரும்ப வரவழைத்துள்ளார் என்றும் 'லங்கா இரட' மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

**படிவங்கள் விற்பனையாகின்றன**

★ மக்கள் சபை செயலாளர் பதவிக்கு பட்ட தாரிகளை ஆள்சேர்ப்பு செய்வதற்கான படிவம்.
★இலங்கை ரயில் திணைக்களத்தின் முகாமைத்துவ சேவையின் தரம்-II ஆம் தரத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு எழுத்து மூல திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப படிவம்.

1. நிரந்தரப்பாதை பரிசோதகர்
2. கட்டடப் பரிசோதகர்
3. பாலப் பரிசோதகர்
4. சமிக்ஞை தொலைத் தொடர்பு பரிசோதகர்
5. இயக்க தள போமன்
6. இயந்திர போமன்

(சி/563644)

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
T.P66934374

## பன்றிக் காய்ச்சலால் உயிரிழந்தார் அதிபர்

குருநாகல் மாவட்டத்தில் பன்றிக்காய்ச்சல் தொற்றுக்கு இலக்காகி பாடசாலை அதிபர் ஒருவர் நேற்று உயிரிழந்தார். கே.டபிள்யு.குணதிலக (வயது58) என்ற அதிபர் பன்றிக்காய்ச்சல் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் நேற்று முன்தினம் குருநாகல் போதன வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையிலேயே அவர் நேற்று உயிரிழந்தார்.

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் அங்கு தொர்டர்ந்து உரையாற்றியவை வருமாறு:-

புலிகள் அமைப்பு அழித்தொழிக்கப்பட்டதன் பின்பு அரசுக்கு இருக்கும் ஒரேயொரு சவால் பொருளாதார ரீதியாக இந்த நாட்டை கட்டியெழுப்புவதுதான்.

அதன்படி இந்நாட்டைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றுசேர வேண்டும். கட்சி வேறுபாடுகளை மறந்து நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியில் ஒன்றிணைந்து இந்நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும்.

எதிர்வரும் தேர்தல்களில் அரசுடன் இணைந்து போட்டியிட்டு இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்துக்கும் நாம் பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம். இந்நாட்டின் மீது அக்கறையுள்ள எவரும் எமது கூட்டமைப்பில் இணையலாம்.

இதுதொடர்பாக அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்த நாம் தயாராகவுள்ளோம். இது எமது நாட்டின் எதிர்காலத்திற்காக விடுக்கப்படும் அழைப்பாகும். - என்றார். (அ-சி)

## சுயவிருப்பின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது குறித்து தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் யுத்தம் முடிந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், அரசினால் நடத்தப்படும் முகாம்களை விட்டு பொதுமக்கள் சுயவிருப்பின்பேரில் வெளியேறிச் செல்வதற்கு இன்னமும் முழுமையான அனுமதி வழங்கப்படவே இல்லை. முகாம்களில் இன்னமும் ஒரு இலட்சத்து 30 ஆயிரம்பேர் வரை தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு எவ்வளவோ காரியங்களைச் செய்யவேண்டி உள்ளது.

இம் மீள்குடியேற்றம் தொடர்பில் அரசினால் பொதுமக்களுக்கு ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

ஏனெனில், எங்கே அவர்கள் செல்லவுள்ளனர். எப்போது செல்கின்றனர். அவர்களின் வீடுகளின்நிலை என்ன? வாழ்க்கையை இனிமேல் எப்படி கொண்டு நடத்தப்போகின்றார்கள். என்றெல்லாம் அவர்களுடன் அரசு கட்டாயம் கலந்து ஆலோசிக்கவேண்டும்.

**மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்குப் போதுமான வழிகள் இல்லை**

மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் மிகவும் போதுமான வசதிகளுடன் இல்லை என்பதும் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

அரசு அடுத்த ஜனவரி மாதத்துக்குள் அகதிகளை முழுமையாக மீள் குடியேற்றி விடும் போல தெரிகிறது. ஆனால், எமக்கு சில சந்தேகங்கள் உள்ளன.

இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் முழுமை பெறவில்லை. சில பிரதேசங்களில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படாமலே உள்ளன.

எனவே, அப்பிரதேசங்களை சொந்த இடமாகக்கொண்ட பொதுமக்கள் அந்த இடங்களுக்கு உடனடியாக திரும்பிச் செல்கின்றமை தற்போது சாத்தியமல்ல. எனவே, முகாம்களை விட்டு வெளியேற்றப்பட்டால், அவர்கள் எங்கே மீள்குடியேற்றப்படுவர்? அவர்களின் எதிர்காலம் என்ன?

ஒருவேளை, நிலக்கண்ணிவெடிகள் சொந்த இடங்களில் அகற்றப்படும்வரை பொதுமக்களில் சிலர், அரசினால் நடத்தப்படும் கூடாரங்களில் தங்கவைக்கப்படுவர். அப்போது அவர்களின் நடமாடும் சுதந்திரம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுவிடுமே. அப்பொதுமக்கள் அக்கூடாரங்களை விட்டு சுயவிருப்பின் பேரில் வெளியில் சென்று வரவும், தொழிலுக்குச் செல்லவும், நண்பர்கள் உறவினர்களைச் சந்திக்கவும் அனுமதிக்கப்படுவரா? அது எப்போது நடைபெறும் என்று கேட்டார். (அ-சி)

## எதிர்க்கட்சிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சி 60 வருடங்கள் பழைமைவாய்ந்த கட்சி. இந்நாட்டை ஆட்சி செய்த கட்சி. பல முக்கிய தலைவர்கள் அந்தக் கட்சியில் இருந்திருக்கின்றனர். ஆனால், அந்தக் கட்சி இப்போது ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாமல் தடுமாறுகின்றது.

16 வருடங்களாக எம்முடன் இருந்த மங்கள சமரவீர, ரணில் விக்கிரமசிங்கவால் எந்தத் தேர்தலிலும் வெற்றிபெற முடியாது என்று கூறிவந்தார். இப்போது ரணிலுடன் இணைந்துகொண்ட பிறகும் மறைமுகமாக அதைத்தான் கூறுகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் அமைக்கப்பட்டுள்ள கூட்டணியில் புலிகளின் நண்பர்கள்தான் அதிகமாகவுள்ளனர். புலித்தலைவர் இறந்தபோது நாடாளுமன்றில் கண்ணீர் வடித்து உரையாற்றிய ஒரு கட்சியின் தலைவரும் இந்தக் கூட்டமைப்பில் இணைந்துள்ளார்.

அதேபோல் மற்றுமொரு பழைய கட்சியான ஜே.வி.பியும் தனது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றிப் பேசி வருகின்றன.

சர்வதேசமும் இந்த எதிர்க்கட்சிகளும் இந்த நாட்டுக்கு எதிராக விரிக்கும் சதிவலையில் ஜெனரல் சரத் பொன்சேகா பொது வேட்பாளராகச் சிக்கமாட்டார் என்று நாம் நம்புகிறோம்.

இந்தக் கட்சிகள் வேட்பாளர் ஒருவர் இல்லாமல் கஷ்டப்படுவதுபோல் நாம் கஷ்டப்படவில்லை. எம்மிடம் மக்கள் பலம் கொண்ட வேட்பாளராக ஜனாதிபதி மஹிந்த உள்ளார். எந்தக் கூட்டமைப்பாலும் அவரைத் தோற்கடிக்க முடியாது - என்றார்.

## இடம்பெயர்ந்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் விடயங்களில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் பொது உடன்பாடு ஒன்றின் கீழ் ஒன்றுபட்டுச்செயற்படுவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களைக் கோருதல் மற்றும் அரசியல் கைதிகள், சரண் அடைந்த போராளிகள் ஆகியோருக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு அரசைக் கோருவது தொடர்பாகவும் பொது இணக்கப்பாட்டுக்கு அறிக்கை யைத் தயாரிப்பது குறித்து நேற்று விவாதிக்கப்பட்டது என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தின் இறுதிநாள் இன்றாகும். (அ-1)

## உலக சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி, மாத்தறை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பன்றிக் காய்ச்சல் நோயால் மரணங்கள் சம்பவித்துள்ளன.

இந்நிலையிலேயே பன்றிக்காய்ச்சல் நோய்த் தடுப்பூசி மருந்துகளை இலங்கைக்குத் தந்துதவுமாறு சுகாதார அமைச்சு உலக சுகாதார ஸ்தாபனத்துடன் பேச்சுகளை நடத்தி வருகின்றது.

ஆயினும், இத்தடுப்பூசி மருந்துகள் பன்றிக்காய்ச்சல் நோயால் மிகவும் கடுமையாகப் பீடிக்கப்பட்டிருப்பவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் என்றும், குறிப்பாகக் கர்ப்பிணித்தாய்மார்கள், இதயம், நுரையீரல், சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு இம்மருந்துகளை விநியோகிக்க முடியாது என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (அ-சி)

**அனுமதிகள் இன்று முதல்**
**புதிய கல்வியாண்டு 2010**
தரம்:4 முதல் தரம்: 11 வரை கற்கும் புதிதாக இணையும் மாணவர்களுக்கு இன்று முதல் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
அவ்வாறே..
GR:6,7,8 ENGLISH MEDIUM
யாழ் நகரின் தனித்துவ ஆசிரிய குழாம்
உங்கள் பிள்ளை தரம்:4இல் கற்ற படிமுறைகளோடு பல்கலைக் கழகம் செல்ல, ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கல்வியைத் தொடர, உங்கள் கற்பனை நிஜமாக இன்றே உங்கள் பிள்ளையை இணையுங்கள்
**சயன்ஸ் அக்கடமி**
அரியாலை. ⟷ இரு இடங்கள் ⟷ நல்லூர்.
ஸ்ரான்லி கல்லூரி முன்பாக. நல்லூர் கோவில் முன்பாக
எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே!
அமைதியான சூழலில் சீரான நேரஒழுங்கில்

**மங்கலகரமான திறப்புவிழா**
**சுன்னாகத்தில்**
**நெற்**
NET DIGITAL COLOUR LAB
**டிஜிட்டல் கலர் லாப்**
நிகழும் மங்களகரமான விரோதி வருடம் கார்த்திகை மாதம் 5ம் நாள் இன்று (21-11-2009)சனிக்கிழமை பகல் 10.40 முதல் 12 மணிவரையுள்ள மகர லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட நிறுவனத்தை மங்களகரமாக ஆரம்பிக்கவுள்ளோம் அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
எமது சேவைகள்
❋ மங்களகரமான நிகழ்வுகளை வீடியோ, புகைப்படம் எடுத்திடவும்
❋ டிஜிட்டல் பிரிண்டிங்,
❋ அல்பம் தயாரித்தல்,
❋ டிசைன் செய்தல்,
❋ டியுறோ பிறேம் தயாரித்தல்,
❋ உங்கள் புகைப்படங்களை 10 நிமிடத்தில் எடுத்துப்பெற்றுக்கொள்ளலாம் இவை அனைத்திற்கும் நாடவேண்டிய ஒரே இடம் நெற் டிஜிட்டல் கலர் லாப்



ராஜா கொம்லேக்ஸ் இல. 81/B, k.k.s. வீதி, சுன்னாகம். தொ.இல. 0213205680
E.Mail - netdigitallab@yahoo.com

**LAVA HOSPITAL**
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
**Obesity package - 1200/=**
(சி/562626)

**SM CONSULTANT SERVICE**
148, Temple Road, Jaffna.( யுனிசெவ் முன்பாக)
யாழ். மாணவர்களிற்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன்மதிப்பை பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்!!!
✲ ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான பிரவேசத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
✲ விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்புகொண்டு,தேவையான விவரங்களைச் சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!!!
✲ சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!
✲ தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக்கொள்ளலாம்.
**STUDY IN EUROPE - MBBS/ MD**
"LAGANSK STATE MEDICAL UNIVERSITY "(UKRAINE -EAST EUROPE] இல் இணைந்து சிறிலங்கா **MEDICAL COUNCIL** லினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வரவிரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: 021 222 3818, 0774528818
E.MAIL: MG1404_2009 @YAHOO.COM
இல: 148 கோயில் வீதி யாழ்ப்பாணம். (யுனிசெவ் முன்பாக)
(சி/562627)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org